# கலைக்கேசரி

KALAIKESARI

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 03 ISSUE : 07 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 127 / News / 2012



பண்டைய பொலன்னறுவையான 'ஜனநாதமங்கலம்'


ஹஜுராஹோவின் கலைச் சிறப்புகள்

www.kalaikesari.com / JULY 2012

ISSN 2012-6824


| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951-2011
60 Glittering Years
Pure / Timeless



Lalitha
fine jewellery since 1951

105, Sea Street, Colombo 11. T: +94 11 232 3691 / 247 0682 F: +94 11 243 6343
442, RA De Mel Mawatha, Kollupitiya, Colombo 03. T: +94 11 257 7451 / 2 F: +94 11 257 7454

info@lalithajewellers.lk | www.lalithajewellers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படம் :

அயுத்தயா நகரத்தில் உள்ள
சாய்வத்தனராம் ஆலயத்தின் கோபுரம்

## உள்ளடக்கம்


14 ஆடி அமாவாசையும் காத்தோட்டிக்காயும்

16 செம்பாட்டு மண்ணின் பண்பாட்டு வேர் 'மஹாஜனா'


26 கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மை


30 செல்வ வளம் நல்கும் சுக்கிர பகவான்

58 தமிழியலாய்வும் பேராசிரியர் செல்வநாயகமும்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்



## 'ஆசிரிய சமூகத்தின் பெரும் பொறுப்பு'

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்.

இவ்விதழிலும் அறிஞர்கள் பலரினதும் ஆழமான, ஆய்வுரீதியான கட்டுரைகள் பல மலர்ந்து உங்கள் சிந்தனைக்கு விருந்தளிக்க காத்திருக்கின்றன.


ஓர் இனத்தின் பெருமை அதன் கலை, கலாசாரம், பண்பாடு, மொழி ஆகியவற்றில் தான் தங்கி நிற்கின்றது. அவை சீரழிவுக்குள்ளாகும் போது, அந்த இனமும் தனது தனித்துவத்தினை இழக்கின்றது. இன்று தமிழ்ச் சூழலில் ஏற்பட்டு வருகின்ற கலாசார, பண்பாட்டுச் சீரழிவுகள், சமூக அக்கறை கொண்ட பெரியார்களிடையே விசனத்தை ஏற்படுத்தி வருவது கண்கூடு. இதற்குக் காரணங்கள் பல இருக்கக்கூடுமாயினும் அந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியது நமது சமூகத்தின் கடமையாகும்.

இவ்வாறான ஒரு நிலையில் எமது கலாசாரத்தைப் பேணி அதனை முன்னேற்றுவதற்கான பொறுப்பை ஆசிரியர்கள் எடுக்க வேண்டும் என்று யாழ். தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி அவர்கள் அண்மையில் கூறியது ஊன்றி சிந்திக்கற் பாலது.

'இன்றைய மாணவர்களே நாளைய நம் நாட்டு பிரஜைகள்'. அவர்களை சீரிய வழியில் நமது பண்பாடு கலாசாரத்திற்கு ஏற்ப வழி நடத்தும் பெரும் பொறுப்பு பெற்றோர்களை அடுத்து ஆசிரியர்கள் கைகளில் தான் தங்கி நிற்கின்றது. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கிணங்க இளமையில் வழங்கும் சீரிய அறிவுரைகள் மாணவர் சமுதாயத்தை நல் வழிப்படுத்தி தமது இனத்தின் தனித்துவத்தைப் பேண உதவும் என்பதை மறுக்க முடியாது. எனவே இவ்விடயத்திலும் ஆசிரியர்களது பொறுப்பான வழி நடத்தலை சமூகம் பெரிதும் வேண்டியே நிற்கிறது.

நன்றி

வணக்கம்.



**July, 2012**


**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 7767700
www.kalaikesari.com

**EDITOR**
**Annalaksmy Rajadurai**
luxmi.rajadurai@yahoo.com

**SUB EDITOR**
**Bastiampillai Johnsan**
johnsan50@gmail.com

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. S. Pathmanathan
Prof. S. Sivalingaraja
Prof. P. Pushparatnam
Prof. Saba Jeyarasa
Dr. Viviyan Sathyaseelan
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
K. Thangeswary
Mrs. Shamila Ranjithkumar
Ms. Subashini Pathmanathan

**PHOTOS**
S. Sujeewakumar
J. H. Mirunalan
Dushiyanthini K.

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
A. Praveen
marketing@virakesari.lk

**CIRCULATION**
K. Dilip Kumar

**SUBSCRIPTIONS**
Sathya Suresh
subscription@kalaikesari.lk

**PRODUCTION**
L. A. D. Joseph

ISSN 2012 - 6824



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணப் பண்பாடு:

# மறந்தவையும் மறைந்தவையும்

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குழந்தை பிறந்த முப்பத்தோராவது நாள் உறவினர் நண்பர்களுக்கு விருந்து அளித்தலும் மிகவும் முக்கியமானதாகும். 'துடக்குக்கழிவு' நிகழ்ந்ததன் பின்னரே உறவினர்கள் உணவு உண்ணுவர். முப்பத்தொன்றுக்கு முன்னர் குழந்தை பிறந்த வீட்டில் உணவருந்தினால் கோயிலுக்கு உள்ளே போகக் கூடாது என்ற எழுதாத விதியும் இருந்தது.

முப்பத்தோராம் நாள் விருந்து மாமிசம், மரக்கறி என இரு வகையாக அமையும். யாழ்ப்பாணத்துச் சைவ மறுமலர்ச்சிக்கு முன்னர் பெரும்பாலான மக்கள் மாமிச விருந்தையே செய்து வந்தனர். ஆட்டுக் கறி, கோழிக்கறி, மீன்கறி முதலான மாமிசக் கறி வகைகளே பிரதானமானவையாக இருக்கும். இவற்றிலே குழம்பு, பொரியல், அவியல், தீயல், வறை (சுறா வறை) முதலான முறைகளிலே சமையல் செய்து பரிமாறப்படும்.

யாழ்பாணத்துக் கிராமங்களிலே மிக அண்மைக் காலம் வரை முப்பத்தோராம் நாள் விருந்தில் கள்ளு, சாராயம், பிரண்டி முதலானவை பரிமாறப்படுவது பெருவழக்காகும். (இன்றும் சிறுபான்மையாக வழங்கி வருகின்றது.) உறவினர்கள், நண்பர்கள் உற்சாகமாகக் குழந்தையையும் குழந்தையின் தாய் - தகப்பனையும் வாழ்த்துவர். ஒரு வகையிலே 'முப்பத்தோராம் நாள் சடங்கு' குடும்ப ஒன்று கூடலாகவும் அமையும்.

உறவினர்கள் குழந்தைக்கு அன்பளிப்புக்களை வழங்குவது மிகவும் முக்கியமானதாக இருந்தது. பெரும்பாலும் பொன்னாபரணங்களையே வசதியுள்ள உறவினர் வழங்குவர்.

முப்பத்தோராம் நாள் குழந்தைக்கு அணியும் ஆபரணங்களிலே 'பஞ்சாயுதமும் சங்கிலியும்' மிக முக்கியமானது. பஞ்சாயுதம் என்பது ஐந்து வகையான ஆயுதங்களைக் குறிக்கும். வில், அம்பு, ஈட்டி, வாள், சூலம் முதலான ஐந்து ஆயுதங்களைப் பொன்னிலே செய்து சங்கிலியிலே கோர்த்துக் கட்டுவர். இப்பொழுதும் இந்த வழக்கம் உண்டு. வசதி குறைந்தவர்கள் பஞ்சாயுதத்தைக் கறுத்தக் கயிற்றிலே கோர்த்துக் கழுத்திலே கட்டுவர். குழந்தைகளுக்கு 'ஐம்படைத்தாலி' அணியும் வழக்கம் தமிழ் மக்களின் பண்பாட்டிலே நீண்ட காலமாக நிலவி வந் துள்ளமையைத் தமிழ் இலக்கியங்களினூடு அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்துக்கு 'ஐம்படைத்தாலி' அணிவதோடு காலுக்கு 'ஐம்பொன்னாலான' வளையம் ஒன்றும் (சிலம்பு போல) அணியப்படும். கறுப்பு, வெள்ளை சங்கு மணிகளைக் கோர்த்து அரையிலும், கைகளிலும் கட்டுவர். முப்பத்தொன்றுக்கு முன்னரே (பதினோராம் நாளில்) சங்கு மணிகளை கட்டும் வழக்கம் சில கிராமங்களிலே உண்டு. குழந்தை பிறந்து பதினோராம் நாள் கடுக்காய் துண்டொன்றினை நூலிலே கட்டிக் கையிலே கட்டிவிடும் வழக்கம் நீண்ட காலமாகவே நிலவி வந்தது.

குழந்தைகளுக்கு 'அட்சரக்கூடு' செய்து அரையிலே கட்டும் வழக்கமும் இருந்தது. இன்றும் சில இடங்களில் இருக்கிறது. இந்த அட்சரக்கூட்டினுள் பனை ஓலை அல்லது 'தளப்பத்து ஓலையில்' மந்திரமெழுதி கிராமத்துப் பூசாரி (அல்லது பூசகர்) உள்ளே வைத்து மூடிக் கொடுப்பார். அதனையும் முப்பத்தோராம் நாளிலே பிள்ளையின் அரையில் கட்டுவர். இன்று இந்த வழக்கம் சற்று வித்தியாசமாகப் பேணப்படுகின்றது. குழந்தை தொப்புள் கொடி காய்ந்து விழுந்ததும் அதனை எடுத்து அட்சரக்கூட்டினுள் வைத்துக் கட்டுகின்றனர். அட்சரக்கூடு (தாயத்து) கோயில்களில் வாங்கி வந்து கட்டி விடுவதும் உண்டு.

குழந்தையின் அரையில் பொன், வெள்ளி 'அரைஞாண்' இல்லாவிட்டாலும் கட்டாயமாக கறுத்தக் கயிறு கட்ட வேண்டும் என்ற நம்பிக்கை இன்றும் உண்டு.

இந்த வகையான அணிகலன்களை அணிவதன் பிரதான நோக்கம் பிள்ளைக்குக் கண்ணூறு படாமல் இருப்பதோடு, துட்ட தேவதைகளினதும், கெட்ட ஆவிகளினதும் பார்வை படாமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். இந்த நம்பிக்கை இன்றும் சிறிதளவுக்கு உண்டு.

அசுத்த ஆவிகள் குழந்தைகளைத் தீண்டப்போய் தீண்டாமல் திரும்பி வரும் பொழுது 'கடுக்காய் கிடந்தது திடுக்கிட்டுப்போனன்' என்று கூறியபடி செல்லும் என்று மூதாட்டி ஒருவர் கூறினார். ஆண் குழந்தையாயினும் சரி பெண் குழந்தையாயினும் சரி பெரும்பாலும் மேலே சுட்டிய அணிகலன்கள் அணியப்படுவது வழக்கமாகும்.

பெண் பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி ஆண் குழந்தைகளுக்கும் காது குத்தும் வழக்கம் இருந்தது. இது இப்போது மறைந்து விட்டது. ஆண் குழந்தைக்கு 'அரிட்டம்' (தத்து) மரண பயம் உண்டென்று சோதிடர் கூறினால் ஆண் பிள்ளையின் ஒரு காதிலே குத்திப் 'பொன்னூசி' போடும் வழக்கமும் இருந்தது. இன்றும் சிறுபான்மையாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளைஞர்கள் ஒரு காதில் தோடு போடுவதன் நதி மூலம் ரிஷி மூலமாக அதனைக் கொள்ளலாம் போலத் தெரிகின்றது.

பெண் குழந்தைகள் எழுந்து நடக்கத் தொடங்கியதும் வெள்ளியினாலான அரைமூடி சலங்கை அணிவது வழக்கமாகும். 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமார் தமது நாட் குறிப்புகளிலே பெண் பிள்ளைகள் அணியும் அரைமூடி சலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும் இந்த இடத்திலே நினைவு கூரத்தக்கது.

துடக்குகழியும் முப்பத்தொன்றன்று பிள்ளைக்குப் பெயர் வைக்கும் வழக்கம் முன்னர் இருந்தது. இவ்வழக்கம் தற்போது முற்றாக மறைந்து விட்டது. இப்போது வைத்தியசாலையிலே குழந்தை பிறப்பதனாலே பெயர் பதிவு முப்பத்தொன்றுக்கு முன்னரே நடைபெற்று விடும். ஆனால் பழைய மரபில் தொடர்ச்சியாக முப்பத்தொன்றன்று குழந்தையைத் தொட்டிலிலே போட்டுத் தாய் மாமன் ஏற்கனவே பதியப்பட்ட பெயரை மூன்று தடவை பிள்ளையின் காதிலே கூறுவார். இன்றும் சிறுபான்மையாக இவ்வழக்கம் நிலவி வருகின்றது. முப்பத்தொன்றுக்கு வந்திருந்த உறவினர்கள் பிள்ளையின் பெயரைச் சொல்லிச் சொல்லிச் தொட்டிலை ஆட்டுவர்.


குழந்தை பிறந்து பதினொன்று, இருபத்தொன்று, முப்பத்தொன்று என நடைபெறும் சடங்குகளிலே நாற்பத்தோராம் நாள் (இதனை நாற்பத்தொன்று என்பர்) குழந்தையை தமது குல தெய்வமாய் அமைந்த தெய்வத்தின் சந்நிதிக்குக் கொண்டு செல்வர். கோயிலுக்குப் போகும் போது தாயும் - சேயும் முழுகிப் புத்தாடை புனைந்தே செல்வர். கோயிலிலே விசேட பூசை வழிபாட்டுக்கு ஒழுங்கு செய்வர். சிறு தெய்வக் கோயிலைக் குல தெய்வமாகக் கொண்ட குடும்பத்தினர் பொங்கல், மடை, படையல் எனக் கொண்டாடுவர். நெருங்கிய உறவினர்களே பெரும்பாலும் கோயிலுக்குப் போகும் நிகழ்வில் கலந்து கொள்வர். கோயிலுக்குக் குழந்தையை கொண்டு செல்லுதலைக் 'கோயிலுக்கு எடுக்கிறது' என்றே அழைப்பர். இன்று இந்தப்பதப் பிரயோகம் முற்றாக மறைந்து விட்டது.

குழந்தைக்கு 'அரிட்டம்' அல்லது நேர்த்தி வைத்தல், ஒரு தெய்வத்திற்குக் (கோயிலுக்குக் கொண்டு போய்) குழந்தையை விற்று வாங்கும் வழக்காறும் இருந்தது. விற்று வாங்கும் பொழுது 'அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும்' கொடுத்தே விற்று வாங்குவர் (வித்து வாங்குவர்). இந்த வழக்காறு இன்றும் உண்டு. பெரும்பாலும் நயினாதீவு நாக பூசணி அம்மனுக்கோ அல்லது வல்லிபுர ஆழ்வாருக்கோ விற்று வாங்குவர். இன்று புலம்பெயர் தேசத்து மக்களும் யாழ்ப்பாணம் வந்து இந்த நேர்த்திக் கடனைச் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

குழந்தை பிறந்து நாற்பத்தோராம் நாள் 'கோயிலுக்கு கொடுத்த' பின்னர் பெரும்பாலும் சடங்குகள் மிக குறைவாகவே உள்ளன. நாற்பத்தொன்றின் பின்னர் குளிப்பு, முழுக்கு, சாப்பாடு, கிரந்தி எண்ணெய் என குழந்தை வளரும். தாயும் அன்றாட வேலைகளுடன் பாலூட்டிக் குழந்தையை வளர்ப்பார். அக்காலத்தில் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே பிரதான உணவாக இருந்தது. தாய் நன்றாக சத்துள்ள உணவுகளை உண்டு, பிள்ளைக்குப் பாலூட்டுவாள். குழந்தை திடகாத்திரமாக வளரும். இன்று இந்த நடைமுறை மிக மிகக் குறைந்து விட்டது. 'பீரம்பேணிப் பாரம் தாங்கு' என்ற பழமொழியொன்றும் தமிழில் உண்டு என்பதைப் பலர் நினைவு கூறுவதில்லை.

நாற்பத்தொன்றுக்குப் பின்னர் பிள்ளைக்குச் (சோறு தீத்துதல்) சோறு தீற்றுதல் என்ற சடங்கே பிரதானம் பெறுகின்றது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரு நாட்டில் 1400 வருடங்கள் பழைமையான பிரமிட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு மலைக்குன்று என மக்களால் நம்பப்பட்டு வந்த இந்த பிரமிட்டின் மேல் 1100 குடிகள் சுமார் 1200 வருடங்களாக வாழ்ந்து வருகின்றார்கள். ''வண்ண மலை'' என அழைக்கப்பட்டு வந்த இந்த பிரமிட்டின் உட்பகுதியில் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பெரு நாட்டிலுள்ள மோச் இன மக்களால் பயன்படுத்தப்பட்டது எனவும் இங்குள்ள சுவர் சுதை ஓவியங்கள் மற்றும் கல்லறைகளில் இருந்து அறிய முடிகின்றது.




பெண்ணின் எலும்புக்கூடு



மோச் படைவீரர் (கணனி தொழில் நுட்பத்தின் மூலம் 1400 வருடங்களுக்கு முற்பட்ட இயற்கை வர்ணம் சித்திரிக்கப்பட்டுள்ளது.)



அகழ்வாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட செப்பினாலான பொருட்கள்



பிரமிட்டின் உச்சிப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய பொலன்னறுவையான 'ஜனநாதமங்கலம்'

- பேராசிரியர் சி. பத்மநாதன்

இலங்கையின் இராசதானிகளிற் பொலன்னறுவை அளவிற் பெரியது; மிகவும் பிரசித்தமானது. அதன் பிரமாண்டமான கட்டுமானங்களும் பண்பாட்டுச் சின்னங்களும் 12 ஆம் நூற்றாண்டில் உருவானவை. அவை, குறிப்பாக, முதலாம் பராக்கிரமபாகு *(1153-1187)*, நிசங்கமல்லன் ஆகியோரின் காலத்தவை. அக்காலம் இலங்கையின் வரலாற்றில் முடியாட்சியும் அரசும் உன்னத வளர்ச்சியடைந்த காலமாகும்.

அளவிற் பொலன்னறுவை அநுராதபுரத்தைக் காட்டிலும் விசாலமானது. அநுராதபுரத்துத் தொல்பொருட் சின்னங்கள் பெரும்பாலானவை சமயச் சார்புடையவை. பௌத்த சமயம் பற்றியவை. அங்கு அரண்மனையின் அழிபாடுகள் மிகச் சொற்பமானவை. ஆனால் பொலன்னறுவையில் அரண்மனை தொடர்பான கட்டுமானங்களும் கோயில்களும் வேறு சமய சின்னங்களும் காணப்படுகின்றன. அவற்றைத் தெளிவாக வேறுபடுத்தி அடையாளம் காண முடிகின்றது. பொலன்னறுவையின் மேலுமொரு சிறப்பம்சம் அங்கு பௌத்த கோயில்களும் சைவக் கோயில்களும் கணிசமான அளவிலே அமைந்திருந்தமையாகும். அங்குள்ள கட்டிட அழிபாடுகளும் பிற தொல்பொருட் சின்னங்களும் சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களையும் சேர்ந்தவை; அவை இரு சமய நெறிகளையும் சார்ந்தவை.

பொலன்னறுவையில் நிர்வாகம், இராணுவ சேவை வாணிபம், கைத்தொழில் ஆகிய துறைகளிலே தமிழர் சிறப்புற்று இருந்தமையினைச் சாசனங்கள் மூலமாக அறிய முடிகின்றது.

பொலன்னறுவை நகரத்தின் வரலாறு அநுராதபுர காலத்தின் பிற்பகுதியில் ஆரம்பமாகியது. ஆதியில் அது ஒரு படைத்தளமாக உருவாக்கப்பட்டது. *'கந்தவுரு நுவர'* என்பது அதன் பண்டைய பெயர். மகாவம்சம் பொலன்னறுவையினைப் பொதுவாகப் *'புலத்திநகர'* என்று குறிப்பிடுகின்றது. பொலன்னறுவையின் தோற்றத்திற்கும் புலஸ்தியர் என்னும் ரிஷிக்கும் இடையிலே தொடர்புண்டு என்ற நம்பிக்கையாற் 'புலத்திநகரம்' என்ற பெயர் உருவாகியதென்று கருதலாம். பொத்குல் விகாரையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வளாகத்திலே காணப்படும் ஸ்தானகக் கோலமான சிற்பத்தின் அடித்தளத்தில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டிற் 'புலஸ்த்தி' என்ற சொல் காணப்படுகின்றதென்று ஒரு காலத்திலே சேனரத் பரணவிதான கூறினார்.

அநுராதபுர இராசதானியின் பாதுகாப்பினைப் பொறுத்த வரையில் பொலன்னறுவை கேந்திர முக்கியத்துவம் கொண்ட ஒரு பகுதியாகும். உறுகுணையிலிருந்து இராஜரட்டைக்குப் போகும் கரையோரப் பாதை வழியாகச் செல்வோர் தஸ்தோட்ட கடவு வழியாகப் பொலன்னறுவையினை அடையலாம். அந்தக் கடவிலே ஆற்று வழியாகப் பாயும் நீரின் மட்டம் குறைந்திருப்பதால் இலகுவாக ஆற்றினைக் கடந்து செல்ல முடியும். அதனால் உறுகுணையிலிருந்து ஏற்படக் கூடிய படையெடுப்புகளைத் தடுப்பதற்கும் அப்பிராந்தியத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் பொலன்னறுவையிற் படைகளை வைத்திருப்பது அவசியமானதென்று கருதப்பட்டது. ஆரம்பத்திலே படைத்தளமாக அமைந்திருந்த புலத்தி நகரம் காலப்போக்கில் இரண்டாவது இராசதானியாகியது. அங்கு அரச மாளிகை, விகாரை, ஆதுலர்சாலை என்பன அமைக்கப்பட்டன.




பொலன்னறுவை பற்றி மகாவம்சத்தில் காணப்படும் முதலாவது குறிப்பு மூன்றாம் அக்கபோதியின் காலம் (கி.பி.628) தொடர்பானது. அவன் மஹாபான தீப என்னும் விகாரையை அங்கு அமைத்தான்.[2] நான்காம் அக்கபோதி (667 - 683), ஏழாம் அக்கபோதி (772 - 777) ஆகியோர் தங்கள் ஆட்சிக் காலத்தின் முடிவிலே அங்கு வாழ்ந்தனர்.[3] எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் மகிந்தன் (777-797) த$_3$ாமவிகாரை, சன்னீரதித்தி விகாரை என்பவற்றை அமைப்பித்தான்.[4] முதலாம் உதயன் (797 - 801) சேனாதிபதியும் யுவராசனும் ஏற்படுத்திய கலகங்களை அடக்கிவிட்டு அநுராதபுரத்திலிருந்து வெளியேறிப் பொலன்னறுவையில் வாழ்ந்தான். அங்கவீனர், குருடர், பிணியோர் ஆகியோரைப் பராமரிப்பதற்கு அரசன் அங்கு அறச்சாலைகளை நிர்மாணித்தான்.[5]



முதலாம் சேனன் (833 - 853) காலத்து நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் மகாவம்சம் பொலன்னறுவை பற்றிக் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்து அரண்மனையிலுள்ள இளவரசனொருவன் அரசனின் பொறுப்பிலிருந்த இளவரசி ஒருத்தியைக் கைப்பற்றிக் கொண்டு பொலன்னறுவைக்கு ஓடி விட்டான்.[6] உதயன் என்ற பெயருடைய அந்த இளவரசனுக்கும் அரசனுக்கும் இடையிலே, பின்பு ஒருவாறு இணக்கம் ஏற்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உபஸக்$_3$க$_3$ என்னும் கொள்ளை நோயினாற் பீடிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பதற்கு, நான்காம் கஸப்பன் (898-914) அநுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் ஆதுலர் சாலைகளை நிர்மாணித்தான்.[7]


படைத்தளமாகவிருந்த பொலன்னறுவை ஏழாம் நூற்றாண்டு முதலாகப் படிப்படியாக வளர்ச்சிபெற்று, ஒரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெரு நகரமாகியது. அது இரண்டாம் இராசதானி என்ற நிலையை அடைந்து விட்டது. அங்கு கணிசமான அளவிற் குடிசனப் பெருக்கம் ஏற்பட்டது. அதனால் விகாரங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றை அரசர்கள் உருவாக்கினார்கள். அவற்றின் கட்டிடங்கள் யாவும் எதுவிதமான சுவடுகளுமின்றி தற்போது மறைந்து விட்டன.

## ஜனநாதபுரம்

பத்தாம் நூற்றாண்டின் முடிவில் அநுராதபுர இராச்சியம் சீர்குலைந்தது. இராசதானியில் ஏற்பட்ட படைக்கலகம் ஒன்றின் விளைவாக ஐந்தாம் மகிந்தன் (992 - 1028) அங்கிருந்து வெளியேறி உறுகுணைக்கு ஓடிவிட்டான்.[8] இராச்சியத்தின் பல பகுதிகளில் படைத்தலைவர்கள் தாம் விரும்பியவாறு ஆட்சி புரிந்தனர்.[9] இலங்கையின் அரசியல் நிலைவரங்களை அவதானித்த சோழர் அங்கு படையெடுத்துச் சென்று, அதன் பெரும் பகுதியைக் கைப் பற்றினார்கள். அவ்வாறு கைப்பற்றிய பகுதிகளை ஈழமான மும்மடிச்சோழ மண்டலம் என்னும் பெரும் நிர்வாகப் பிரிவாக அமைத்தனர்.

பொலன்னறுவை, இலங்கையில் சோழர் ஏற்படுத்திய இராச்சியத்தின் தலைநகராகியது. இதனை மகாவம்சத்திற் காணப்படும் மேல்வரும் குறிப்புகள் உறுதி செய்கின்றன:

'புலத்தி நகரைத் தளமாகக் கொண்டு, றக்கபாசான என்னும் இடம் வரை, ராஜரட்டையிற் சோழர் அதிகாரஞ் செலுத்தினார்கள்'[10]

'இக்காலகட்டத்தில் கேசதாது குலத்தவர் பிரதானிகளில் ஒருவனாகிய கஸப்ப(ன்), எழுச்சி பெற்று உறுகுணையில் ஆட்சிபுரிந்தான். இதனைப் பற்றிக் கேட்டதும் சோழரின் சேனாதிபதி புலத்தி நகரிலிருந்து வெளிப்பட்டுக் கதிர்காமத்திற்குப் படையெடுத்துச் சென்றான்.'[11]

'அறிவு நிரம்பிய இளவரசன், முரசறைந்து ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டு, தனது ஆதரவாளர் பலருக்கு அவரவர் தகைமைக்கேற்பப் பதவிகளை வழங்கினான். ராஜரட்டையிலே சேதங்கள் பல விளைவித்த சோழரை அழிப்பதற்கென்று நாற்படையினரையும் ஆயத்தமாக்கிய வண்ணம் உறுகுணையிலே தங்கியிருந்தான். இவற்றை அறிந்த சோழ மன்னன் புலத்தி நகரிலிருந்த சேனாதிபதியைப் படை, பரிவாரங்களோடு (அவனுக்கெதிராக) அனுப்பினான்.'[12] இலங்கையில் சோழரின் பிரதானமான படைத்தளமாகவும் நிர்வாக நிலையமாகவும் பொலன்னறுவை விளங்கியது என்பதை *மகாவம்சம்* மூலமாக அறியமுடிகின்றது. சோழர் அதனை ஜனநாதமங்கலம், ஜனநாதபுரம் என்னும் பெயர்களாற் குறிப்பிட்டனர்.[13]

சோழர் ஆட்சியில் பொலன்னறுவை ஒரு பிரதான வர்த்தக தளம் என்ற பரிமாணத்தையும் பெற்றது. அந்த நிலை சோழருக்கும் ஐந்நூற்றுவர் என்னும் வணிக கணத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினால் ஏற்பட்டது. ஐந்நூற்றுவரின் படைகளிலே சேவகம் புரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைக்காறர் முதலானோர் சோழரின் படைகளில் இணைந்திருந்தனர் என்று கொள்ள முடிகிறது. மகா வம்சத்திலுள்ள குறிப்பொன்றும் இலங்கையிலுள்ள இரு சாசனங்களைப் பற்றிய ஆய்வுகளால் ஏற்பட்ட புத்துணர்வும் இதற்கு ஆதாரமாகின்றன.

சோழரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு ஏதுவான சூழ் நிலையினையும் மகாவம்சம் மேல்வருமாறு விளக்குகின்றது:

"அக்கரையில் இருந்து இங்கு வந்த குதிரை வணிகன் ஒருவன் திரும்பிச் சென்றதும் இலங்கையிலுள்ள அரசியல் நிலைகளைப் பற்றிச் சோழ மன்னருக்குச் சொன்னான். பெருவலி படைத்த அம்மன்னன் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு ஒரு பெரும் படையை அனுப்பினான். அது விரைவில் இலங்கையை அடைந்தது."[14]

இலங்கையில் வியாபாரஞ் செய்த வணிகனுக்கும் சோழ மன்னனுக்கும் இடையிலே ஒரு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது மகாவம்சத்தின் குறிப்பினால் உணரப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பான வேறு விபரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து இக்குறிப்பு சோழரின் ஆதிக்கப் படர்ச்சி பற்றிய ஒரு பிரதானமான அம்சத்தைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாகின்றது.

பதினொராம் நூற்றாண்டிலே, சோழராட்சியில் ஐந்நூற்றுவர் பொலன்னறுவையில் வியாபாரத் தலங்களை அமைத்து அதனை ஒரு வணிக நகரமாக விருத்தி செய்தனர் என்று கருத முடிகின்றது. அக்காலத் தமிழ்ச் சாசனங்கள் பொலன்னறுவையினை ஜனநாதமங்கலம் என்றும் ஜனநாதபுரம் என்றும் குறிப்பிடுகின்றன.[15] ஜனநாதன் என்பது முதலாம் இராசஇராசனது சிறப்புப் பெயர்களிலொன்று. ஜனநாதன் என்ற பெயர்ச் சொல்லுடன் மங்கலம், புரம் என்ற சொற்களிலொன்றை இணைத்துக் கொள்வதால் இப்பெயர்களில் ஒவ்வொன்றும் உருவாகியது. மங்கலம் என்பதைப் பின்னொட்டாகக் கொண்ட இடப் பெயர்கள் பல தென்னிந்தியாவில் உருவாகியிருந்தன. பிரம்ம தேயங்களைச் 'சதுர்வேதி மங்கலம்' என்று குறிப்பிடுவது வழமை. ஆயினும், 'ஜனநாதமங்கலம்' என்ற பெயரை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பொலன்னறுவை ஒரு காலத்தில் பிரம்மதேயமாக அமைக்கப்பட்டதென்று கொள்வது பொருத்தமற்றது. அதனைப் பிரமதேயமென்று வர்ணிக்கும் குறிப்பெதுவும் இல்லை. அங்குள்ள பிராமணர் குடியிருப்புகள் பற்றியும் மகாவம்சத்திலோ, சாசனங்களிலோ சொல்லப்படவில்லை. பிரம்ம தேயங்கள் அல்லாத ஊர்களையும் மங்கலம் என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு. 'கலையமங்கலம்' என்பது அத்தகைய ஊர்களிலொன்று. அது சேதிகுல மாணிக்கபுரம் என்னும் வணிக நகரத்தின் மற்றொரு பெயர்[16] வாணிபத்தொடும் வணிகரோடும் தொடர்புடையது என்று கொள்வது பொருத்தமானது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடி அமாவாசையும் காத்தோட்டிக்காயும்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India

காடுகளிலுள்ள காணி, ஐயனார், கீரன் போன்ற தெய்வங்களின் திறந்த வெளிக் கோவில்களில் காத்தோடி மரத்தை வளர்த்து ஸ்தல விருட்சமாக சில கிராம புற மக்கள் கொண்டாடி வருகின்றனர். மக்கள் காணிக்கை செலுத்தி இதன் வேர், பட்டை, கிளைகளை பிரசாதமாகப் பெற்று மருந்தாக உண்டு வருவதை பல இடங்களில் இன்றும் காணலாம். ஒவ்வொரு அமாவாசை தோறும் பக்குவம் செய்யப்பட்ட இதன் காயை கட்டாயமாக உண்ண வேண்டும் என்ற ஒரு விதி உண்டு.

ஆனால் பெரும்பாலான மக்கள் ஆடி அமாவாசையன்று காத்தோட்டிக் காயைக் கட்டாயமாக சமைத்துண்டு வருவதை இன்றும் காணலாம். எனவே இக் காத்தோட்டியின் மருத்துவக் குணங்களையும் பூரணமான அறிந்திருத்தல் அவசியமாகும்.

ஆனி, ஆடி மாதங்களான முது வேனிற் காலத்தில் வாதம் சம்பந்தமான நோய்கள் கூடுதலாக காணப்படும். எனவே இக்காலத்தில் பூமியில் வெப்பம் அதிகமாக காணப்படுவதாலும் நீர் வடிவ உணவுகள் ஏற்றது. வெப்ப காலம் முடிவுற ஆவணி மாதத்திலிருந்து மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ளதால் சூழலில் ஏற்படும் மாறுபாடுகளுக்கு அமைய எமது உடலையும் தயார்ப்படுத்துதல் அவசியமாகும்.

அந்த வகையில் இம் மருத்துவத்தின் படி புழுக்கொல்லி, (Vermifuge) பேதி போன்ற சிகிச்சைகளை தேக வன்மைக்கேற்ப வைத்திய ஆலோசனையுடன் மேற் கொள்ள வேண்டும். இதற்கேற்ப காத்தோட்டிக்கு குடலிலுள்ள புழுக்களை கொல்லும் தன்மையும் உண்டு.

இயற்கையின் கருணையால் எல்லா காலத்திற்கும் ஏற்ற உணவு பொருட்கள் எமது உடலுக்கு தேவையோ, அவைகள் அவ்வவ் காலத்திலேயேயாண்டும் விளைகின்றன.

உதாரணமாக ஆனி, ஆடி மாதங்களில் வெப்பம் தணிக்க குளிர் நிழலும், பொழிலிடமும், மெல்லிய பூங்காற்றும், பனி மலரும், நறுங்கனியும், தீஞ்சுவைத் தண்ணீரும், குளிர் இளநீரும், நொங்கும், பதநீரும் அருளுகின்றாள் இயற்கை அன்னை.

காத்தோட்டியானது மரங்களின் மேல் தானாக வெகு தூரம் வரை கொடியோடிப் படரும். பல பத்து வருடங்கள் வரை உயிர் வாழும். ஏராளமான கிளைக் கொடிகளுமுண்டு. இலை அதிகமுள்ள நுனிக் கொடிகள் கீழ் நோக்கிச் சரம் சரமாக தொங்கும்.

கொடியில் தாழையின் முட்போன்ற பெரிய தொரட்டு முட்கள் அதிகம். கொடியின் ஒவ்வொரு கணுவிலும் ஒரு இலையும், அதை ஒட்டி பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்களும் உண்டு. இலையின் அடி, நுனி இரண்டும் கூர் மையாக இருக்கும். காம்பு மிகச் சிறியது.

கபில நிறமுடைய சிறிய பூ மொட்டுக்கள் தை முதல் சித்தரை மாதம் வரை பூக்கும். பசுமை நிறமுள்ள இதன் காய் உள்ளே அதிகமான விதைகளைக் பெற்றிருக்கும். ஆனால் காயின் தசை மிருதுவானதும், வெண்மை நிறமு டையதும் ஆகும்.

❋ காத்தோட்டி காயைச் சமைத்தும், வற்றலாக்கியும் உணவுடன் சேர்த்து உண்டால் இருமல், ஆஸ்த்மா, வாத நோய்கள் தீரும்.

❋ காத்தோட்டி கொடியின் வேரை எண்ணெயில் இட்டுக் காய்ச்சி தலை முழுகி வர மூக்கடைப்பு, தொண்டைக் கட்டு, மண்டைக் குடைச்சல் தீரும்.

❋ இலைகளை நன்றாக கழுவிச் சுத்தம் செய்து குடிநீரிட்டு குழந்தைகளுக்கு கொடுத்தால் அவர்களுக்கு ஏற்படும் மாந்தம், இருமல், வாந்தி முதலியன தீரும்.

❋ காத்தோட்டி வேரைக் கழுவிச் சுத்தம் செய்து நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்தும், வேரை நசுக்கி தண்ணீர் விட்டுக் கொதிக்கச் செய்து சுண்ட வைத்து கஷாய முறையாகச் செய்தும் அருந்த இரைப்பை சம்பந் தமான நோய்கள் தணியும்.

❋ காத்தோட்டி வேர்ப்பட்டை 40 கிராம் இடித்து, 700 மில்லி லீற்றர் நீரிலிட்டு காய்ச்சி 1/8 பங்காக குறுக்கி வடிகட்டி, மூன்று பங்காக்கி நாளொன்றுக்கு மூன்று முறையாக உட்கொள்ள பசியின்மை, வயிற்றுப் பொருமல், சளி இருமல் ஆகியன குணமாகும்.

❋ காத்தோட்டி இலைச் சாற்றை நல்லெண்ணெய் அல்லது வேப்பெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி சாறு சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு மூட்டுக்களில் ஏற்படும் நோவுக்கு பூசலாம்.

❋ காத்தோட்டி வேர்களை சேகரித்து சிறு துண்டுகளாக நறுக்கி, 35 கிராம் அளவு எடுத்து நன்றாக அரைத்து 400 மில்லி லீற்றர் இலுப்பெண்ணெயில் சேர்த்து காய்ச்சி மெழுகுப் பதத்தில் இறக்கி ஆறவிட்டு வடித்து வாத நோய்களுக்கும், மூட்டுகளில் ஏற்படும் வலி போன்றவற்றுக்கும் பூசலாம்.

❋ மண்டைக் குடைச்சல், தலைப்பாரம், பீனிசம் போன்ற நோய் உள்ளவர்கள் தலைக்குப் பூச பயன்படுத்தும் எண்ணெயில் காத்தோட்டி கிளைகளை அல்லது வேரை சேர்த்துக் காய்ச்சி உபயோகிக்கலாம். இதனால் மேற்படி நோய்கள் தணியும்.

❋ காத்தோட்டிக் காயை அப்படியே காய வைத்து வற்றலாக்குவதை விட மோரில் ஊறப்போட்டு உலர்த்தி எடுக்க வேண்டும். சற்று உலர்ந்த பின் மறு படியும் மோரில் ஊற வைத்து உலர்த்த வேண்டும். இவ்வாறு குறைந்தது மூன்று தடவையாவது செய்வது நல்லது.

❋ காத்தோட்டிக்காய் வற்றலை சிறியோர் முதல் பெரியோர்கள் வரை எந்த வயதினரும் உபயோகிக்கலாம். நெய் அல்லது நல் லெண்ணெயில் காத்தோட்டிக் காயை வறுத்து இரவு சாப்பாட்டின் போது உபயோகிப்பது சிறந்தது. இதனால் ஆஸ்மா, மார்புச்சளி, குடற்புழுக்கள் ஆகியன தீரும். எனவே காத்தோட்டிக் காய் கிடைக்கக் கூடிய ஆடி, ஆவணி மாதங்களில் அவற்றைச் சேகரித்து வற்றலாக பதப்படுத்தி வைத்துக் கொண்டால் அவ்வப்போது உபயோகித்துக் கொள்ளலாம்.

❋ காத்தோட்டிக்காய் வற்றலோடு, நெல்லிக்காய் வற்றல், வெந்தயம், ஓமம், சுக்கு, சீரகம், காய்ந்த கறிவேப்பிலை ஆகியவற்றை ஒரே எடையாக எடுத்து சிறிதளவு நெய்யில் பொன் வறுவலாக வறுத்து, இடித்து சூரணம் செய்து காலை மாலை இரு விரலளவு வீதம் வாயிலிட்டு வெந்நீர் குடித்து வர காச நோய், மார்புச்சளி, பசியின்மை தணியும்.

காத்தோட்டியினை (Botanical Name – Capparis Zeylanica, Family – Cappari daceae) ஆதண்டம் என்றும் குறிப்பிடுவார்கள்.

*''மண்டைக் குடைச்சலறும் வாதத்தின் பீநனம்போம்*
*தொண்டைக் கபமுந் தொலையுங்காண்-மிண்டுசெய்யும்*
*வாதக் கடுப்பகலு மாதே! ஆ தொண்டைக்குப்*
*போதப் பலபிணிபோம் போம்.''*

இதனால் குடைச்சல், மண்டைக் குடைச்சல், மூக்கடைப்பு, தொண்டையிற் சேரும் சளி முதலியன நீங்கும்.

*''ஆதொண்டை யின்காய் அஃதுவற்ற லென்ன*
*வேதின வைப்பிணி யினமெலா மகலுமே.''*

ஆதொண்டைக் காயை வற்றலாக்கி உணவுடன் சேர்த்து உண்ணில், கபநோய்க் கூட்டங்கள் யாவும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செம்பாட்டு மண்ணின் பண்பாட்டு வேர்
# மகாஜனா



பாவலர் அருளம்பலம் துரையப்பாபிள்ளை

இலங்கையின் வட பகுதியில் நில வளம், நீர் வளம், கலை வளம், தெய்வீக சிந்தனை, கல்வி வளம், தொழில் வளம் முதலான அனைத்து வளங்களும் நிறைந்துள்ள வலிகாமம் பிரதேசத்திற்கு முக்கிய அடித்தளமாக விளங்குவது மகாஜனாக் கல்லூரி ஆகும். இலங்கையின் கல்வி வளர்ச்சியில் முக்கியமான இடம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு உண்டு. நல்லைநகர் நாவலர் பெருமான் ''சுதேசிகளே! சொந்தப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், சைவப் பண்பாட்டின் கருவூலத்தையும் காப்பாற்றுவதற்குக் கல்லூரிகளை நிறுவுங்கள்'' என இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தன் கருத்தை முன் வைத்தார்.

அக்காலங்களில் நாவலர் பெருமானின் வாக்கைத் தெய்வவாக்காகக் கொண்ட சைவப் பெரியார் பலரும் பாடசாலைகளை ஸ்தாபிக்க தலைப்பட்டனர். பாவலர் அருளம்பலம் துரையப்பாபிள்ளை அவர்கள் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தெல்லிப்பழைக் கிராமத்தில் பனஞ்சோலைகள் நிறைந்த இடத்தில் வியத்தகு மகாஜனா பாடசாலையை 1910 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 14 ஆம் திகதி தோற்றுவித்தார். இவர் ஒரு பாவலர்; புலமையாளர்; கல்விமான்; தேசப்பற்றாளர். இம்மாநிலம் பயனுற்று, மண்ணுலகம் மாண்பு பெற வாழும் வாழ்வே உண்மையான வாழ்வு என உலகுக்கு உணர்த்தியவர்தான் பாவலர். அவரது உயர்ந்த சிந்தனைகளாலும், நோக்கங்களாலும் உருவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மஹாஜனா' என்னும் விருட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு படிக்கட்டைக் கடந்து, நூற்றாண்டைக் கடந்து, பாவலரின் கனவை நிஜமாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

1910 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷன் பாடசாலையுடனான தொடர்பை முறித்த பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தனது வீட்டில் மகாஜனா பள்ளிக்குக் கால்கோள் எடுத்தார். அதேகாலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளான கொக்குவில் இந்துப் பாடசாலை, மானிப்பாய் இந்துப் பாடசாலை போன்று தெல்லிப்பழை இந்துப் பாடசாலை என பாடசாலைக்குப் பெயர் சூட்டாமல், 'மகாஜனா' எனப் பெயர் சூட்டியமை 'யாவர்க்கும் உரியது' என்ற பாவலரின் தூரநோக்குப் பார்வையைப் புலப்படுத்துகிறது. 1911 ஆம் ஆண்டு பாடசாலைக்கான பொருத்தமான இடத்தை தேர்ந்தெடுத்த பாவலர், 1912 ஆம் ஆண்டு தற்போதைய கல்லூரி அமைந்துள்ள இடத்தில் பாடசாலைக்கான கட்டடத்தை நிறுவினார். 1918 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழை காரணமாக பாடசாலைக் கட்டடம் தரைமட்டமானதுடன், மீண்டும் பாவலரது வீட்டில் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. 1919 ஆம் ஆண்டு தரைமட்டமான பாடசாலை மீண்டும் உயிர்பெற்று கட்டடம் கட்டப்பட்டு, பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்தது. 1926 ஆம் ஆண்டு மகாஜனாவின் ஆரம்ப பாடசாலை தெல்லிப்பழை சரஸ்வதி கனிட்ட தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 1928 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

அந்நிய ஆதிக்கத்தால் தமிழர் பண்பாடுகள் அழிவடையக் கூடாது என்ற ஆழமான உணர்வுகளால் உந்தப்பட்டு பாவலர் மகாஜனாவை ஆரம்பித்தார் என்றே வரலாறுகள் கூறுகின்றன. அம்பனைக் கிராம ஏழை விவாசாயிகளின் பிள்ளைகள் நிலையான செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இப்பாடசாலையை ஸ்தாபித்த பாவலர், இப்பாடசாலையில் 25.06.1929 வரை அதிபராகவும் இருந்து சேவையாற்றி மறைந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் திரு.கா.சின்னப்பா அதிபராகப் பதவியேற்றார். 1935 ஆம் ஆண்டு அதிபர் கா.சின்னப்பா தலைமையில் வெள்ளி விழா கொண்டாடப்பட்டு, முதலாவது 'மகாஜனன்' நூல் வெளியிடப்பட்டது.

மகாஜனாவானது, சைவத் தமிழ்ப் பண்பாட்டைக் கருவூலமாகக் கொண்டு கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பல ஆயிரக் கணக்கான மாணவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி கலங்கரை விளக்கமாக விளங்குகிறது. மக்கள் இக்கல்லூரியின் ஸ்தாபகரான பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களைக் 'கல்வியின் காவலனாக'ப் போற்றுகிறார்கள். தந்தை வழியில் கர்ம வீரராக மகாஜனாக் கல்லூரியைக் கட்டியெழுப்பியவர் ஆளுமை மிக்க அவரது புதல்வர் 'மகாஜன சிற்பி' அமரர் து.ஜயரத்தினம் அவர்கள். அவர் 1936 ஆம் ஆண்டு பாடசாலையில் சாரணியத்தை ஆரம்பித்து வைத்ததுடன், 1945 ஆம் ஆண்டு பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக சபைத் தலைவராக அணி சேர்த்த இவர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு 'துர்க்கா துரந்தரி' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. 1947 ஆம் ஆண்டு பாடசாலை இரண்டாம் தரப் பாடசாலையாக



வலமிருந்து இடம் : திரு. A. மகேந்திரன், திரு. K.கிருஷ்ணபிள்ளை, திரு. T. T. ஜெயரட்ணம் மற்றும் திரு. S. J. V. செல்வநாயகம் ஆகியோர் மகாஜனாக் கல்லூரியில்..



மகாஜன சிற்பி
துரையப்பாபிள்ளை ஜெயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தரமுயர்த்தப்பட்டதுடன், அதே ஆண்டு மே மாதம் இந்தியாவில் இருந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்கள் பாடசாலையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 1949 ஆம் ஆண்டு மகாஜனா முதற்தர கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன், அதிபர் து.ஜயரத்தினம் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1950 ஆம் ஆண்டு கல்லூரியின் வளர்ச்சிக்காக நிதி சேகரிக்கும் முகமாக இந்திய திரைப்பட நட்சத்திரங்களின் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. 1951 ஆம் ஆண்டு வித்துவான் நா.சிவபாதசுந்தரனார் அவர்கள் கல்லூரி' கீதம் மற்றும் கொடி கீதம் ஆகிய இரண்டையும் இயற்றினார். மேலும் அதே ஆண்டு முதன் முதலாக பொறியியல் துறைக்கு திரு.அ.வேல்சாமி பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு முதன் முதலாக திரு. எஸ். ஐ. சத்தியோசாதம் விஞ்ஞானத் துறைக்கும், திரு.கே.நல்லைநாதன் மற்றும் திரு.இ.குமாரதேவன் ஆகியோர் கலைத் துறைக்கும் தெரிவானார்கள். 1954 ஆம் ஆண்டு கல்லூரிக்கு நிதி சேகரிக்கும் முகமாக மிகப் பிரமாண்டமான களியாட்ட விழாவை து.ஜயரத்தினம் அவர்கள் ஒழுங்கு செய்தார். இக்களியாட்ட விழா ஒரு மாதம் நடைபெற்றதுடன், அதில் இந்தியக் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். இக்களியாட்ட விழாவில் லொத்தர் சீட்டிழுப்பு மூலம் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

1955 ஆம் ஆண்டு துரையப்பா மண்டபம் (பொன் விழா மண்டபம்), நூல் நிலையம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1960 ஆம் ஆண்டு கல்லூரி தனது பொன் விழாவை கொண்டாடியதுடன், இவ்விழா துரையப்பாபிள்ளை ஞாபகார்த்த மண்டப திறப்பு விழாவுடன் ஆரம்பமானது. இதன்போது கல்லூரி பொன்விழா மலர் வெளியிடப்பட்டதுடன், கல்லூரியில் சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயம் சமய சடங்கு கிரியைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் கல்லூரியானது அவ்வருடம் 'தனியார் பாடசாலை' என்னும் அந்தஸ்தில் இருந்து 'அரசாங்கப் பாடசாலை' என்னும் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. அவ்வருடம் மாணவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 1800 ஐ எட்டியது. கல்லூரியின் தொடர்ச்சியான வளர்ச்சி காரணமாக 1961 ஆம் ஆண்டு கல்லூரி அதி உயர் தரத்துக்கு உயர்த்தப்பட்டது. 1969 ஆம் ஆண்டு கல்லூரியின் வைரவிழா மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும் 1940 - 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மஹாஜனாவின் மும்மணிகளான மகாகவி உருத்திரமூர்த்தி, அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி மற்றும் செ.கதிரேசப்பிள்ளை ஆகியோர் ஈழத்து இலக்கிய உலகிற்கு வழங்கிய பங்களிப்புக்களால் மகாஹனாவின் பெயர் அழியா இடம் பெற்றது.

பாவலரின் மருமகளும், மகாஜன சிற்பி ஜயரத்தினம் அவர்களின் மனைவியுமான திருமதி. இராணிரத்தினம் ஜயரத்தினம் கடந்த 07.06.2010 அன்று தனது 90 ஆவது வயதில் லண்டனில் காலமானர். அவர் தனது கணவருடன் இணைந்து மகாஜன அன்னையின் வளர்ச்சியில் கிட்டத்தட்ட 50 வருடங்கள் தன்னை அர்ப்பணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1971, 1972 ஆம் ஆண்டுகளில் முறையே திரு.மா.மாகாதேவன், திரு.பொ.ச.குமாரசாமி ஆகியோர் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றனர். 1973ஆம் ஆண்டு திரு.க.சிவசுப்பிரமணியம் அதிபராகப் பொறுப்பேற்றதுடன், 1976 ஆம் ஆண்டு திரு.பொ.கனகசபாபதி அதிபராகக் கடமையேற்றார். தொடர்ச்சியாகப் பல ஆளுமை மிக்க அதிபர்களையும், தன்னலம் கருதாத பல நூறு ஆசிரியர்களையும் இக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1987 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராட்சியம்) ஆரம்பிக்கப்பட்டதுடன், 1988 ஆம் ஆண்டு கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 1990 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் சகல வசதிகள் கொண்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட 100 பாடசாலைகளில் மகாஜனாவும் ஒன்று என்பதுடன், வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 3 பாடசாலைகளில் இதுவும் ஒன்று என்ற பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. 1991 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்) உருவாக்கப்பட்டதுடன், 1994 ஆம் ஆண்டு கொழும்பு பழைய மாணவர் சங்கம் மீளமைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர் அனர்த்தம் காரணமாக கல்லூரி இடம்பெயர்ந்து, மீண்டும் தெல்லிப்பழையில் 1999 ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்தது. 2001 ஆம் ஆண்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரியுடன் 'Battle of the Heros' துடுப்பாட்டப் போட்டி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2003 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கம் (ஜேர்மனி) ஆரம்பிக்கப்பட்டது.

இக்கல்லூரியானது அறுபது, எழுபதுகளில் இலங்கையின் பல பாகங்களில் இருந்து கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கி, பெரும்பான்மையான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாவதற்கு ஊன்று கோலாக இருந்துள்ளது. இலங்கையில் கல்விமான்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த விற்பன்னர்கள் பலரை உருவாக்கும் உன்னத பணியில் மகாஜனாவுக்கு தனிப் பங்கு உண்டு. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் கல்லூரி பல இடங்களில் இடம் பெயர்ந்து, தற்காலிக கொட்டகைகள் பலவற்றில் இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கல்லூரி தனது சொந்த இடத்தில் நூற்றாண்டைக் கண்டமை மன மகிழ்வுக்கு உரியது.

இங்கு கல்வி கற்ற ஒவ்வொருவரும் மகாஜனாவை தங்கள் அன்னையாக உணர்கிறார்கள்; பார்க்கிறார்கள்; மதிக்கிறார்கள்; வணங்குகிறார்கள். ''மகாஜனா எங்கள் தாய்; எங்களது அறிவின் ஆதாரம்; நாங்கள் வரித்துக் கொண்ட இலட்சியங்கள், எங்களை வழிப்படுத்துகின்ற விழுமியங்கள், எங்கள் வாழ்வுக்கான திறன்கள், மேலான ரசனைகள் அனைத்தும் மகாஜனா அன்னையின் அருட்கொடைகள்'' என பேராசிரியர் நா.சண்முகலிங்கம் அவர்கள் பெருமை கொள்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச்சியின் பலனால் பல கல்வி நிறுவனங்கள் உருவாகின. அக்கல்வி நிறுவனங்களுக்கும் மகாஜனாவுக்கும் பாரியதொரு வேறுபாடு உண்டு. ஏனைய பாடசாலைகள் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த வசதி படைத்த பேருள்ளம் கொண்ட நிலச் சுவாந்தார்கள் மற்றும் வள்ளல்கள் முதலியோரால் ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை 'இந்து போர்ட்' முதலிய கல்வி நிறுவனங்களால் ஸ்தாபித்துப் பராமரிக்கப் பட்டன. ஆனால் மகாஜனாக் கல்லூரியானது, கல்வி அறிஞர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு, கிராம மக்களாலும், பழைய மாணவர்களாலும், பெற்றோர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்டது. இதனாலேயே ஒரு சிறிய பாடசாலை 'கிராமத்துப் பல்கலைக்கழகமாக'ப் பரிணமித்தது என்றால் அது மிகையாகாது.

அறுபது - எழுபதுகளில் விளையாட்டுத்துறைகளில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலும், இலங்கை முழுவதும் பல சாதனைகளை இக்கல்லூரி புரிந்துள்ளது.



1930ஆம் ஆண்டு மகாஜனா ஆசிரியர் குழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனாவை வழிநடத்திய அதிபர்கள்


T.A. Thuraiyappapillai
1910 – 24.06.1929


Mr.K.Chinappah
25.06.1929 – 19.05.0945


Mr.T.T.Jayaraththinam
20.05.1945 – 31.12.1970


Mr.M.Mahadevan
01.01.1971 – 05.06.1972


P. Kumarasamy
1972 – 10.07.1973


Mr.S.Sivasupramaniam
11.07.1973 – 24.05.1976


Mr.P. Kanagasababathy
25.05.1976-30.11.1979


Mr.A.Ramasamy
Later part of 1979


K.S. Raththineswara Aiyar
12.1979- 30.06.1980


Mr.Pon.Somasundram
01.07.1980 – 11.06.1983


Mr.T.Sanmugasuntharam
12.06.1983-31.07.1984


Mr.V.Kanthaiyah
01.08.1984 – 03.12.1985


K.Naharajah
1985 - 28.11.1998


Mr.P.Suntharalingam
29.11.1998-14.10.2006


Mrs.S.Anandasayanan
15.10.2006-Up to Date

## மகாஜனாவின் பழைய மாணவர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்


அமரர் உயர்திரு.
எஸ்.ஜே.வி. செல்வநாயகம்
1951


அமரர் உயர்திரு.
கு. வன்னியசிங்கம்
1951


உயர்திரு. ச. சிவதாசன்
2007


அமரர் உயர்திரு.
சி. சிவமகாராஜா
2000

'உனை நீ அறி' (Know thyself ) என்ற பாடசாலை விருது வாக்குக்கு அமைய பாடசாலையின் தூரநோக்கு 'உயர் விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்' (Creation of perfect humanistic society of great values) ஆகும். இக்கல்லூரியில் தற்போது இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்காக மாணவர் முதல்வர் ஒன்றியம், உயர் தர மாணவர் மன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், விஞ்ஞான மன்றம், சமூகக் கல்வி மன்றம், சாரணியம், சுற்றாடல் பாதுகாப்பு மன்றம், ஒழுக்காற்று சபை, நுண்கலை மன்றம், சதுரங்கக் கழகம், இளம் புத்தூக்குனர் கழகம், நூலகர் மன்றம், பொது அறிவு மன்றம், விவாத மன்றம், மனைப்பொருளியல் மன்றம், தகவல் தொழிநுட்ப மன்றம், புகைப்படக் கலை மன்றம் முதலிய மன்றங்களும், இலங்கைச் செஞ்சிலுவை சங்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு, மாணவர் நலன்புரி படைப்பிரிவு முதலிய கழகங்களும் இயங்கின்றன.

இலங்கை அரசாங்கம் இக்கல்லூரி ஸ்தாபகரான அருளம்பலம் துரையாப்பாபிள்ளை அவர்களை கௌரவிக்கும் முகமாக ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கல்லூரிப் பழைய மாணவரான பேராசிரியர் அருட்குமரன் "Knighthood" பட்டம் பெற்றமையும் கல்லூரிக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதப்படுகின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி பேராசிரியர் அருட்குமரனுக்கு இவ்விருது கிடைத்த செய்தியை London Gazette - "The most forward-thinking medical leader in this coutry" எனத் தனது இணையத் தளத்தில் விபரிக்கிறது.

ஆரம்ப காலத்தில் கிராமச் சூழலில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இவ் அறிவாலயம், படிப்படியாக வளர்ச்சி கண்டு இலங்கையின் பல பாகங்களில் உள்ள மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ததுடன், கடந்த நூறு ஆண்டுகளில் தலை சிறந்த கல்விமான்கள் பலரையும் உருவாக்கியுள்ளமை கல்லூரிக்கும், ஸ்தாபகருக்கும் மற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கும் கிடைத்த அளப்பரிய வெற்றியாகும். வேளாண்மை வளம் மிக்க செம்பாட்டு மண்ணில், தமிழர் பண்பாட்டு வேர்கள் ஆழப் பதிந்துள்ள தெல்லிப்பழை ஊரின் நடுவில், சைவமும் தமிழும் நிறைந்த கல்விச் செல்வம் தழைத்தோங்க வேண்டும் என்ற அவாவுடன் ஆரம்பிக்கப்பட்ட மகாஜனாவின் தொடக்கமானது, தமிழர்களின் மிக உயர்ந்த வரலாற்று நிகழ்வாக பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. தம்மொழி, மதம், நிலம், பண்பாடு முதலியவற்றைப் பேணிப் பாதுகாக்க நினைக்கும் ஒரு மனிதனின் உயர்ந்த எண்ணங்கள் வாழும் ஆலயமாக 'மஹாஜனா அன்னை' போற்றப்படுகிறாள்.

- உமா பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூ.கே.ஈ

திருமண அழைப்பிதழ்களின் தாயகம்



E-mail:ukcard@sltnet.lk

333, Sea Street, Colombo 11.
Tel: 011 5370019 Fax: 011 5370018

94, Galle Road, Colombo 06.
Tel/Fax : 011 2501012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி மலைக்கோட்டை

# குடைவரை கோவில்கள்

தமிழகத்தின் மத்திய பகுதியில் 'இதயம்' போன்று சென்னை- கன்னியாக்குமரி தேசிய நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 320 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது திருச்சிராப்பள்ளி மாநகரம். இந்நகரம் தமிழகத்தின் மூன்றாவது பெரிய நகரம் என்ற பெருமையைப் பெறுகின்றது. காவேரி பிரிந்தோடும் பகுதிகளில் அழகிய கோவில்கள், கல்விச்சாலைகள் என்று பல பெருமைகளைக் கொண்டது திருச்சிராப்பள்ளி மாவட்டம். திருச்சிராப்பள்ளியிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் வரலாறு கூறும் கல்வெட்டுகளும், ஆலயங்களும், சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், ஓவியங்களும், கட்டடங்களும் ஊரின் பழைமையையும் சிறப்பையும் எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

திருச்சியைப் பற்றிய குறிப்புகள் கடைச்சங்க நூலாகிய அகநானூறில் ''கறங்கிசை விழவின் உறதைக்குணாது நெடும் பெருங்குன்றம்'' என்று உறையூருக்கு கிழக்கே ஒரு குன்று கூறப்பட்டுள்ளது. குன்றின் பெயரோ அல்லது குன்று அமைந்திருக்கும் ஊரின் பெயரோ குறிப்பிடப்படவில்லை. ஆயினும் சைவ சமயக் குரவராகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அக் குன்றின் மேல் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடியுள்ள பதிகங்களில், இக் குன்றினை சிராப்பள்ளி என அழைத்துள்ளதைக் காண்கின்றோம். தேவாரப் பாடல்பெற்ற சிவ தலங்களில் ஒன்றாகத் திகழும் தாயுமானவர் கோவில் அமைந்திருக்கும் திருச்சி மலைக் கோட்டையின் உச்சியிலேயே பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் ஆலயமும் சுயம்பு லிங்கமாகத் தோன்றிய சிவன் ஆலயமும் 273 அடி உயரமுள்ள மலைக் குன்றில் இரண்டு குடைவரை கோவில்களாக அமைந்துள்ளன.

மண்ணியல் நிபுணர்கள் தமது ஆய்வின் முடிவில் திருச்சி மலைப் பாறை முப்பது இலட்சம் ஆண்டுகள் பழைமையானது என கணித்துள்ளனர். இந்த மலையை கிழக்கிலிருந்து பார்த்தால் யானை முகத்தான் விநாயகப் பெருமானைப் போலவும், மேற்கிலிருந்து பார்த்தால் நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போலவும், வடக்கிலிருந்து பார்த்தால் தோகை விரித்தாடும் மயிலைப் போலவும், தெற்கிலிருந்து பார்த்தால் முழந்தாளிட்டு அமர்ந்திருக்கும் நந்தி போலவும் பல தோற்றங்களில் காட்சியளிப்பதை வேறெங்கும் காண முடியாது.

இந்த மலையும் அதன் சுற்றுப் பகுதிகளும் விஜயநகரப் பேரரசிற்கும் அதன் பின்னர் கர்நாடகப் போரின்போது ஆங்கிலேயர்களுக்கும் இராணுவ அரணாக விளங்கியது. அதனால் இது 'மலைக் கோட்டை' எனவும் இதன் அடிவாரத்தில் கடைத்தெருவாக இருக்கும் இடத்திற்கு 'மெயின் காட் கேட்' எனவும் பெயர் வந்தது.

இந்த பாறையின் உச்சியில் பிள்ளையார் ஆலயம் அமைந்திருப்பதால் 'உச்சிப் பிள்ளையார் கோவில்' அல்லது 'மலைக்கோட்டைப் பிள்ளையார் ஆலயம்' என அழைக்கப்படுகின்றது. இந்த ஆலயத்தின் தோற்றம் குறித்து இராமாயண காவியத்துடன் பிணைத்து கதை ஒன்றும் கூறப்படுகின்றது. இராம - இராவண யுத்தம் முடிவுற்ற பின், இலங்கையின் அரசனாக விபீஷணன் முடி சூட்டப்பட்டான். இதன் பின்னர் இராமனது பட்டாபிஷேக நிகழ்வுக்காக இராமனுடன் விபீஷணனும் அயோத்திக்குச் சென்றான். பட்டாபிஷேக நிகழ்வின் பின்னர் போரில் தனக்கு உதவியதற்காக இராமர் இரங்கநாதர் சிலை ஒன்றை விபீஷணனுக்கு அன்பளிப்புச் செய்தார். விபீஷணன் இராமருக்கு உதவியிருந்தாலும் அவன் ஓர் அரக்கன் என்பதனால் இரங்கநாதர் சிலையை இலங்கைக்கு எடுத்துச் செல்வதை தேவர்கள் விரும்பவில்லை. எனவே தேவர்கள் பிள்ளையாரிடம் முறையிட்டனர். தேவர்களின் வேண்டுகோளை விநாயகரும் ஏற்றார். திருச்சி வழியாக இலங்கை திரும்புகையில் எழில் வனப்புடன் பாய்ந்தோடிய காவிரியில் நீராட விருப்பம் கொண்டான் விபீஷணன். ஆனால் இரங்கநாதர் சிலையை ஒருமுறை தரையில் வைத்து விட்டால் அதை அங்கிருந்து நகர்த்த முடியாது என்ற காரணத்தால் செய்வதறியாது திகைத்தான். அப்போது அங்கு நின்றிருந்த சிறுவனிடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்தளத்தில் உள்ள குடைவரை ஆலயம்



மலைப்பாறையில் அழகிய சிற்பம்



கருவறையில் மாணிக்க பிள்ளையார்

சிலையைக் கொடுத்து தான் குளித்துவிட்டு வரும் வரை இச்சிலையை பாதுகாப்பாக வைத்திரும்படி கூறிச் சென்றான். சிறுவன் உருவில் இருந்த விநாயகர் சிறிது நேரத்தின் பின் சிலையை அப்படியே வைத்துவிட்டு, அருகில் இருந்த மலைமீது சென்று அமர்ந்தார். தான் சிலையைக் கொடுத்த சிறுவன் மலையில் அமர்ந்திருப்பதைக் கண்ட விபீஷணன் கோபமடைந்து மலைக்குச் சென்று விநாயகர் தலையில் குட்டினான். உச்சிப் பிள்ளையார் தலையில் இன்றும் அந்தக் குட்டின் வடு (தலையில் வீக்கம்) காணப்படுகின்றது. இலங்கைக்கு எடுத்து வரவிருந்த இரங்கநாதர் சிலை விநாயகரின் திருவிளையாடலால் திருவரங்கத்தில் இன்றும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

மலையின் உச்சியிலுள்ள கோவிலுக்கு செல்ல 417 படிக்கட்டுகள் உண்டு. மலையின் கீழ்ப்புறத்தில் விபீஷணன் பாதங்கள் இரண்டு பாறையில் காணப்படுகின்றது. மலையுச்சி விநாயகர் சன்னிதி, படிக்கட்டுகளின் அமைப்பு யானையின் துதிக்கையின் வடிவத்தைக் கொண்டமைந்து இருப்பதாகக் கொள்ள முடியும். உச்சிப் பிள்ளையார் கிழக்கு நோக்கி காட்சியளிக்கின்றார்.

இங்கு மூன்று கோவில்கள் காணப்படுகின்றன. மலையின் அடிவாரத்தில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும், மலையின் நடுப்பகுதியில் தாயுமானவர் ஆலயமும், உச்சியில் பிள்ளையார் ஆலயமும் காணப்படுகின்றன. மலையடிவாரத்தில் கம்பீரமாக வீற்றிருக்கும் பிள்ளையாரைத் தரிசிக்காமல் யாரும் மலையேற முடியாது. மலையேறி உச்சிப்பிள்ளையாரைத் தரிசிக்க முடியாதவர்கள் மாணிக்கப் பிள்ளையாரைத் தரிசித்து பயனடைகின்றார்கள்.

200 படிகள் ஏறிய பின்னர் தாயுமானவர் ஆலயம் எதிர்படுகிறது. இது ஆறாம் நூற்றாண்டில் குணபரன் என்ற மகேந்திரபர பல்லவன் கட்டுவித்த ஒரு குடைவரைக் கோவில் ஆகும். இங்கு வடமொழிப் பாடல்கள் கல்வெட்டுகளாக அதிகம் காணப்படுகின்றன. 104 செய்யுள்கள் அந்தாதியாக உள்ளன. இங்குள்ள சுயம்பு லிங்கம் பாறையிலிருந்து தோன்றியதாகக் காட்சியளிக்கின்றது. இந்த லிங்கம் தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய லிங்கங்களில் நான்காவதாக இடம்பெற்றுள்ளது. திருக்காளத்தி, திருக்கோணமலை போன்று இதுவும் திருக்கயிலாயம் எனப்படும். சிவபெருமான் மீது பேரன்பு கொண்ட ஒரு பெண் கருவுற்றிருந்தாள். மகப்பேற்றுக் காலம் நெருங்கி வந்தது. காவிரிப் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தால் அவளின் தாய் வந்து உதவவில்லை. சிவபெருமானே அவளின் தாயைப் போல் வந்து பேறுக் காலத்தில் உதவி புரிந்து அருளினார். இதனால் 'தாயுமானவர்' எனும் திருப்பெயர் வழங்கப்படுகின்றது.

வழக்கமாக சன்னிதிக்கு எதிரில்தான் கொடிமரம் இருக்கும். ஆனால் இங்கு சன்னிதிக்கு பின்புறத்தில் கொடி மரம் காணப்படுகின்றது. ஆனால் முன்பு கோவிலின் சிவன் சன்னிதி கிழக்குத் திசையை நோக்கியிருந்தது. எனவே பிரதான வாசலும் கொடி மரமும் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டது. சரமா முனிவருக்காக சிவன் அரசனைத் தண்டிக்க மேற்குத் திசை நோக்கி திரும்பி விட்டதால் சன்னிதி வாசலும் கொடி மரமும் அங்கேயே நிலைத்து விட்டது. தினசரி பூசையின் போது சன்னிதிக்கு பின்புறத்தில் மேளதாளம் இசைத்து தேவாரம் பாடுவது இப்போதும் வழக்கமாக உள்ளது. இங்கு ஆயிரம் கால் மண்டபம் ஒன்றும் உண்டு.

உச்சிப்பிள்ளையார் கோவிலும் பல்லவர்களின் சிற்பத்திறனை பறைசாற்றும் விதமாக உள்ளது. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு கல்லில் செதுக்கிய கல்லாலான சங்கிலி இங்கு தொங்கிகொண்டிருப்பதைக் காணலாம். விநாயகருக்கு நேர்திக் கடனாக பால் அபிசேகம் செய்து அறுகம்புல் மாலை சார்த்தி மகிழ்கின்றார்கள்.

ஆடி மாதத்து பௌர்ணமி உத்திரட்டாதி நட்சத்திர நாளன்று வரும் உத்திரட்டாதி நன்னாளில் விநாயகரை வழிபட வேண்டும். திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில் இதற்கு மிகவும் ஏற்ற கோவிலாகும்.

இங்கே இரு நந்திகள் உண்டு. கோவிலின் உள்ளே சிறிய நந்தியும் மலையடிவாரத்தின் அருகில் உள்ள தெப்பக் குளத்தின் அருகே மிகப் பெரிய நந்தியும் இருக்கின்றன. இது தஞ்சாவூரில் பிரசித்தி பெற்ற மிகப் பெரிய நந்திக்கு அடுத்தபடியானதாகும். இந்த மலையை சிவனாகக் கருதி வழிபடுவதனால் அடிவாரத்தில் நந்தி சிலை அமைத்துள்ளார்கள் எனக் கருத முடியும். பிரதோசத்தன்று நந்திக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.


மலைக் கோட்டை ஆலயத்தில் ஆறு வேளைப் பூசைகளும் முறைப்படி நடைபெறுகின்றன. சித்திரை மாத பிரம்மோற்சவம், ஆடிப்பூரம், பங்குனி தெப்பத்திருவிழா, விநாயகர் சதுர்த்தி, ஆங்கிலப் புத்தாண்டு, தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் ஆகியன இங்கு திருவிழாக்களாக கொண்டாடப்படுகின்றன.

. - பஸ்தியாம்பிள்ளை ஜோன்சன்



சோழர்களின் கல்வெட்டு





கருவறை மண்டப வாயிலில் துவார பாலகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மை

- பேராசிரியர் எஸ். புஸ்பரட்ணம்

இலங்கையில் பெருங்கற்கால ஈமத்தாழி சின்ன முறை காணப்பட்ட இடங்களில் ஒன்றாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குஞ்சுப்பரந்தன் காணப்படுகிறது. இங்குள்ள டி8 என்ற குடியேற்றத் திட்டத்தில் உள்ள காணி 1990 ஆம் ஆண்டளவில் பயிர்ச் செய்கைக்காகத் திருத்தப்பட்டபோது, எதிர்பாராத வகையில் முழுமையான தாழியும், தாழியின் உடைந்த பாகங்களும் வெளிவந்தன. இது பற்றிய செய்தியை அப்போதைய உதவி அரசாங்க அதிபராக இருந்த கலாநிதி க.குணராசா அவர்களுக்குத் தெரியப்படுத்தியபோது, அவர் நேரில் சென்று அவற்றைப் பார்வையிட்டதுடன், அத்தாழிகள் பற்றியும் விரிவான கட்டுரையை எழுதியிருந்தார். வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது முழுமையான பெருங்கற்கால ஈமத்தாழி என்ற வகையில் இதற்குத் தனி முக்கியத்துவம் உண்டு. நான்கடி உயரமும், எட்டடி சுற்று வட்டமும் கொண்ட இத்தாழியின் விளிம்பு ஓரங்குலத் தடிப்புடையது. தாழியின் வெளிப்புறத்தில் சில அலங்காரக் கோடுகள் காணப்படுகின்றன. தாழிக்குள் மனித எலும்புக் கூட்டின் சில பாகங்களும், சாம்பல் போன்ற கரிய பொருள், இரு மட்கலங்கள் என்பன காணப்பட்டன. இப்பொருட்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தாழி காணப்பட்ட வயற்பரப்பின் ஓரங்களில் காணப்படும் உடைந்த தாழிகளையும், பலவகைப்பட்ட மட்பாண்டங்களையும் நோக்கும் போது, இங்கு 'பொம்பரிப்பு' போன்ற பெருங்கற்கால ஈமத்தாழி மையம் இருந்திருக்கலாம் என்பது தெரிகிறது.



கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்த அளவில் பெருங்கற்கால குடியிருப்புக்கள் இருந்த பிராந்தியமாகப் பூநகரி காணப்படுகிறது. 1980 களில் கலாநிதி இரகுபதியும், 1990-94, 2004-2005 ஆண்டு காலப்பகுதியில் இக்கட்டுரை ஆசிரியரும் இங்கு மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளின்போது கல்முனை தொட்டு நாச்சிக்குடா வரையுள்ள கடற்கரை சார்ந்த பிரதேசத்தில் நுண்கற்காலம் தொட்டு தற்காலம் வரை வாழ்ந்து வரும் மக்களது பலதரப்பட்ட பண்பாட்டுச் சான்றுகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவற்றுள் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள், ஈமச் சின்னங்கள் தொடர்பாகக் கிடைத்த சான்றுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இச்சான்றுகள் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் 'விமலா பேக்கிலே' என்ற அறிஞர் கந்தரோடை தொட்டு புத்தளத்தில், உள்ள பொம்பரிப்பு வரை தென்னிந்தியா குறிப்பாகத் தமிழகத்தை ஒத்த பெருங்கற்காலத் திராவிட மக்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கூறிய கருத்தை உறுதி செய்வதாக உள்ளது.

மேற்கூறப்பட்ட கற்கால, நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பான சான்றுகள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டு வட இந்தியாவில் இருந்து மக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





புலப்பெயர்வு ஏற்பட முன்னரே தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் கிளிநொச்சியிலும், இலங்கையின் ஏனைய பிராந்தியங்கள் பலவற்றிலும் வாழ்ந்துள்ளனர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அந்த மக்களே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து மொழியடிப்படையில் தமிழ் சிங்கள மக்களாக இன அடிப்படையில் வேறுபட்டனர். அதை இரணைமடுவிலும், பூநகரியிலும் கிடைத்துள்ள தொடக்க கால எழுத்துக்கள், சாசனங்கள் உறுதி செய்கின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தமிழ் மொழி தோன்றியதை அப்பண்பாட்டு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள 2300 ஆண்டுகளுக்கு முந்திய பிராமி எழுத்துக்கள் உறுதி செய்கின்றன. இதனால்தான் திராவிட மொழிகளில் முதலில் தமிழில் வளமான சங்க இலக்கியம் தோன்றக் காரணமாகும். இலங்கையிலும் இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தமிழ் மொழி புழக்கத்திற்கு வந்ததை அநுராதபுரம், அம்பாந்தோட்டை, கந்தரோடை முதலான இடங்களில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் உறுதி செய்கின்றன. இருப்பினும் அதிக அளவில் இவ்வெழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களாக இரணைமடு, பூநகரி, ஈழவூர் (பொன்னாவெளி) முதலான இடங்கள் இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இரணைமடுவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின் போது, குளத்தின் மேற்குக்கரைப் பகுதியில் சிதறுண்டு காணப்பட்ட மட்பாண்டங்களிடையே கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்கள் பல கண்டு எடுக்கப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்கள் தமிழுக்கும், பிராகிருத மொழிக்கும் உரியனவாகக் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் இனத்தால் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்த தமிழ் - சிங்கள மக்கள் மொழி வேறுபாட்டால் இரு வேறுபட்ட பண்பாடு கொண்ட இனக் குழுக்களாக தோன்றி வளர்ந்தனர் என்பது தெரிகிறது.

### அயல்நாட்டு உறவுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த உரோம, வட இந்திய, தென்னிந்திய, சுதேச நாணயங்கள், இந்திய, உரோம, அரேபிய, மட்பாண்டங்கள், கல்மணிகள் என்பன கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பிராந்தியம் மேற்குறிப்பிட்ட நாடுகளுடன் நெருங்கிய வணிக - கலாசார உறவுகளைக் கொண்டிருந்ததை உறுதிசெய்கின்றன. அதிலும் பூநகரி வட்டாரத்தில் கிடைத்த சங்க கால சேர, சோழ, பாண்டிய நாணயங்கள், பாளி இலக்கியங்கள் கூறுவதுபோல் அக்காலத்தில் வட இலங்கை தமிழகத்துடன் நெருங்கிய வணிக - கலாசார உறவுகளைக் கொண்டிருந்தமைக்கு சான்றாக அமைகின்றன.

இரணைமடுவில் இந்துப் பண்பாட்டின் தொன்மை தமிழகத்தைப் போல் இலங்கையிலும் இந்துக் கோவில்களைக் கற்களால் அமைக்கும் மரபு கி.பி. 6 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூற்றாண்டின் பின்னரே தோற்றம் பெற்றன. இதற்கு முற்பட்ட காலத்தில் மண், மரம், சுதை கொண்டு அமைக்கப்பட்டதை கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. இதன் தொடக்க கால ஆதாரமாக பெருங்கற்கால குடியிருப்புக்கள், ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட உருவங்கள், மட்பாண்டக் குறியீடுகள் உறுதி செய்கின்றன. கிளிநொச்சியில் பெருமளவான சுடு மண்ணாலான ஆண் - பெண் உருவங்கள், சிலைகள், சிற்பங்கள், மிருக, தாவர உருவங்கள் கிடைத்துள்ளன. இவை அக்கால வழிபாட்டுச் சின்னங்களாக நோக்கப்படுகின்றன. இரணைமடு, உருத்திரபுரம், பூநகரி முதலான இடங்களில் ஆண் - பெண் உருவங்களுடன் இலிங்க வடிவில் அமைந்த பல சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. இவற்றை ஆய்வுசெய்த 'கலாநிதி சிரான் தெரணியகலா' அவர்கள் இலங்கையில் தாய்த் தெய்வ வழிபாடு தொன்மை என்பதற்கு இவை சான்றாக அமைகிறன எனக் குறிப்பிடுகிறார். இங்கு கிடைத்த இலிங்க உருவங்களும், சூலம் பொறித்த மட்பாண்டங்களும் இற்றைக்கு 2300 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே சிவ வழிபாடு இருந்ததற்குச் சான்றாகும், இலங்கையின் வரலாறு கூறும் 'மகாவம்சம்' இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டுகாபயன் காலத்தில் அநுராதபுரத்தில் இருந்த இரு இந்து ஆலயங்கள் பற்றிக் கூறுகின்றது. அச்சான்றை ஆராய்ந்த 'பேராசிரியர் பரணவிதான' அவற்றில் ஒன்று சிவன் ஆலயம் எனவும், மற்றையது பிராமணர் வாழந்த இடம் எனவும் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுவாக இலங்கையில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துப் பண்பாடு இருந்ததற்கான சான்றுகள் காணப்பட்டாலும், ஐரோப்பியர் ஆட்சிக்கு முந்திய (கி.பி. 16 க்கு முந்திய) ஆலயங்கள் பற்றி சான்றுகள் அதிகம் காணப்படவில்லை. இதற்கு போத்துக்கேயர், ஒல்லாந்தர் இந்து மதத்திற்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையே காரணமாகும். ஆயினும் ஐரோப்பியர் ஆட்சிக்கு முந்திய கால ஆயுதங்கள் பற்றிய தகவல்கள், கல்வெட்டுகள், நாயன்மார் பாடல்கள், இலக்கியங்களில் பல ஆதாரங்கள் உண்டு. ஏன் போத்துக்கேய ஆசிரியரான குவைரோஸ் சுவாமிகள் கூட தனது நூலில் ''யாழ்ப்பாணத்தில் இருந்த 500 க்கு மேற்பட்ட இந்து ஆலயங்களை இடித்தழித்து, அவற்றின் கற்களைக் கொண்டு கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள் கட்டியதாக''க் கூறுகிறார். அதை யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வுகளும் உறுதி செய்கின்றன.

ஆயினும் போத்துக்கேயர். ஒல்லாந்தர் ஆட்சி, கிளிநொச்சி போன்ற வன்னிப் பிராந்தியத்தில் அதிக ஆதிக்கம் ஏற்படாததால் அங்கெல்லாம் புராதன ஆலயங்கள் பல இருக்க இடமுண்டு. அவற்றின் வரலாற்றை ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளிவரும் என்பதற்கு இக்கட்டுரை ஆசிரியர் பூநகரியில் மேற்கொண்ட ஆய்வுகள் சிறந்த உதாரணமாகும்.

இக்கட்டுரை ஆசிரியர் 1990 - 93 காலப் பகுதியில் பூநகரி மண்ணித்தலை வட்டாரத்தில் மேற்கொண்ட கள ஆய்வின்போது மண்ணில் புதையுண்ட நிலையில் அழிவடைந்த ஆலயத்தின் சிதைவுகளை அடையாளம் காணமுடிந்தது.

கோறக்கல், சுதை, சுண்ணாம்பு, செங்கட்டி கொண்டு அமைக்கப்பட்ட இவ்வாலயம் ஐந்து அடி நீள அகலத்தில் கர்ப்பக்கிருகம், அந்தராளத்தைக் கொண்டுள்ளது. மூன்று தளத்தில் அமைந்த இதன் விமானம் 13 அடி உயரம்



இரணைமடு, பூநகரி, ஈழவூர் ஆகிய இடங்களில் கிடைத்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்து

கொண்டது. இதன் தேவகோட்டம், சாலை, கர்ணக்கூடு என்பன கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழக் கலை மரபிற்குரியதென்பது தமிழ் நாட்டு கலை வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

அண்மையில் மண்ணித்தலை ஆலயத்திற்கு தெற்கே கௌதாரிமுனை என்ற இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் ஓர் ஆலயத்தின் அழிபாடுகளை அடையாளம் காண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் கிடைத்த சங்ககால நாணயங்கள்

முடிந்தது. சிறிய பற்றைக் காடுகளாலும், பனை மரங்களாலும் ஆலயத்தின் அமைப்பை அடையாளம் காணமுடியாத நிலையில் இதை அடையாளப்படுத்திய போது ஆலயத்தை மூடிய நிலையில் பாம்புப் புற்றுகளும் ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஆலமரங்களும், பனைமரங்களும் வளர்ந்து காணப்பட்டன. மிகுந்த பயத்துடன் இவ்வாலயத்தை துப்பரவு செய்து பார்த்தபோது ஏறத்தாள 70 அடி நீளத்திலும், 30 அடி அகலத்திலும் அமைந்த இவ்வாலயம் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முன்மண்டபம், கொடிக்கம்பம், துணைக்கோவில் கொண்ட ஆலயம் என்பது தெரிய வந்தது.

கோறக்கல், சுதை, சுண்ணாம்பு, செங்கட்டி கொண்டு அமைக்கப்பட்ட இவ்வாலயம் மண்ணித்தலைச் சிவாலயத்தைவிடக் காலத்தால் பிற்பட்டதென்பது தெரிகிறது. ஆனால் சுற்றாடலில் பல நூறு ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்பட்ட போதும் அந்த இடத்தில் பழைமை வாய்ந்த ஓர் ஆலயம் கைவிடப்பட்ட நிலையிலும் அதன் தோற்றம் திராவிடக் கலை மரபுடன் காட்சியளிப்பது இவ்வாலயமும் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் கட்டப்பட்டிருக்கலாம் என்பதைக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

கிளிநொச்சியின் தொன்மை பற்றிய மேற்கூறப்பட்ட சான்றுகள் அப்பிராந்தியத்தின் எதிர்கால ஆய்விற்கான ஒரு தொடக்கப் புள்ளியாகும். எதிர்கால ஆய்வுகள் மேலும் பல



பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கல் மணிகள்

உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் என நம்புகிறேன்.


# GET கலைக்கேசரி DELIVERED TO YOUR HOME

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700
For more details, please contact : Overseas & Local Subscriptions **Sathya Suresh** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322784 Mobile : +94 75 7012 133

**Online Payment : www.kalaikesari.com / Subscription**

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI

**Manager Subscriptions**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.**

**Tel : +94-11-7322783 / +94-11-7767700**
**Fax :+94-11-7767700**
**E-mail : subscription@kalaikesari.lk**

Cheque should be drawn in favour of
**Express Newspapers (Ceylon) (Pvt) Limited**

FOLD HERE

Title : Mr. ☐ Mrs./ Miss ☐ Dr. ☐ Prof. ☐
First Name :..............................................
Last Name :..............................................
Institution :..............................................
Apartment/Other Nos :..............................................
Street / Road :..............................................
Town/City/State :..............................................
Country :..............................................
Amount Enclosed : ..............................................(12 / 6 Issues)
Mode of payment : ☐ Cheque / ☐ Money Order
Online Payment : www.kalaikesari.com / Subscription


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவநாயகர்கள் - 6

# செல்வ வளம் நல்கும் சுக்கிர பகவான்

கலாபூசணம் வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

*''முர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையங்*
*காக்கவான் மழை பெய்விக்கும் கவிமகன் கனகம் ஈவேதன்*
*தீர்க்க வானவர்கள் போற்ற செத்தவர் தமை எழுப்பும்*
*பார்க்கவன் சுக்ராச்சாரி பாத பங்கயமே போற்றி! போற்றி!''*

நவக்கிரக மண்டலத்தில் ஆறாவது இடத்தில் சூரியனுக்கு கிழக்கில் சுபகிரகமாக விளங்குபவன் சுக்கிரன். பிருகு முனிவருக்கும் புவோமசை என்பவளுக்கும் மகனாகத் தோன்றியவன் 'பார்க்கவன்' என்றழைக்கப்படும் சுக்கிரபகவான் ஆவான்.

பார்க்கவன் காசி நகரம் சென்று சிவலிங்கப் பிரதிட்டை செய்து பன்நெடுங்காலம் தவம் செய்தான். இருந்தும் பெருமானின் அருள் கிட்டவில்லை. அதனால் மேலும் கடுமையாக ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். அதனால் மனம் மகிழ்ந்த மகேசன் பார்க்கவன் விரும்பியவாறே இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் 'அமிர்த சஞ்சீவினி' மந்திரத்தை உபதேசித்தான். அசுரர்கள் இதனை அறிந்து சுக்கிர பகவானைத் தங்களது குல குருவாகக் கொண்டனர். இப்பகுதியை விரிவாகக் கூறுகின்றது காசிக்காண்டம்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட போர்களில் இறந்த அசுரர்கள் சுக்கிராச்சாரியாரின் அமிர்த சஞ்சீவினி மந்திரத்தால் உயிர்பெற்று எழுந்தனர். இந்நிலையில் தேவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. தேவர்கள் அனைவரும் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். தான் கொடுத்த வர பலத்தை தவறான வழியில் பயன்படுத்தும் அசுர குருவாகிய சுக்கிரனை விழுங்கி விட்டார் சிவபெருமான். பல காலம் சிவனின் வயிற்றில் இருந்து, பின்பு அமரர்களின் வேண்டுகோளின்படி, சுக்கில வழியாக வெளியே வரச் செய்ததனால் 'சுக்கிரன்' என்றும் தூய வெண்மையாக வந்ததனால் 'வெள்ளி' என்றும் பெயர் பெற்றான். (காசிக் காண்டம்) இறைவனின் திருவருள் இவனுக்கு பூரணமாக இருந்ததால் யாராலும் வணக்கப்படும் கிரக பதவியைப் பெற்றான்.

மகாபலியிடும் திருமால் வாமனனாக வந்து மூன்றடி மண் கேட்டபொழுது கமண்டலத்திலுள்ள நீர் வெளியே வராமல் வண்டு உருவம் எடுத்துத் துவாரத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுக்கிராச்சாரியார் அடைக்க, திருமால் தருப்பையால் குத்த அசுர குருவின் கண் குருடாகியது. இதனை பெரியாழ்வார் திருமொழி

*''மிக்க பெரும் புகழ் மாவலி வேள்வியில்*
*தக்கதிதன்றென்று தானம் விலக்கிய*
*சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய*
*சக்கரக்கையயே அச்சோ அச்சோ*
*சங்கமிடத்தானே அச்சோ அச்சோ''*

என்று பெருமைபட உரைக்கும். இவ்வரலாற்றிலிருந்து ஒருவர் தானமாகக் கொடுப்பதைத் தடுப்பது கொடும் பாவம் என்ற அறிவுரை பெறப்படுகிறது.

அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் வரலாற்றில் மற்றுமொரு பகுதி.

மூவுலகங்களையும் வெல்ல வேண்டும் என்ற ஆசையால் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அடிக்கடிபோர் மூளும். அந்தப் போரில் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான வீரர்கள் மடிவார்கள். ஆனால் இறந்த அசுரர்கள் தங்கள் குருவின் மந்திர வன்மையால் மீண்டும் உயிர் பெற்றார்கள். ஆனால் இந்த வரம் தேவர்களுக்குக் கிடைக்கவில்லை. எப்படியாவது சுக்கிரனிடமிருக்கும் அமிர்த சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுவருமாறு தேவகுரு வியாழனுடைய மகன் கசனை அசுர குருவிடம் மாணவனாக அனுப்பி வைத்தனர் தேவர்கள்.

அரச வேந்தனான வருஷபர்வனுடைய நகரத்தில் சுக்கிராச்சாரியார் வசித்து வந்தார். அவருடைய ஒரே மகள் தேவயானி. அழகும், அறிவும் வாய்ந்தவள். கசன் தேவர்களின் விருப்பப்படி சுக்கிராச்சாரியாரிடம் சீடனாகச் சேர்ந்து அவருக்கும் அவரது மகள் தேவயானிக்கும் அன்புடன் பணிவிடைகள் செய்தும், தமது கலை வன்மையால் அவர்களை மகிழ்வித்தும் பல ஆண்டுகள் குருகுலக் கல்வியில் கழித்தான். கசனுடைய அறிவும், கம்பீரமும் தேவயானியை மயக்கியது. அவனிடம் அன்பு கொண்டாள்.

கசனுடன் கல்வி கற்று வந்த ஏனைய அசுரர்களுக்கு கசன்யார் என்றும், சஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுப்போக வந்திருக்கிறான் என்பதும் தெரிந்தது. அவர்கள் பசுக்களை மேய்ப்பதற்காகச் சென்ற கசனை கொன்று நாய்களுக்கு உணவாக்கினார்கள். நெடுநேரமாக கசன் வீடு திரும்பாததைக் கண்டு கவலையுற்ற தேவயானி தன் தந்தைக்குச் சொல்ல அவர் ஞான திருஷ்டியினால் நடந்ததை அறிந்து அமிர்த சஞ்சீவினி மந்திரத்தைக் கூற, நாய்களுக்கு இரையான கசன் இவற்றின் வயிற்றைக் கிழித்து உயிருடன் வந்தான். மறுபடியும் அசுரர்கள் தேவயானிக்காக பூப்பறிக்கச் சென்ற கசனைக் கொன்று கடல் நீரில் கரைத்து விட்டார்கள். மறுபடியும் கசனுக்கு உயிரூட்டினார். குருதேவர் தங்களது குலகுரு இப்படிச் செய்வதைக் கண்டு கோபமுற்ற அசுரர்கள் கசனைக் கொன்று சாம்பலாக்கி சுக்கிராச்சாரியார் உண்ணும் மதுவில் கலந்து கொடுத்து விட்டார்கள். அவரும் மதுவை அருந்தி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழக்கம் போலவே கசன் வீடு திரும்பாததைக் கண்டு தேவயானி கவலையுற்று பிதாவிடம் சொல்ல அவரும் சஞ்சீவினி மந்திரத்தைச் சொல்ல, குருதேவா அடியேன் உங்கள் வயிற்றுக்குள் இருக்கிறேன் என்றான். சுக்கிரரும் நடந்ததை அறிந்து, கசனை வெளிப்படுத்த வேண்டும் என்றால் தான் உயிரிழக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். தனது அருமை மகள் படும் துயரமும் பொறுக்காது அமிர்த சஞ்சீவினி மந்திரத்தைக் கசனுக்கு உபதேசித்தார். உயிர் பெற்று வந்தவன். மாண்டு கிடந்த சுக்கிராச்சாரியாரை அம் மந்திரத்தைக் கூறி உயிர்ப்பித்தான். பின்பு குருவைப் பணிந்து விடைபெறும் பொழுது தேவயானி தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு கசனை வேண்ட கல்வி கற்பித்த குரு தந்தைக்குச் சமமாகும். ஆதலால் நீ எனது சகோதரி. உன்னை மணப்பது முறையன்று என்று பணிவாக மறுத்து விட்டுத் தன் நாடு ஏகினான். இவ்வரலாறு மகாபாரதத்தில் ஆதி பர்வதியில் வருகிறது.

சுக்கிரனைப் பற்றிய மற்றுமொரு சுவையான வரலாறு தன் மாணவனாகிய கசனை அசுரர்கள் மூன்று முறை வஞ்சகமாகக் கொன்றது அசுர குருவின் மனத்தில் மிக்க கோபத்தை மூட்டியது. அதுவுமில்லாமல் மன்னனின் மகள் சர்மிஷ்டை தேவயானியை அவமதித்தது நெருப்பில் நெய் பெய்தது போல மேலும் அதிகரித்தது. அதனால் விருஷபர்மாவிடம் சென்று 'இனிமேல் நான் குலகுருவாக விளங்க மாட்டேன்' என்று கூறி நடந்தவைகளை விளக்கினார்.

மன்னன் உண்மையை உணர்ந்து, அசுர குருவின் ஆணைப்படி ஆயிரம் தாதிகளுடன் தனது மகளை தேவயானிக்குப் பணிப்பெண்ணாக அனுப்பி வைத்தான்.

காலம் சென்றது. யயாதி மன்னனுக்கு மனைவியானாள் தேவயானி. சர்பிஷ்டை தனது தோழிகளுடன் யயாதி மன்னனின் அரண்மனைக்குப் பணிப் பெண்ணாகச் சென்றாள். சிறிது காலம் கழிந்து மன்னன் சர்மிஷ்டையின் அழகில் மயங்கி அவளைக் காதலித்தான். இதனை அறிந்த தேவயானி தந்தையிடம் கூற, அவர் யயாதி மூப்படையுமாறு சாபமிட்டார். கிழவனாக யயாதி தன்னை மன்னிக்குமாறு பன்முறையும் வேண்ட, மனம் இரங்கிய சுக்கிரபகவானும் 'உனது மூப்பை வாங்கிக் கொண்டு, யாராவது தனது இளமையைத் தர முன் வந்தால் உனது இளமை மீண்டும் உனக்குக் கிடைக்கும்' என்று அருள் புரிந்தார்.

சுக்கிரன் அசுரப் பெண்ணை மணந்து நான்கு புதல்வர்களையும், இரண்டு பெண்களையும் பெற்றார்.

'ஞான வாசிஷ்டம்' என்னும் நூல் சுக்கிரனுடைய வரலாற்றைக் கூறுகின்றது. 'சுக்ரநீதி' சுக்கிரனால் இயற்றப்பட்டது. வட மொழி நூல் ஒன்றில் சுக்கிரனைப் பூஜிக்கும் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.

ஸ்ரீ முத்து சுவாமி தீட்சிதர் சுக்கிரனின் பெருமைகளை தனது கீர்த்தனையில் குறிப்பிடுகின்றார். வழிபட்டவர்களுக்கு செல்வத்தையும், அழகையும் வாரி வழங்குபவர். 'அவனுக்குச் சுக்கிர தசை' என்ற தொடர் செல்வ வளத்தைக் குறிப்பதாகும். சுப காரியங்களை செய்விப்பவன். நுண்கலைகளுக்கெல்லாம் தலைவன். சுக்கிரன் ஒருவரின் ஜாதகத்தில சிறப்பாக அமைந்திருந்தால் அவர் கலையுள்ளம் கொண்டவராக விளங்குவார். அது மட்டுமல்ல நல்ல செல்வம், செழிப்பும் மிக்கவராக 20 ஆண்டுகள் திகழ்வார். சிலருடைய வாழ்க்கையில் சுக்ரதசையே வராமல் போவதற்கும் வாய்ப்பு உள்ளது. களத்திரகாரகனான சுக்கிரன் நன்கிருந்தால் மனைவி அழகானவளாகவும், சிறந்த குணவதியாகவும் விளங்குவாள். குடும்பத்தில் அதிக மகிழ்ச்சி நிலவும்.

'விஷ்ணு தர்மோத்திரம்' என்ற நூலில் சுக்கிரனுக்கு இரண்டு கரங்கள் என்றும் கமண்டலமும், அக்ஷமாலையும் வரதக்ஷஸ்தமும் கொண்டவன் என்றும் வெண்ணிறத்தால் வெள்ளை ஆடை அணிந்தவன். வெள்ளித் தேர் உடையவன். எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரில் பவனி வருபவன் என்றெல்லாம் இலக்கணம் உரைகின்றது. சுக்கிரனுடைய மந்திரத்திற்குரியவர் பரத்வாஜ மகரிஷி. த்ரிஷ்டுப் - சந்தஸ், அதிதேவதை - இந்திராணி, பிரதியதி தேவதை - இந்திர மருத்துவன். இவரது தேவியின் நாமம் சுகீர்த்தி.

சுக்கிரனுக்கு விருப்பமான நிறம் வெண்மை. ஆனந்தமானவன், உசநன், காவியன், ஹிமாபன், குந்தவளன், சுக்கிலாம்பரதன், வேத வேதாங்க பாரகன், நீதிக்ஞன், பிரபு, கருணா சிந்து முதலான இவனது பெயர்களாகும். விருஷப, துலாராசிக்கு அதிபதி மீனத்தில் உச்சன், கன்னியில் நீசன்.

சுக்கிரனுக்கு விருப்பமான சுவை - இனிப்பு; நவரத்தினம் - வைரம்; தானியம் - மொச்சை; மலர் - வெண் தாமரை; சமித்து - அத்தி

வான மண்டலத்தில் சூரியனுக்கு அடுத்தது புதன். அதற்கடுத்ததாகவுள்ளது சுக்கிரன். சுக்கிரன் சூரியனைச் சுற்றிவர 225 நாட்கள் ஆகும். தன்னைத் தானே சுற்றிக்கொள்ள 28 நாட்கள் ஆகும்.

சுக்கிரன் புதனைப் போல ஆறுமடங்கு ஒளியுடையது. இதன் மீது விழும் ஒளியில் பாதிக்கு மேல் பிரதிபலிக்கின்றது. சந்திரனைப் போல 8 மடங்கு பிரதிபலிக்கும் திறன் கொண்டது. ஒளி மிக்க கிரகம். வானவியல் அறிஞர்கள் சுக்கிரனில் கரியமில வாயுதான் உள்ளது; பிராண இருப்பதாகத் தெரியவில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார்கள். உரோமர்களால் மிக அழகான பெண்ணாக, Venus என்னும் காதல் தெய்வமாக வணங்கப்படுவது.

சுக்கிரன் தலங்களாக பாண்டிநாட்டில் திருவாடானையும் தொண்டை நாட்டில் திருவேற்காடும், சோழ நாட்டில் திருஅரங்கமும் விளங்குகின்றன.

திரு அரங்கநாதனின் திருமேனியில் சுக்கிரன் ஒன்றிருந்து அருள் வழங்குகின்றான். திரு அரங்கமும், பிரணவை விமானமும் யாராலும் தோற்றுவிக்கப்படவில்லை. தானாகவே தோன்றிய பெருமையை உடைய 'ஸ்வயம் வியக்த'த் தலமாகும். இதுபோன்று தாமாகத் தோன்றிய வைணவத் தலங்கள் ஏழு உள்ளன. அவை பத்ரிநாதன், புஷ்கரம், தோதாத்ரி, திருவேங்கடமலை, நைமிசாரண்யம், சாளக் கிராமம், ஸ்ரீமுஷ்ணம் ஆகியவையாகும்.

நவரத்தினங்களில் ஆறாம் இடத்திலுள்ள சுக்கிரனுக்கு உகந்தது வைரமாகும். இது மிகவும் விலை மதிப்பு உள்ளது. ஒருவரது அந்தஸ்தை அளவிடக் கூடியது.

இதனை 'சீமைக் கமலம்', 'காமரத்தினம்' என்று அழைப்பார்கள். இது மற்றைய ரத்தினங்களை வெட்டித் தேய்க்கும். ஆனால் வைரம் தானாகத் தேயாது. இதுவே அதன் சிறப்பு.

நவரத்தினங்களில் வைரம் முதல் இடத்தையும், மாணிக்கம், பச்சை, முத்து இரண்டாம் இடத்தையும் நீலம், வைடூர்யம் மூன்றாம் இடத்தையும், பவளமும் புஷ்பராகமும் நான்காம் இடத்தையும் பெறுகின்றன. இவை முறையே சருக்காரபம் (சுக்காங்கல் வடிவம்) சிபிடம்(தகடு) தளாபம்(நிலம்) உருதுவம் (உருண்டை) வடிவங்களில் கிடைக்கின்றன என்று 'கல்பத்ரயம்' என்ற வடமொழி நூல் கூறுகின்றது.

வைரம் மிகவும் பிரகாசமான ஒளி கொண்டது. மிகவும் கெட்டியானது. பூமிக்கடியிலுள்ள படிவப்பறைகளில் பல கோடி ஆண்டுகள் இறுகி, கரியானது (கார்பன்) ஒளி வீசும் வைரமாகிறது.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 'பன்னர்' என்ற இடத்திலும், பஞ்சாபிலும் வைரம் கிடைக்கிறது. உலக நாடுகளில் ஆபிரிக்காவிலுள்ள கிம்பர்லி, பெல்ஜியம், ஹொலந்து, டென்மார்க், ரஷ்யா போன்ற நாடுகளிலும் கிடைக்கிறது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் இருந்து இந்தியாவில் வைரம் எடுப்பது ஒரு தொழிலாக நடைபெறுகின்றது. கி.பி. 1725 இல் பிரேசில் நகரில் வைரங்கள் எடுக்கப்பெற்றன.

'உலகத்தின் வைரச்சுரங்கம்' என்ற அழைக்கப்படுவது கிம்பர்லி சுரங்கமாகும். எர்ராஸ்மஸ் ஜோசப் என்பவர் 1905இல் ஆரஞ்சு மலைப் பகுதியில் வைரங்கள் இருக்கக் கண்டார். பின்னரே 'கிம்பர்லி' என்ற இடத்தில் 1905 ஆம் ஆண்டு COLLENIONDANES என்ற வைரக் கம்பனி உலகிலேயே மிகப்பெரிய வைரக்கல்லை (ஏறத்தாழ 3106 காரட்) வெட்டி எடுத்து அதனை 1907 இங்கிலாந்து இளவரசரான ஏழம் எட்வர்ட் பட்டமேற்ற பொழுது வழங்கியது.

முகலாய மன்னர், ஷாஜகானின் மயிலாசனத்தில் பதிக்கப்பட்ட 'கோகினூர்' வைரம் உலகப் புகழ் பெற்ற இந்திய வைரமாகும். விக்டோரியா மகாராணியிடம் 1605இல் ஒப்படைக்கப்பட்ட இவ்வைரம் லண்டன் பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**வைரம் அணிவதன் நன்மைகள்**

1. 'காமரத்னம்' என்பதால் எப்பொழுதும் இல்லற வாழ்க்கையில் ஆர்வம் இருக்கும்.
2. எதையும் பொருட்படுத்தாது தங்கள் நலமாக இருக்க மனத்தை ஒருமைப்படுத்தும்.
3. உயர்ந்த வாழ்க்கை கொடுக்கும்.
4. கீர்த்தி, செல்வாக்கு தரும்.
5. வசீகரிக்கும் தன்மையுள்ளது.
6. இரகசிய நோய்கள் நீங்கும்.
7. மனநோய் நீங்கும்.

**மாறுபட்ட வைரத்தினால் விளையும் தீமைகள்**

1. அரசனை ஆண்டியாக்கும்.
2. வீடு மனை இழக்க வைக்கும்.
3. புத்திர பாக்கியம் இருக்காது.
4. தீராத நோய்கள் ஏற்படும்.
5. வைரத்தில் கரும் புள்ளி, மஞ்சள் நிறம், சிவப்பு என்பவை விபரீதங்களை உண்டுபண்ணும்.
6. தாய்மார்கள் கர்ப்ப காலத்தில் வைரம் அணியக்கூடாது.
7. பொருத்தமான இராசி உள்ளவர்களே வைரம் அணியலாம்.

**ஸ்ரீ சுக்ர காயத்தி**

*அச்வத்வஜாய வித்மஹே தனுர் ஹஸ்தாய தீமஹி*
*தந்ந சுக்ர ப்ரசோதயாத்!!*

சுக்கிரனை அர்ச்சிப்பதற்கு நந்தியாவர்த்த மலர்கள் சிறந்தவை. வெள்ளிக்கிழமை சுக்கிரபகவானின் 108 திரு நாமங்களைக் கூறி அர்ச்சனை செய்தால் அதிக நன்மை பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கின் வெனிஸ் எனவும் பெயர் பெற்ற அயுத்தயா நகரம்

தாய்லாந்தில் உள்ள அயுத்தயா மாகாணத்தின் தலைநகராக விளங்குவது அயுத்தயாவாகும். சோ ப்ரயா நதியின் பள்ளத்தாக்கில் (Chao Phraya) அமைந்துள்ள இந்நகரினை அயுத்தியா எனவும் அழைப்பர். ஒரு காலத்தில் மிகவும் செழிப்புற்று பெயர் பெற்று விளங்கிய இந்நகரம், சில வேளைகளில் 'கிழக்கின் வெனிஸ் நகரம்' என்றும் அழைக்கப்பட்டது என அதன் வரலாறு கூறும்.

அயுத்தயா எனக் கூறும்போது புகழ்பெற்ற காப்பியமான இராமாயணத்தின் அயோத்தி மாநகர் ஞாபகத்திற்கு வருவது இயல்பானது. ஆம் இப்பிராந்தியத்தில் இந்து சமயம் செல்வாக்கு பெற்றிருந்ததை இப்பெயர் எடுத்துக் காட்டுகிறது. தாய்லாந்தின் தேசிய காப்பியமான ராமாகியனுடன் (Ramakien) இந்நகரம் தொடர்பு கொண்டது என நம்பப்படுகின்றது. இந்து காப்பியமான இராமாயணத்தின் தென் கிழக்கு ஆக்கம் ராமாகியன் ஆகும்.

அயுத்தியா நகரம் குறித்த ஒரு வரலாறும் கூறப்படுகின்றது. அதாவது யு தொங் என்ற அரசன் தொற்று நோய் ஒன்றின் அபாயத்திலிருந்து தன்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, நதிகளால் சூழப்பெற்ற வளம் பொருந்திய சோ ப்ரயா பள்ளத்தாக்குப் பகுதிக்குச் சென்று அங்கு தனது அரச மாளிகையை அமைத்துக் கொண்டான் எனக் கூறுப்படுகின்றது. அது அயுத்தயாவின் முன்னாள் துறைமுக நகரமாகும். அல்லது ரோமரின் தேவதை நகரம் எனப்படும் அயுத்தயா சை ராம் தெப் ச கொன் என்பதாகும். (Ayothaya si Raaw the Nakhon) பின்னர் அது அயுத்தியா என அழைக்கப்பட்டது.

தெற்கின் கரையோர நகரமான பெச்சாபுறி என்னும் இடத்தைச் சேர்ந்த சீன வம்சத்தவரும் செல்வந்தக் கனவானுமான யுதொங் என்ற அரசன் அயுத்தயா நகருக்கு செல்வம் பெருக்கச் சென்றார் எனவும் ஒரு கதை உண்டு. அது அயுத்தயா ராசதானி அல்லது சயாம் என அழைக்கப்பட்டது. சுகோதை நகருக்குப் பின் இரண்டாவது சயாமிய நகரமாக விளங்கிய அயோத்யாவின் எச்சங்களாக நிற்கும் உயர் கோபுரங்களும் மாபெரும் மடாலயங்களும் அதன் எழுச்சி பெற்ற உன்னத காலத்தின் அடையாளங்களாக விளங்குகின்றன.

கி.பி. 1350 ஆம் ஆண்டில் யு தொங்கினால் உருவாக்கப்பட்ட இந்நகர் கி.பி. 1600 ஆம் ஆண்டளவில், சுமார் 3 இலட்சம் மக்களைக் கொண்டிருந்தது எனவும் கி.பி. 1700 ஆம் ஆண்டளவில் அதன் மக்கட்தொகை 10 இலட்சம் அளவை எட்டிய அவ்வேளை உலகின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாக விளங்கியதெனவும் கூறப்படுகின்றது. எனினும் அயுத்தயா காலப்போக்கில் பெரும் பெரும் சோதனைகளைச் சந்தித்தபோதும் உலகின் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு நகரமாகவும் விளங்கியுள்ளது என்பதை அதன் வரலாறு காட்டுகிறது. இருப்பினும் அயுத்தயா ஒரு ஐக்கியப்பட்ட ராஜ்யமல்ல. அங்கு பல சுய ஆட்சியுள்ள பகுதிகளும், கிளை மாகாணங்களும் இருந்தன. இவை ஆட்சி வட்டத்தின் அல்லது மண்டல அமைப்பின் கீழ் மன்னனுக்கு கட்டுப்பட்டவையாக இருந்தன. இந்தப் பகுதியில் அயுத்தயா அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது உள்ளூர் ஆட்சியாளர்கள் தமது சுதந்திர படைகளுடன் ஆட்சி செய்தனர். எனினும் நகரத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அல்லது போர் ஏற்படின் மன்னனுக்கு உதவ வேண்டிய கடமைப்பாட்டில் இருந்தார்கள். இந்தச் சிற்றரசுகளிலும் எழுச்சிகள், சண்டைகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. அவற்றினை அயுத்தயா அரசு அடக்கி விடும். குறுநில மன்னர்கள் அரசு கட்டில் ஏறும் விடயத்தில் தகராறு தோன்றும்போது அவர்கள் தமது படைகளைத் திரட்டி தமது உரிமைகளைக் கோரிச் செல்வதுண்டு. இவை இரத்தம் சிந்தும் சில புரட்சிச் சதிகளாகவும் வெடித்துள்ளன.

15 ஆம் நூற்றாண்டில் இருந்து ஆயுத்தயா, மலாக்கா குடா நாட்டினை கைப்பற்ற ஆர்வம் காட்டியது. அப்போது மிகப் பெரிய வர்த்தகத் துறைமுகமாக விளங்கிய மலாக்கா தனது இறைமையைக் கோரி நின்றது. சில தடவைகள் மலாக்கா மீது அயுத்தயா போர் தொடுத்த போதும் வெற்றி காண முடியவில்லை. காரணம் சீனாவின் இராணுவ உதவியுடன் மலாக்கா தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. சீனாவின் உதவியுடன் செழிப்புற்று விளங்கிய மலாக்கா 1511 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது.

16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பர்மாவின் ரொங் அரச வம்சத்தினரால் அயுத்தயா அடிக்கடி தாக்கப்பட்டது. பர்மியரின் இரண்டாம் முற்றுகையை அடுத்து, 1564 ஆம் ஆண்டு அரசனான மகாசக்கரபத் சரணாகதி அடைய வேண்டியதாயிற்று. பெகு (Pegn) நகருக்கு அரச குடும்பத்தினர் வற்புறுத்தலின்பேரில் கொண்டு செல்லப்பட்டனர். இதன் பின்னரும் இரு நாடுகளுக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


இடையில் போர்கள் இடம்பெற்றன. வெளிநாடுகளுடன் அயுத்தயா நடத்திய வர்த்தகத்தின் விளைவாக வெளிநாட்டு ஆடம்பரப் பொருட்கள் மாத்திரமன்றி புதிய போர்க் கருவிகளும் அயுத்தயாவுக்கு பெருமளவில் வந்து சேர்ந்தன.

17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மன்னன் நராய் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது, அயுத்தயா மிகச் செழிப்பான நாடாக விளங்கியது. அயுத்தயா மன்னர்கள் பூரண செல்வாக்குள்ள அரசர்களாக விளங்கினர். இந்து, பௌத்த சமயத் தத்துவங்களின் அடிப்படையில் மற்றும் பாரம்பரியமாக வந்த தலைமைத்துவத்தில் இருந்து அவர்களது ஆட்சி அதிகாரக் கோட்பாடு உருவானது.

அரசன் சகல அதிகாரங்களையும் கொண்ட சக்கரவர்த்தியாக விளங்கினான். இந்து மரபின்படி விஷ்ணுவின் அவதாரமாக அரசன் விளங்குகின்றார். பௌத்த நம்பிக்கையின் படி அரசன் தர்மத்தைக் கடைப் பிடித்து ஒழுகும் தர்மராஜாவாகக் கருதப்பட்டான். அரசனின் உத்தியோக பெயர்களும், இந்திரன், விஷ்ணு, சிவன் ஆகிய இந்துக் கடவுள்களின் பெயர்களைக் கொண்டிருந்தன. சிவன் உலக நாயகனாதலால் முடி சூட்டு விழா, பிராமணர்களால் வழிநடத்தப்பட்டது. கோட்பாடுகளின் படி மக்களைக் காப்பாற்றும் பெரும் கடமையும், தீமைகளை ஒழிக்கும் கடமையும் அரசனைச் சார்ந்ததேயாகும்.



இந்து சமயத்துக்குப் பதிலாக வந்த பௌத்த செல்வாக்கின்படி அரசன் போதிசத்துவர் அதாவது புத்தரைப் போன்றவராவார். புத்த மதத்தை பின்பற்றிக் காப்பாற்றும் பொறுப்பு அரசனின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். அரசன் புத்த கோயில் ஒன்றைக் கட்டுவது அவனது கட்டாய கடமையாகும். மக்களைப் பொறுத்தவரை அரசன் என்பவன் பூமியை ஆள்பவனாகும். அரசனுடன் பேசும் போது, அல்லது அரச குடும்பத்தைப் பற்றி பேசும் போது, அரச மரியாதையாக அரச பாஷையை (சமஸ்கிருதம், ராஜ சப்த - அரச குடும்ப மொழி) பேச வேண்டும். அரசு அதிகாரிகள், இராணுவத் தளபதிகள் ஆகியோர் வழங்குகின்ற சேவைக்கு வேதனமாக அரசன் நெல் வயல்களை ஒதுக்கிக் கொடுப்பான். உத்தியோகத்தர்களுக்கான வயல் ஒதுக்கீட்டு அளவு அவனது அதிகாரத்திலுள்ள பொது மக்களது எண்ணிக்கையைப் பொறுத்திருக்கும்.



**அட்டைப்பட விளக்கம் :**
**தாய்லாந்தில் அயுத்தயா பண்டைய நகரில் அமைந்திருக்கும் சாய்வத்தனாரம் ஆலயத்தின் கோபுரத் தோற்றம். 35மீற்றர் உயரமுள்ள இந்த ஆலயம் ஹமர் கட்டடக் கலையில் கட்டப்பட்டுள்ளது. செவ்வக வடிவிலான மேடையில் நான்கு பிரகாரங்களையும் இந்த கோபுரம் கொண்டமைந்துள்ளது.**

சமயக் கல்வி மற்றும் கலாசார நிலையங்களாக பௌத்த மடாலயங்கள் விளங்கின. இக்காலகட்டத்தில் சயாமில் முதலாவது சீனர் வந்து குடியேறத் தொடங்கியதை தொடர்ந்து நாட்டின் பொருளாதார வாழ்வில் சீனர்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதுவோர் நீண்ட காலப் பிரச்சினையாகத் தலையெடுத்திருந்தது.

16 ஆம் நூற்றாண்டளவில் அயுத்தயாவின் உள்நாட்டு வர்த்தகத்தில் சீனர்கள் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்ததுடன் குடியியல் மற்றும் இராணுவ சேவையில் முக்கிய பதவியைப் பிடித்திருந்தார்கள். இங்கு குடியேறிய சீனர்களின் பெரும்பாலானவர்கள் தாய் பெண்களையே மனைவியாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரணம் சீனாவை விட்டு, அவர்களுடன் வந்த மனைவியர் மிகக் குறைந்த தொகையினராகும். தர்ம சாஸ்திரத்தை உருவாக்குவதில் முக்கியமானவனாக விளங்கியவன் முதலாவது ராமதிபோதி அரசனாகும். இந்துமத நெறிகள் மற்றும் மரபு ரீதியான தாய் வழமைகளை அடிப்படையாக வைத்து இந்தச் சட்ட ஒழுங்குமுறை உருவாக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை தர்மசாஸ்திரமே தாய் சட்ட ஆவணமாக விளங்கியது.





17ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மிஷனரிகள் வந்து சேர்ந்ததைத் தொடர்ந்து சில சிறிய பகுதிகளில் கத்தோலிக்க மதம் பின்பற்றப்பட்டது. அயுத்தயாவில் அரிசி மிதமிஞ்சி இருந்தாலும், இயற்கை அனர்த்தங்கள் அல்லது போர் ஆகியவற்றின் காரணமாக காலத்துக்குக் காலம் அரிசி ஏற்றுமதிக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆடம்பர பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் வாங்குவதற்காக, அரிசி பண்ட மாற்றுப் பண்டமாக பயன்படுத்தப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களுடனான வர்த்தகம் உச்ச நிலையை அடைந்தது. முக்கியமாக டச்சுக்காரர்களுடன் வியாபாரம் மிகச் செழிப்பாக நடைபெற்றது. சீனா மற்றும் ஜப்பானில் இருந்து வரும் வர்த்தகர்களின் முக்கிய இடமாக அயுத்தயா விளங்கியது. டச்சு கிழக்கிந்தியக் கம்பனியின் வர்த்தகம் தற்போது உள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் அயுத்தயாவின் பொருளாதாரம் வேகமாக வீழ்ச்சி கண்டது. 1788 இல் பர்மியர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இடம்பெற்ற போரில் அந்நாட்டின் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சி அடைந்தது. போர்களுக்குப் பின், நாடு மிகவும் செழிப்புக் கொண்டது. கலை, இலக்கியம், கல்வி ஆகியன எழுச்சி கண்டன.



பழைய நகரத்திற்குப் பக்கத்தில் அயுத்தயா நகரம் மீள உருவாக்கப்பட்டு அயுத்தயா மாகாணத்தின் தலைநகராக்கப்பட்டது. அயுத்தயா நகரத்தின் அழிவையடுத்து, பழைய அயுத்தயா நகரம் யுனெஸ்கோவினால் உலக மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

**கங்கா -**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தன மரத்திலான அரிய கலை வடிவங்கள்

- சுபாஷினி பத்மநாதன்



சந்தன மரங்கள் மகத்துவம் மிக்கவை. மனித வாழ்வில் இன்றியமையாதவை. மத அனுஷ்டானத்தில், ஆன்மீகத்தில் சுய நம்பிக்கையின் சின்னமாக சந்தனம் திகழ்கின்றது. இதற்கு விஞ்ஞான பூர்வமான மகிமையும் உண்டு.

கிழக்காசியாவில் உள்ள மரங்களில் மிகவும் விலையுயர்ந்த மரம் சந்தன மரமாகும். இதன் தாயகம் இந்தியா ஆகும். இந்தியாவின் கிழக்குப் பகுதி மற்றும் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் காடுகளில் இம்மரம் மிகுந்து காணப்படுகின்றது. இந்தியா தவிர அவுஸ்திரேலியா, சீனா, ஹாவாய் தீவுகளிலும் சந்தன மரம் வளர்கின்றது. கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் முதல் 4000 மீட்டர் வரை உள்ள நிலப் பகுதிகளில் இது செழிப்பாக வளரக் கூடியது. மரத்தின் வைரம் பாய்ந்த நடுப்பகுதியும், வேர்களும் மிகுந்த மணம் கொண்டவையாகும். இவையே சந்தன எண்ணை தயாரிப்புக்கு பயன்படுகின்றன.

சந்தன மரம் 12 முதல் 40 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இது தனித்து வளராது. வேறு மரத்திற்கு அருகில் தான் வளரும். ஏனைய மரங்களின் வேர்களில் இருந்து தனக்கு வேண்டிய ஊட்டச் சத்துகளைப் பெற்றுக் கொள்கிறது. மரத்தின் வைரம் பாய்ந்த கட்டைப் பகுதி எண்ணெய்ச் சத்து நிரம்பியது.

கீழைத்தேய சந்தன மர உற்பத்தியில் முக்கிய இடம் பிடித்துள்ள நாடு இந்தியாவாகும். இந்திய சந்தன மரங்கள் தரம் மிக்கவையாகவும், நீண்ட காலம் நிலைத்து நிற்பவையாகவும், உயர்ந்த நறுமணம் கமழ்பவையாகவும் விளங்குகின்றன. நாட்டிற்கு நாடு சந்தன மர உற்பத்தியும், உபயோகமும், மரப் பயன்பாடும் மாற்றம் பெறுகின்றது. உதாரணமாக அவுஸ்திரேலியாவில் உயர்ந்த வாசனைத் திரவிய உற்பத்திக்காக சந்தன மரம் பயன்படுவதைக் குறிப்பிடலாம். இந்தியாவில் நவீனரக அழகு சாதனப் பொருட்களின் பயன்பாட்டிற்கே சந்தன மரங்கள் பயன்படுகின்றன. குறிப்பாகச் சந்தனப் பவுடர், சந்தனச் சவர்க்காரம், சந்தன முகமெருகூட்டு பாதுகாப்புக் குழம்பு என்பன சந்தன உற்பத்தியின் அடிப்படை அழகு சாதன பொருட்களாகும்.

குளிர்ச்சிக்கு மறுபெயர் எனத் திகழும் சந்தனத்திற்கு இந்து கலாசாரத்தில் முக்கியமான இடம் அளிக்கப்பட்டு உள்ளது. மதச் சடங்குகளிலும், வரவேற்பு போன்ற நல் முகூர்த்தங்களிலும் சந்தனம் கொடுப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இச்சந்தனமானது முற்காலத்தில் சந்தன மரக் கட்டையை சந்தனக் கருங் கல்லில் அரைத்து சந்தன குழம்பு பெறப்பட்டு ஆலய தேவைகளுக்குப் பயன்பட்டு வந்த போதும், இன்றைய நடைமுறையில் சந்தன மரம் பெரிய அளவில் பொடியாக்கப்பட்டு, பொதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்யப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. இச்சந்தனப் பொடியை தண்ணீரில் குழைத்துப் பயன்படுத்த முடிகின்றது.

எங்கும் நறுமணம் பரப்பி, அனைவருக்கும் குளிர்ச்சி நல்கும் சந்தனம் நமக்கு ஒரு வகையில் முன்னுதாரணமாக திகழ்கிறது. சந்தனம் தான் தேய்ந்து பிறருக்கு மணம் பரப்புகிறது. கோயில் தேவைகளுக்கு மட்டுமன்றி சுப மூகூர்த்தங்கள், சுப காரியங்கள், மத வைபவங்கள் என்பனவற்றுக்கு சந்தனப் பயன்பாடு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

சந்தனத்தில் வெள்ளை, மஞ்சள், சிவப்பு என மூன்று வகைகள் உள்ளன. இவற்றுள் செஞ்சந்தனமே மருத்துவக் குணமிக்கதாகும். குறிப்பாக தோல் சம்பந்தமான நோய்களுக்கும், உடல் உஷ்ணத்தைத் தணிப்பதற்கும் சந்தனம் பயன்படுத்தப்படுகின்றது. நோய்க் கிருமிகள், தோல் வியாதிகள் போன்றவற்றை அழிப்பதும், குளிர்ச்சி அளிப்பதும், இதயத்திற்கு நலன் அளிப்பதும், நாவின் ருசியின்மையை அகற்றுவதும், பித்தத்தை முறைப்படுத்துவதும் சந்தனத்தின் குணங்களாகும் என்று ஆரோக்கிய சாஸ்திரம் கூறுகிறது. பலம், நிறம், உடல் நலம், நல்ல மன உணர்வு, செல்வம் ஆகியவற்றை சந்தனம் அளிப்பதாகக் கூறப்படுகிறது.



உலகளாவிய ரீதியில் சிற்பக்கலைக்கான சிறப்பான ஊடகமாகவும் சந்தனம் விளங்குகின்றது. எழில் மிக்க, விலை மதிப்புள்ள சந்தன மரச் சிற்பக்கலையானது தனித்துவம் மிக்கது. நுண்ணிய எழில் மிகு சிற்பக்கலைப் படைப்புகளாக இவை காணப்படுகின்றன. வண்ண ஊட்டம் அளிக்கப்படாத சிற்பியின் கலை வனப்பிற்கும், கை வண்ணத்திற்கும் மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டு சந்தனச் சிற்பக்கலை வடிவங்கள் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய சந்தனம் மர உற்பத்திப் பொருட்கள் கலை வனப்புடன் செதுக்கக் கூடியனவாகும். மிகச் சிறியச் சிற்பம் முதல் சுமார் ஒரு அடிக்கு உட்பட்ட சிற்பங்கள் சந்தன மரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாகக் யானை போன்ற உருவங்கள், அழகுணர்ச்சி ததும்பும் தெய்வ உருவச் சிற்பங்கள், கை விசிறிகள், சதுரங்க விளையாட்டு உருவங்கள், பேனாக்கள், பென்சில்கள், அலங்கார தட்டங்கள், சுவரில் தொங்கவிடப்படும் வட்ட வடிவான அலங்கரிப்புத் தட்டங்கள், சிறு பேழைகள் போன்றன சந்தன மர உருவங்களாக இடம்பெறுகின்றன. இவை தவிர அலங்கார மணிக்கட்டுப்பட்டிகள், சீப்புகள், கழுத்து அணிகள், வளையல்கள், புடவை அலங்கரிப்புப் பொத்தான்கள் என்பன முக்கியமானவை. இவை தவிர ஆங்காங்கே சில மகாபாரத, இராமாயண கதைகளை எடுத்தியம்பும் சில சித்திரிப்புச் சிற்பங்களையும் சந்தன மரச் சிற்பிகளின் வடிவமைப்பில் காணக் கூடியதாகவுள்ளது.

சந்தன மரக் கட்டைகளில் செதுக்கப்பட்டுள்ள இந்து மத வழிபாட்டுச் சிற்பங்கள் நீண்ட காலமாக நிலைத்து நிற்கக்கூடியதுடன், நறுமணம் கமழும் ஆன்மீக உயிரோட்டம் பரப்பும் ஊடகமாகவும் காணப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு நாட்டார் கலைகளிலிருந்து அருகிவரும்
# பறைமேளக் கூத்து

ஷர்மிளா ரஞ்சித்குமார், விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்



சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மட்டக்களப்பு வாழ்வியலில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் பின்னரான சோழராட்சிக்காலம் முதல் கொண்டு பண்டைத் தமிழர் தம் பாரம்பரிய கலைவடிவங்கள் மட்டக்களப்பில் பரவியுள்ளமைக்கான சான்றுகள் பரவலாகவே தென்படுகின்றன. இக்காலச் சூழலில் தென்பட்ட தமிழ்க் கிராமிய கலைவடிவங்கள் சில கால மாறுபாட்டுச் சூழலில் அவற்றின் தனித்தன்மையிலும் நிகழ்த்துகைப் போக்கிலும் சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்ட போதும் மட்டக்களப்பில் அவை தம் மரபுத் தன்மையைக் கட்டிக் காத்தே வந்துள்ளன. இங்கு பொதுவாக கிராமிய நடனங்கள் சடங்கியல் தன்மை மிக்கவை என்பதால் அக்கலை ஆடப்படும் இடமும் சமயச் சடங்குச் சூழலையே அடித்தளமாக கொண்டு அமையும். கிரேக்க ஐரோப்பிய நாடுகளினது நாடகக்கலையானது சடங்குகளிலிருந்து தோற்றம் பெற்றதைப் போன்று கீழ்த்திசை நாடுகளின் நடனக்கலையும் புராதன கால சடங்குகளில் இருந்தே உருவாகி இருக்க வேண்டும். இதன்படி சடங்குகளிலிருந்தே கலைகள் தோற்றம் பெற்றன எனலாம்.

கவிக்கோ வெல்லவூர் கோபால் அவர்கள் மலையாள நாடும் மட்டக்களப்பும் என்ற நூலில் சடங்குகளிலிருந்து நாடகம் தோற்றம் பெற்றிருப்பது பொதுவான கருத்தாக அமையினும் நாடகத்திலிருந்து சடங்கு தோற்றம் பெற்றிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் மட்டக்களப்பில் துரோபதையம்மன் சடங்கின் தோற்றுவாய் இதற்கு உதாரணமாக அமையும் எனவும் கூறுகின்றார். மேலும் அவர் மாருதசேனனுக்கு பின் (பன்குடாவெளி கண்ணாப்போடி) 1540 வாக்கில் மட்டக்களப்பின் சிற்றரசுப் பொறுப்புக்கு வந்த அவனது மகன் எதிர்மன்ன சிங்கனின் காலத்தில் கொங்கு நாட்டிலிருந்து தனது நாடகக் குழுவோடு மலையாள நாட்டிற்கும் பின்னர் மட்டக்களப்பிற்கும் வந்த தாதன் கடற்கரை வெளியில் ஆலமர நிழலில் தொடர்ந்தாற் போல் பதினெட்டு நாட்கள் மகாபாரதக் கூத்தை ஏற்பாடு செய்தான் எனவும் அதன் அடிப்படையிலேயே அங்கு துரோபதையம்மன் வழிபாடு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதோடு பாண்டவரின் இருப்பான அந்த இடம் பாண்டிருப்பானதெனவும் கூறுவதையும் நாமிங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு கிராமிய கலைவடிவங்களை நாம் இரண்டு பிரிவுகளாக பிரித்து நோக்குவோம். அவை (1) செந்நெறி சார்ந்துவரும் வடிவங்கள், (2) செந்நெறி சாராத வடிவங்கள். செந்நெறி சார்ந்த வடிவம் என்றால் ஓரளவிற்கேனும் செந்நெறி விதிமுறைகளைக் கொண்ட கலைவடிவங்களாகத் தென்படுபவை. உதாரணத்திற்கு வடமோடி மற்றும் தென்மோடிக் கூத்துக்களைக் குறிப்பிடலாம். இவை கூத்தின் ஆடல், பாடல், அவைக்காற்று முறை, உடை ஒப்பனை, தரு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தென்மோடி, வடமோடி என இரு பிரிவாக வேறுபடுகின்றன. செந்நெறி சாராத கலை வடிவங்கள் என்றால் எழுதப்படாத இலக்கணம் கொண்டவையாகும்.

செந்நெறி சாராத கலை வடிவங்களாவன கும்மி, கோலாட்டம், கரகம், காவடி, பறைமேளக்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன்கூத்து, புலியாட்டம், கரக நடனம் என்பனவையாகும். இவற்றில் கும்மி, கோலாட்டம், கரகம், காவடி போன்ற நடனங்கள் சாதி வேறுபாடுகளின்றி ஆடப்படும். மட்டக்களப்பில் பொதுவாக திருவிழாக்களின் போதும் சாமி புறப்பாட்டின் போதும் ஊர்வலங்கள், வரவேற்பு வைபவங்கள் ஏன் மேடைநிகழ்வுகளில் கூட இவை ஆடப்படுகின்றன. ஆட்ட முறைகளில் ஒற்றுமை காணப்பட்டாலும் அவர்கள் கைகளில் வைத்திருக்கும் பொருட்கள் வேறுபடும். கும்மி கைகளினால் வட்டமாக நின்று கொட்டுவார்கள். கோலாட்டம் கைகளில் வண்ணக் கோல்கள் வைத்து தாமும் தட்டியும் மற்றவருடைய தோளில் தட்டியும் ஆடுவார்கள். கரகம் பொதுவாக தெய்வ வழிபாட்டு நடனமாக ஆடப்பட்டுவருகிறது. கரகாட்டம் தலையின் மீது கரகம் வைத்து ஆடப்படுவதைக் குறிக்கும். இதில் கைகளில் செம்பைப் பிடிக்காமல் ஆடுவார்கள். இதுவே இந்த ஆட்டத்தின் விதிமுறையாகும். காவடியை கையில் வைத்து ஆடுவது காவடியாகும். மட்டக்களப்பில் பொதுவாக சுவாமி மீது நேர்த்தி வைத்து காவடி ஆடுவது வழக்கம். மேலும் பறை மேளக் கூத்து, வசந்தன் ஆட்டம், மகுடிக் கூத்து, புலியாட்டம் போன்ற நடனங்களும் இங்கு ஆடப்படுவதைக் காணலாம்.

### பறை மேளக்கூத்து ஆடுவோர்களது சமூகப்பின்னனி

பறை என்ற கருவி கொண்டு ஆடும் கூத்து பறை மேளக்கூத்தாகும். மட்டக்களப்பில் உள்ள பறையர் என்ற சாதியினராலேயே இக் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. இச் சாதியினர் களுதாவளை, புன்னைக்குளம், அம்பிலாந்துறை, கோளாவில், கரவாகு போன்ற இடங்களில் வாழ்ந்திருந்தாலும் கூட களுதாவளையிலே மிகச் செறிவாக வாழ்கின்றார்கள். தற்போது களுதாவளையில் பறைமேளக்கூத்தில் மிகப் பிரபல்யமானவராக திரு.க.பரசுராமன் திகழ்கின்றார். அவர் இக் கூத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் தற்காலத்தில் முறைப்படி இக் கூத்து ஆடத்தெரிந்தவர்கள் களுதாவளையில் 7 அல்லது 8 பேர் மட்டுமே உள்ளதாகக் குறிப்பிட்டார். இது இக்கலை மறைந்து போய்க் கொண்டு இருப்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மேலும் அவருடைய முன்னோர்களைப்பற்றி வினவுகையில் தனது தந்தை காளியும் தனது மாமனாரான ஆனைக்குட்டி என்பவரும் இக் கூத்தாட்டத்தில் தலை சிறந்தவர்கள் எனக் குறிப்பிட்டார். பறை மேளக் கூத்து நிகழ்த்துவோரின் தலைவன் மூப்பன் என அழைக்கப்படுவார். இவரே கலைஞர்களை திரட்டி நிகழ்விற்கு அழைத்து செல்வார். அதில் கிடைக்கும் ஊதியத்தையும் மூப்பனே எல்லோருக்கும் பிரித்துக் கொடுப்பார். மட்டக்களப்பு மரபு வழி நாடகங்களை ஆய்வு செய்த பேராசிரியர் சி.மௌனகுரு தனது மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் என்ற நூலில் 'இப் பறையர் என்ற இனத்தினர் தாங்கள் முக்குவர்கள் வரும் போது தாங்களும் அவர்களுடன் மட்டக்களப்பிற்கு வந்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். முக்குவரைப் போல இவர்களிடமும் குடி முறைகள் உண்டு. இதனை இவர்கள் குடி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாமல் வகுத்துவார் (வயிற்றுவார்) என்று அழைக்கின்றனர். அலையச் சாம்பான் வகுத்துவார், வேலியாச்சி வகுத்துவார், கோனதச் சாம்பான் வகுத்துவார், கந்த மூப்பர் வகுத்துவார், குஞ்சாத்தை வகுத்துவர் என ஐந்து வகுத்துவார் பிரிவுகள் இவர்களிடம் காணப்படுகின்றன. குடிக்குக் குடி திருமணம் செய்யாதது போல வகுத்துவாருக்குள் வகுத்துவார் திருமணம் செய்வதில்லை' என எழுதியுள்ளார்.

களுதாவளையில் இன்றைய தலைமுறையினர் இப்பறை மேளக் கூத்தை ஆடுவதும் வாசிப்பதும் இல்லை. இது கவலைக்குரிய விடயமாகவே அமைகின்றது. அவர்கள் இப் பறைமேளக் கூத்தை கற்றால் தாம் சிறுமையானவர்கள் எனவும் மற்றவர்களுக்கு கீழ்ப்படிந்து செல்ல வேண்டும் எனவும் நினைக்கின்றார்கள். இதனை அடிமை முறையின் சின்னம் என இளம் தலைமுறையினர் கருதுகின்றனர். அவர்கள் சார்ந்த பொது மன்றங்களின் மூலம் இளைஞர்கள் இக் கூத்தை தாம் கற்கவோ வாசிக்கவோ கூடாது என முடிவெடுத்துள்ளனர். ஆதலால் இன்று களுதாவளையில் இப் பறைமேளக் கூத்து ஆடப்படுவதில்லை. பழைய தலைமுறையினரே ஏனைய இடங்களுக்குச் சென்று சேவகம் செய்கின்றனர். ஊதியமும் பெறுகின்றனர்.

ஆரம்பகாலத்தில் பறை மேளக்கூத்தை ஆடுபவர்கள் மேலும் தங்கள் வருமானத்திற்காக தோட்டச் செய்கையில் ஈடுபட்டனர். எனினும் அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழேயே தங்கள் வாழ்க்கையை நடாத்தி வந்தனர். புது வருடப் பிறப்பின் போது ஒவ்வொரு வீடாக வந்து ஆடிப் பணம் பெற்று செல்லுமிவர்கள் மரணவீடு, திருவிழா, திருமண வீடு எனப் பறை அடித்தும் ஆடியும் பணம் சம்பாதித்தனர்.



**பறை மேளக் கூத்தின் ஆட்ட முறை**

பறை மேளக் கூத்து ஆடுபவர்கள் இடுப்பில் பறையைக் கட்டி பறையை அடித்துக்கொண்டே ஆடுவார்கள். இருவரோ அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களோ பறையில் ஒலியை எழுப்பிய வண்ணம் அந்த ஒலிக்கேற்ப ஆடுவதே பறை மேளக் கூத்தாகும். பொதுவாக பறைமேளத்துக்கான தாளத்தை அக்கூத்து நிகழும் இடத்தை மையப்படுத்தி மூன்றாகப் பிரிக்கலாம். கோயிலில் சேவகம் செய்தல், மரண வீட்டில் சேவகம் செய்தல், மங்கள வீட்டில் சேவகம் செய்தல் என்பனவே அவை. ஒவ்வொன்றிற்கும் ஆறு தாளங்களாக மொத்தம் 18 வகையான ஆட்டத் தாளக் கட்டுக்கள் இதில் காணப்படும்.

**1.கோயிலில் சேவகம் செய்யும் தாளம்**

1. ஆரம்பத்தாளம்
2. அழைப்புத்தாளம்
3. ஆராதனைத் தாளம்
4. ஆட்டு விக்கும் தாளம் (தெய்வங்களை ஆட்டுவித்தல்)
5. கோயில் சுற்றும் தாளம்
6. வீதி வலம் வரும் தாளம் (காவல் பண்ணுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.மரண வீட்டில் சேவக தாளம்**

1. ஆரம்பத்தாளம்
2. அழைப்புத்தாளம்
3. அரட்டுத் தாளம் (இறந்தவரை கொண்டுசெல்லும் போது)
4. நடைத்தாளம்
5. சந்தி கூறல் தாளம்
6. சுடலைத் தாளம் (சுடலையில் அடிக்கப்படுவது)

**3.மங்கள வீட்டில் சேவகம் செய்யும் தாளம்**

1. ஆரம்பத்தாளம்
2. அழைப்புத்தாளம்
3. போக்குவரத்து தாளம்
4. ஆட்டுத்தாளம்
5. வரிசைத்தாளம்
6. முடிவுத் தாளம்

இவ்வாறாக 18 தாளங்கள் அடித்து பறை மேளக் கூத்து ஆடப்படும் இவற்றைவிட ஆட்டத்தாளங்கள் சிலவும் காணப்படுகின்றன. அவையாவன கோணங்கித் தாளம், தட்டு மாறி அடிக்கும் தாளம், பூசைத் தாளம், வரிசைத் தாளம், ஆடிக்களைத்த பின் ஓய்வெடுக்க ஆடும் தாளம் என்பவையே அவை. பலர் வரிசையாக நின்று அடிக்கும் போது அவர்கள் சில ஜதிகள் போன்று சொற்கட்டுகளுக்கு ஏற்ப வாசிப்பர்.

*‘ டண்டக டண்டக டண்டக டண்டக*
*டன் டன் டன் டண்டக டண்டக’*
*‘ டொம் டொம் டொம் டொம் டொம்*
*டொம் டொம் டொம் டொம்’*
‘ தேந்தேன் தின தின்னா தெந்தேன் தினா
தேந்தேன் தின தின்னா தேந்தேன்’

சொற்கட்டுக்கள் பொதுவாக இவ்வாறு அமைந்திருக்கும். வாசிப்பவர்கள் சொற்கட்டை நினைவில் வைத்திருக்க சில சொற்களைக் கூறுவர் இங்ஙனம் ஆடும் போது மரண வீடுகளில் அடிக்கும் தாளம் ‘கட்டுங்கோ சுருட்டுங்கோ சுடலைக்குக் கொண்டு போங்கோ’ இவ்வாறாக அமைந்திருக்கும்.

புது வருடப் பிறப்பிலும் விசேட நாட்களிலும் பெரிய மனிதர்களின் வீட்டிற்கு முன்னால் உள்ள வெளியில் இவர்கள் பறை அடித்து பாடி ஆடுவார்கள்.

*‘தின நான தின்னான தின்னானா தின தின்னானா’*
*‘தின ன தெனாதின தெந்தின தின்னானா தின தின்னானா’*
*‘திங்கள் சூடும் திருவுடை மைந்தனே*
*தேவரே திருமால் மருகனே*
*துங்கலங்க கரிசோல முகவனே*
*தொல்லை இன்றி வரும் துயர் மாற்றுவாய்’*

இவ்வாறாக பாடல் அமைந்து இருக்கும். இந்த ஆடல் பாடலைப் பார்த்து மக்கள் இவர்களுக்கு பணம் கொடுப்பர். தற்காலத்திலும் இந்த வழக்கு காணப்படுகின்றது. ஒரு சிலர் வறுமையின் காரணமாக இன்றும் இதையே தொழிலாகச் செய்கின்றார்கள். இவர்கள் மாரியம்மன், காளி போன்ற தெய்வங்களை வணங்குகின்றனர். மந்திர வேலைகளிலும் சிறப்பானவர்களாக கருதப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் பெரிய மனிதர்கள் கிராமத்திற்கு வரும் போது இவர்கள் பறை அடித்து வரவேற்று வந்தனர். இதற்கு பயன்படுத்தப்படும் பறை இராசப் பறை எனப்படும். பெரிய குடிகள் மத்தியில் சேவகம் செய்யச் செல்லுமிடத்து இராச பறையை எடுத்துச் செல்வர். இப்பறைக்கு சுருதி கிடையாது. டன் என்ற ஒலியே கேட்கும். ஒரு பக்கமுள்ள தொப்பையை கையால் அடித்துக்கொண்டும் மறு கையால் கம்பால் உச்சத்தில் ஓசையை எழுப்பியும் பறையை வாசிப்பர். ஒரே பக்கம் மாத்திரம் வாசிக்கக்கூடிய இரண்டு பறைகளை இணைத்துக் கட்டி கழுத்தில் தூக்கிக் கொண்டு கம்பால் அடித்து வாசிக்கும் வழக்கமும் இவர்களிடையே காணப்படுகின்றது. இதை சிறு பறை என்று அழைப்பர். இதற்குப் பக்க இசையாக குழல் ஊதப்படும். இதை சொர்ணாலி என்று அழைப்பர். பறை மேளக் கூத்து ஆடுபவர்கள் அலங்காரம் செய்ய மாட்டார்கள். வேஷ்டியை அல்லது சேலையை இடுப்பில் கொசுவம் கட்டி மேற் சட்டை அணியாமல் ஆடுவது இவர்கள் வழக்கமாகும்.

தற்காலத்தில் மட்டக்களப்பில் இலக்கிய விழாக்களிலும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக்களிலும் பறை மேளக் கூத்து வரவேற்புக் கூத்தாகவும், மேடை நிகழ்வாகவும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இக் கூத்து அருகிக்கொண்டு போவதற்கு ஒரு முக்கிய காரணம் பறையர் என்ற ஒரே சாதி மக்களால் மட்டும் இக் கூத்து ஆடப்பட்டமையே. இன்றுவரை இக்கூத்து மற்றைய சாதியினரைச் சென்றடைய வில்லை. தற்காலத்தில் பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும் மேடை நிகழ்வுகளின் இக் கூத்தின் ஆட்ட முறையிலும் உடை ஒப்பனை முறையிலும் மாற்றம் செய்து அரங்கேற்றுகின்றனர். இது வரவேற்கத்தக்கதே.

கலை என்பது ஒரு சமூகத்தின் பண்பாட்டினை பிரதிபலிக்கின்றது. எந்த ஒரு கலையும் தோன்றிய காலத்தில் எவ்வாறு இருந்ததோ அப்படியே எல்லாக் காலத்திலும் இருப்பதில்லை, இருக்கவும் கூடாது என்கின்றார் நாட்டிய விற்பன்னரான முனைவர் சே.இரகுராமன். தோன்றிய காலம் முதல் இன்று வரை கலை தன்னால் மாற்றங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்டதான போர்சூழலில் - இடப் பெயர்வு, வெளிநாட்டுப் புலப்பெயர்வு, நிலப்பறிப்பு எனத் தொடராகிக் கொண்டிருந்த வாழ்வியல் சூழலில் நமது பாரம்பரிய பெறுமதிமிக்க சொத்துக்கள் எனச் சொல்லத்தக்க மரபு வழிக் கலை வடிவங்கள் இன்றைய சமூகத்திலிருந்து விடுபட்டுப்போகும் நிலை தென்படுவதையும் காணமுடிகின்றது. இதன் காரணமாகவே தான் போர்ச் சூழல் முடிவுற்ற பின்னரான இக்காலகட்டத்தில் இக்கலை வடிவங்கள் படிப்படியான வளர்ச்சியை எட்ட ஓரளவேனும் வாய்ப்புள்ளமையை கருத்தில் கொண்டு அதனை நாம் சாதகமாக்க வேண்டிய கடமைப்பாட்டிலுள்ளோம்.

**(படங்கள்: யாழ்ப்பாண இசைவிழா 2011 நிகழ்வில் எடுக்கப்பட்டவை)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆங்கிலோ - சாக்சன் மக்களே இங்கிலாந்து நாட்டை கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் அமைத்தார்கள். இவர்களின் வழிவந்த சக்கரவர்த்தி அல்பிரட் என்பவர் ஒன்பதாம் நூற்றாண்டில் தனக்கென பிரத்தியேகமாக மிகவும் உயர் தரத்திலான தங்கத்தினால் அணிகலன் ஒன்றைத் தயாரித்திருந்தார். இதைத் தயாரித்தவர் ''மன்னன் அல்பிரட்டின் ஆணைப்படி என்னால் உருவாக்கப்பட்டது'' ("AELFRED MEC HEHT GEWYRCAN") என அணிகலனின் பக்கவாட்டில் குறிப்பிட்டுள்ளார். நூற்றாண்டு காலமாக காணாமல் போயிருந்த இந்த அணிகலன் 1693 ஆம் ஆண்டு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. 'அல்பிரட் அணிகலன்' என அழைக்கப்படும் இந்த அணிகலனின் நீளம் 6.4 செ.மீ ஆகும். தற்போது ஒக்ஸ்போர்ட் அஸ்மோலன் நூதனசாலையில் இந்த விலைமதிப்பற்ற அணிகலன் வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டைய ஒலிம்பிக் போட்டிகள்

உடற் பயிற்சி விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் விடயத்தை முதலில் கண்டுபிடித்தவர்கள் கிரேக்கர்கள். தாம் வணங்கும் தெய்வங்களுக்கு வழங்கும் கௌரவமாக அவர்கள் இதனை நடத்தினார்கள். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இஸ்த்மொஸ் (Isthmus) விளையாட்டுப் போட்டிகள் இஸ்த்மொத் என்னுமிடத்தில் நடத்தப்பட்டன. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை டெல்பி என்னும் இடத்துக்கு அருகில் பைதியன் (Pythian) விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. மிகப் பிரபலமான விளையாட்டுப் போட்டிகள், தென் மேற்கு கிறீஸில் உள்ள ஒலிம்பியா நகரில், நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டன. பண்டைய ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கிரேக்கத் தெய்வங்களின் தலைவரான ஸியஸ் கடவுளைப் போற்றும் வகையில் கி.மு. 700 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. இப்போட்டிகளை அப்போது பெண்கள் பார்க்க அனுமதிக்கப்பட வில்லை. அத்துடன் இப்போட்டிகளில் கிரேக்க சுதேசியர்களே பங்குபற்ற முடியும். பழைமை வாய்ந்த அதிசயங்களில் ஒன்றாக விளங்குவது ஒலிம்பியாவில் உள்ள தங்கத்தினாலும், யானைத் தந்தத்தினாலும் உருவாக்கப்பட்ட ஸியஸ் உருவச் சிலையாகும்.



உடற் பயிற்சி விளையாட்டுக்கள் மற்றும் குத்துச் சண்டையுடன் ஒரு நாள் போட்டியாக இருந்த விளையாட்டுப் போட்டிகள் பின்னர் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு கி.மு. 472 ஆம் ஆண்டு பல்வேறு போட்டிகளுடன் 5 நாள் போட்டிகளாக நடைபெற்றன. இதில் முதல் நாள் நிகழ்ச்சியில் கடவுளுக்கு அர்ப்பணமாக உயிர்ப் பலிகள் இடம்பெற்றன.

போட்டிகளின் இடைநாளன்று கடவுளுக்கு 100 மாடுகள் பலியிடப்பட்டன. விளையாட்டு வீரர்களும் தாமாக சிறு சிறு பலிகளைச் செய்து வணங்கினார்கள். இரண்டாம் நாள் ஓட்டப்போட்டிகள், மற்ற நாட்களில் மல்யுத்தம், குத்துச்சண்டை, குதிரை ஓட்டம், நீளப் பாய்தல் , கனத்த தட்டு எறிதல் போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் 1896 ஆம் ஆண்டு இடம்பெற்றன.

போட்டிகள் முடிவடைந்த உடனேயே ஒலிம்பிக் வெற்றியாளர் தமது விருதுகளை பெறுவார். கட்டியக்காரர் வெற்றி பெற்றவரின் பெயரை அறிவித்தவுடன், கிரேக்க நீதிபதி ஒருவர், வெற்றி பெற்றவர் கையில் மரக்கிளை ஒன்றை வழங்குவார். அப்போது பார்வையாளர்கள் ஆரவாரம் செய்து மலர்களை அவர் மீது வீசுவார்கள். அவரது தலையிலும், கைகளிலும் வெற்றியின் அடையாளமாக சிவப்பு பட்டிகள் கட்டப்படும்.



போட்டிகளின் இறுதி நாளன்று உத்தியோக பூர்வ விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும். ஸியஸ் ஆலயத்தின் தலைவாசலில் உள்ள உயர்ந்த மேடையில் இந்நிகழ்வு நடைபெறும். அப் போது கட்டியக்காரர் ஒலிம்பிக் வெற்றியாளரின் பெயர், அவரது தகப்பனாரின் பெயர் ஆகியவற்றை உரத்த குரலில் அறிவிப்பார். பின்னர் நீதிபதிகள் வெற்றியாளரின் தலையில் ஒலிவ் மரக்கிளை தோரணத்தை சூட்டுவார். இவ்வாறு அக்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸியஸ் ஆலயத்தின்
இன்றைய தோற்றம்

பழைய குத்துச்சண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோ – ஆரிய கட்டிடக்கலைக்கு சிறந்த உதாரணமாக விளங்கும்

# ஹஜுறாஹோ

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள ஹஜுராஹோ கோவில்கள் உலகப் பிரசித்தமானவை. உலகினுக்கு இந்தியாவின் தனித்துவமான அன்புக் கொடை இதுவாகும். மிகச் சிறப்பான கலாசார மரபினோடும் செழிப்பான கிராமப்புறச் சூழலோடும் விளங்கும் இவ்வாலயங்கள் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலுக்கு அடுத்தபடியாக உல்லாசப் பயணிகள் மிகக் கூடுதலாக வரும் இடங்களாகும்.

கி.பி. 950 ஆம் ஆண்டில் இருந்து 1050 ஆம் ஆண்டு வரையான நூறு ஆண்டு காலப் பகுதியில் சந்தேல அரசர்களால் கட்டப்பட்ட ஹஜுராஹோ கோவில்கள் இந்தோ - ஆரிய கட்டிடக் கலைக்கு தனித்துவமானதோர் உதாரணமாகும். இந்த அரசர்கள் 85 கோவில்களைக் கட்டிய போதும் காலத்தின் சோதனைகளுக்கு நின்று பிடித்து இன்று வரை கம்பீரமாக நிற்பவை இருபத்தியிரண்டு கோவில்களாகும்.

கோவில்கள் அமைந்திருக்கும் இப் பிரதேசத்தைச் சுற்றி எட்டு நுழைவாயில்களைக் கொண்ட சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நுழைவாயிலும் இரண்டு தங்க பேரீச்ச மரங்கள் உள்ளன.


பெரும்பாலன கோவில்கள் மண், கற்களினால் பல்வேறு நிறங்களில் கட்டப்பட்டுள்ளன. மெல்லிய மஞ்சள் நிறம், இளம் சிவப்பு, இளம் மஞ்சள் ஆகிய நிறங்களில் இவை தோன்றுகின்றன. சிவன், வைஷ்ணவ, ஜெயின் ஆலயங்களாக இவை விளங்கினாலும் அவற்றைப் பார்த்துப் பழகியவர்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அந்த வேறுபாடு உடன் புலப்படாது. ஆலயங்கள் மிக உயரமாகவும் அவற்றை வேறுபடுத்த நிறையவே நடந்து செல்ல இடைவெளி உள்ளதாக விளங்குகின்றன. உள்ளக அறைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும் கிழக்கு மேற்கு வரிசையாக அவை உள்ளன.

ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒரு நுழைவாயில், ஒரு மண்டபம், முன் கூடம் மற்றும் மூலஸ்தானம் ஆகியவை உள்ளன. பெரிய கோவில்களுக்கு ஜன்னல்கள் அமைக்கப்பட்டு, இடைவெளி இருப்பதைக் காட்டுவதுடன் காற்றும் உட்புக வசதியாக செய்யப்பட்டிருக்கின்றது.

இக்கோவில்கள் உலக புராதன சின்னங்களாக உள்ளன. இந்திய அகழ்வாராய்ச்சி மதிப்பீட்டுப் பகுதியினரின் அர்ப்பணிப்பான பேணுதல் நடவடிக்கைகளின் காரணமாக இப்பழைமைக் கோவில்கள் மிகச் சிறந்த பழைமைச் சின்னங்களாக மிளிர்கின்றன.


இக்கோயில்களைப் பார்வையிட்டுச் செல்லும் போது, அவை ஒரு கருப்பொருளுடன் விளங்குவதை உணரமுடியும். அது பெண்களைப்பற்றிய ஒரு கருப் பொருளாகவே காணப்படுகின்றன. பெண்மையின் பெருமையை முகபாவனைகளூடாகக் காட்டுவதாக அமைந்திருப்பதைக் காண முடியும். ஒரு பெண் கடிதம் எழுதுவது போல, கண்களுக்கு மையிட்டுக் கொள்வதுபோல, கூந்தலை வாருவதைப் போல, மற்றும் நடனமாடுதல் தன் குழந்தையுடன் விளையாடுதல், அப்பாவியாகத் தோன்றுதல், காம நடவடிக்கைகள், புன்னகை செய்தல், அன்பு பாராட்டுதல், அழகாகத் தோன்றுதல் போன்ற பல்வகை நடவடிக்கைகளும் தோற்றங்களும் மிக விபரமாக, நுணுக்கமாகச் சிலைகளாகச் செதுக்கப்பட்டுள்ளன.

சந்தேல அரச வம்சத்தினர் தாந்திரிய மதக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் எனக் கூறப்படுகின்றது. அதாவது மோட்ச நிலையான பரிநிர்வாணத்தை அடையும் முன்னர் உலக அனுபங்களைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் அவர்கள் என்பர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்தியாவில் ஆலய கட்டிடக் கலையில் ஹஜுராஹோ ஆலயத் தொகுதி தனித்துவமானதாகத் திகழ்கின்றது. வாழ்க்கை, மகிழ்ச்சி, படைப்பாளுமை ஆகியவற்றினதும் மனிதனுக்கும் அவனைப் படைத்தவனுக்குமான இறைவனுக்கும், இறுதிச் சங்கமிப்புக்கும் ஒரு கூட்டான வெற்றிப் பாடலாகவும் இது மிளிர்கின்றது.

ஹஜுராஹோ முற்காலத்தில் ஹஜுராவாகவா என அழைக்கப்பட்டது. அதாவது பேரீச்சைத் தோட்டம் என்பது இதன் பொருளாகும். இப்பகுதி முன்னர் பேரீச்சை மரங்கள் நிறைந்த இடமாக விளங்கியது. இத்தகைய மாபெரும் கலைக் கோவில்களைக் கட்டுவதற்கு சந்தேல மன்னர்கள் ஏன் இவ்விடயத்தை தேர்ந்தெடுத்தார்கள் என்பது கேள்வியாகும்.

மிகச் சிறிய குக்கிராமமான ஹஜுராஹோவில் மதங்கள் சார்ந்த கோவில்கள் கொண்ட வளாகத்தை அமைத்து, அதன் மூலம் வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை கற்கத் தூண்டும் வகையில் கலைச் சிற்பங்களை அமைத்திருப்பதில் ஒரு நீதிக் கொள்கையை பாமரர்களையும் பின்பற்றத் தூண்டும் நோக்கம் இருந்திருக்கலாம். இந்த அரசர்களுக்கு இருந்த தளராத ஆர்வம் கோவில்களில் பிரதிப்பலிக்கப்பட்ட பல்வேறு மதக் கொள்கைகளிலும் காண முடிகின்றது. இந்த அரசர்கள் தாந்திரீய கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் இக்கோவில்கள் உயர் பக்குவ நாகரீகத்தினைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் இக்கோவில்கள் ஏனைய கோவில்களைப் போன்று ஒரு குறிப்பிட்ட நோக்கில் உருவாக்கப்பட்டவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அக்காலகட்டத்தில் ஆண் பிள்ளைகள், இந்து ஆச்சிரமங்களில் சேர்ந்து பிரம்மச்சரியம் பூண்டவர்களாக கல்வி கேள்விகளை குருகுல முறையின் கீழ் கற்றார்கள். அவர்கள் வளர்ந்ததும் இல்லற பந்தத்தில் இணைந்தபோது அதற்குத் தேவையான முக்கியமான நடவடிக்கைகள் தொடர்பான அறிவை புகட்டும் விதமாக இங்குள்ள சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. மற்றும் இச் சிற்பங்களைப் பார்த்தே உலக பந்த பாசங்களைக் கற்பதற்கான ஒரே வழியாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரமிப்பான, பிரமாண்ட சிற்பக் கலைக் கூட்டங்களாக விளங்கும் ஹஜுராஹோ கோவில்கள் உருவானதற்கு பிரதானமாக ஒரு புராணக்கதை கூறப்படுகின்றது. இடைக் காலத்தைய அரசவை புலவரான சந்பார்தையின் கூற்றுபடி, காசி அரசவைப் பூசகரான ஹேமராஜ் என்பவரின் மகள் ஹேமாவதி என்பவள் ஆவள். ஒரு கோடைக்கால இரவில், தாமரைகள் நிறைந்த குளமொன்றில் ஹேமாவதி குளித்துக் கொண்டிருந்தாள். சந்திர ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்த குளத்தில் பேரழகி ஒருத்தி குளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட சந்திரக் கடவுள் அவளது அழகில் தன்னை மறந்தான். அவளை எப்படியும் அடைய வேண்டும் என்ற வெறி உந்த, ஒரு மானிடனைப் போல் உருவம் கொண்ட அவன், அங்கு வந்து அவளை வல்லுறவு கொண்டான்.

துரதிர்ஷ்ட வசமாக பால்ய விதவையாக இருந்த ஹேமாவதி, தன் வாழ்க்கையையும் கௌரவத்தையும் கெடுத்து விட்டதாகக் கூறி கோபம் கொண்டு சந்திரக் கடவுளைச் சபிக்கப் போவதாகக் கூறினாள். ஹேமாவதியைச் சமாதானப்படுத்தும் நோக்கில் சந்திரக் கடவுள் அவளிடம் 'நீ ஒரு வீரனுக்கு தாயாவாய் அவளை ஹஜுர் புராவுக்கு எடுத்துச் செல். அவன் ஒரு சிறந்த அரசனாக விளங்கி, குளங்களும் பூங்காவனங்களும் சூழ்ந்திருக்க ஏராளமான கோவில்களைக் கட்டுவான். அத்துடன் அவன் ஒரு பெரும் யாகம் செய்வான். அதன் மூலம் உன் பாவம் விலகிப் போகும்' எனக் கூறிச் சென்றான்.

அதன் படி ஹேமாவதி தனது வசிப்பிடத்தை விட்டு, தனது குழந்தையைப் பெறும் பொருட்டு ஒரு சிறு கிராமத்துக்குச் சென்றாள். அங்கு அவளுக்கு பிறந்த ஆண்மகவுக்கு சந்திரவர்மன் எனப் பெயரிட்டாள். சந்திரவர்மன் தனது தந்தையைப் போல் அழகும் வீரமும், பலமும் பொருந்தியவனாக விளங்கினான். பதினைந்து வயதுப் பருவத்திலேயே அவன் தனது வெறுங் கையால் போரிட்டு புலிகள், சிங்கங்களைக் கொல்லும் பலசாலியாக விளங்கினான்.

அவனது சாதனைகளால் மனம் மிக மகிழ்ந்த ஹேமாவதி, சந்திரக் கடவுளை தியானித்ததன் மூலம் அழைத்தாள். அவ்விதமே தோன்றிய சந்திரக் கடவுள், தங்கள் புதல்வனான சந்திரவர்மனுக்கு தொடுகல் ஒன்றைப் பரிசளித்தான். அக்கல் இரும்பையும் தங்கமாக மாற்றும் சக்தி படைத்தது. அத்துடன் அவனை ஹஜுராஹோ அரசனாக முடிசூட்டி வைத்தான். தனது காலத்தில் மிகச் சிறந்த வெற்றிகளையெல்லாம் பெற்ற சந்திரவர்மன், கலின்ஜர் என்னும் இடத்தில் ஒரு பலம் வாய்ந்த கோட்டையைக் கட்டினான். இவ்விடம் சன்டேலர்களின் அரசியல் தலைநகரம். அத்துடன் அவனது தாயாரின் வேண்டுகோளின்படி, ஹஜுராஹோவில், குளங்களும், நந்தவனங்களும் நிறைந்த 85 பிரசித்தி வாய்ந்த கோவில்களைக் கட்டினான். அத்துடன் தாயின் பாவத்தைப் போக்க பந்த்யா யாகத்தையும் செய்தான்.


அதே போன்று மற்றுமொரு புராணக் கதையும் கூறப்படுகிறது. கலிஞ்சர் அரச பூசகரான மணிராமின் பாலிய விதவையான மகள் தான் ஹேமாவதி. ஒரு நாள் அவள் தமது சோதிடக் கணக்கின்படி அமாவாசை நாளை பௌர்ணமி தினம் எனத் தவறாக அரசனிடம் அறிவித்து விட்டாள். தனது தந்தையின் கௌரவத்திற்கு களங்கம் வந்து விட்டதே என மிகக் கவலையுற்ற ஹேமாவதி, சந்திரக் கடவுளை நோக்கி தியானம் செய்து வழிபட்டாள். அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கைக்கு மனமிரங்கி இசைந்த சந்திரக்கடவுள், குறிப்பிட்ட இரவு நாளில் சந்திரன் தோன்ற வைப்பதாகக் கூறி, அதற்கு பிரதிபலனாக அவளை பலாத்காரம் செய்தான். இதனால் மிகவும் வெட்கமுற்ற மணிராம், தன்னைத் தானே சபித்து, கல்லாக மாறினார். பின்னாளில் சன்டெலாக்கள் அவரை மணிய தேவர் என வணங்கலாயினர்.

ஹேமாவதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சந்திரதேயா என்ற ஞானியே அவராகும். அவர் பின்னர் சந்தேலா வம்சத்தில் உச்ச செல்வாக்கில் இருந்தார். வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது, ஹஜுராஹோவைச் சுற்றிய பிரதேசம் எப்போதுமே அதன் கலாசார சாதனைகளால் பிரசித்தி பெற்றதாக விளங்குகின்றது.




### ஹஜுராஹோவுக்கு எப்படி செல்வது?

**விமான மூலம் பயணம்:**

டெல்லி, மும்பாய், வாரனாசி, போபால், அலஹபாத் போன்ற நகரங்களுடன் ஹஜுராஹோ விமான நிலையம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சர்வதேச பிரயாணிகள் மும்பாய் அல்லது டெல்லியில் இருந்து ஹஜுராஹோவுக்கு விமான சேவையை பெறமுடியும்.

**ரயில் மூலமாகப் பயணம்:**

ஹஜுராஹோவுக்கு அருகில் உள்ள ரயில் நிலையம் மறோபாவாகும். ஹர்பல்பூர் ஹஜுறஹோவுக்கு அருகே உள்ள மற்றுமோர் புகையிரத நிலையமாகும். இது இந்தியாவின் ஏனைய புகையிரத நிலையங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கின்றது. அது ஹஜுராஹோவிலிருந்து 90 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது.

- லக்ஷ்மி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவுஸ்திரேலியாவில் வாழும் பழங்குடி மக்களில் ரிவி இனத்தவர்களும் ஒரு தொகுதியினராவர். பாத்துஸ்ட், மற்றும் மெல்வெலி தீவுகளில் வாழும் இவர்களின் மொத்த குடித்தொகை சுமார் 2500 பேராகும். இவர்கள் மனிதன் இறப்பின் பின்னும் வாழ்கின்றான் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டவர்கள். இறந்தவர்களது உடல்களைப் புதைத்த பின்னர் மரக்குற்றிகளில் மனித உருவங்களைச் செதுக்கி புதை குழியைச் சுற்றி நாட்டி விடுகிறார்கள். பிற தீய சக்திகளில் இருந்து இறந்தவர்களை பாதுகாக்கும் பொருட்டே இவ்வாறு செய்கின்றார்களாம். மேலும் ஆரம்ப கால கேத்திரகணித வடிவவியலை அடிப்படையாகக் கொண்டே இவர்களது கலைப் படைப்புக்கள் காணப்படுகின்றன. உல்லாசப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் மத்தியில் ரிவி இனத்தவர்களின் கலைப் படைப்புகளுக்கு மிகுந்த கிராக்கி நிலவுகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோக ரசத்தைச் சுகமாக இசைத்த டி.எஸ்.பகவதி

-பத்மா சோமகாந்தன்

வானொலியில் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் நன்கு பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றுப் புகழ்க் கொடி நாட்டிய இசைச் சாதனையாளரான தென்காசி சீனிவாச பகவதியே தன் பெயரை டி.எஸ்.பகவதி எனச் சுருக்கிக் கொண்டார். நாலாம் வகுப்பு வரையிலேயே பள்ளிக் கல்வியைப் பெற்றுக்கொண்ட இச்சிறுமி, ஒருவரின் பாடலைக் கேட்டதும் அப்படியே சுருதி, லயம், இனிமை, பாவம் எதுவும் அணுவளவும் பிசகாமல் அப்படியே செவிமடுத்தப் பாட்டைத் திருப்பித் தன் இனிமையான கணீரென்ற ஞானம் மிக்க குரலால் பாடும் வல்லமையை இயல்பாகவே பெற்றிருந்தமை இறைவன் அவருக்குக் கொடுத்த கொடையென்றே குறிப்பிடலாம்.

1925 ஆம் ஆண்டில் தென்காசிக்கு அருகாமையிலுள்ள இலத்தூர் என்ற இடத்தில் டி.ஆர்.சீனிவாசன்- அன்னம்மாள் தம்பதியின் குழந்தையாகப் பிறந்த பகவதியின் தாய் வழிபாட்டனார் ஹரிகதா காலட்சேபத்தில் நிபுணத்துவ மிக்கவராக விளங்கிய ஈ.வி.நாராயணபாகவதர் ஆவார். இவருடைய தங்கை ஈ.வி.கிருஷ்ணம்மா உட்படக் குடும்பத்தினர் அனைவருமே கர்நாடக இசை வல்லமையும் காலட்சேப உபந்நியாசங்களை நடத்துவதில் மிகுந்த ஆற்றல் கொண்டோருமாகத் திகழ்ந்தனர்.

பெண்கள் பள்ளிக் கல்வியை மேற்கொள்ள அதிகம் ஈடுபாடு காட்டாத அக்காலக் கட்டமைப்பின் பிரகாரம் பாட்டி கிருஷ்ணம்மாவைப் போலவே சிறுமி பகவதியும் தம் குடும்பத்தாரிடமே கல்வியையும் இசையையும் கற்றுத் தேறினார். கிருஷ்ணம்மா திருச்சி வானொலி மையத்தில் இசை நாடகக் கலைஞராகப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தினார்.

ஒரு நாள் வானொலி நிலையத்துக்கு பாட்டியுடன் சென்றிருந்த வேளையிலே அங்கிருந்த அதிகாரிகள் பகவதியைப் பாடும் படி விளையாட்டாகக் கேட்டு வைத்தனர். எவ்வித முன் ஆயத்தமோ, ஒழுங்கான இசைப் பயிற்சி பெற்ற அனுபவமோ சிறிதுமின்றி எள்ளளவும் பயப்படாமல் பட் என்று பாடத் தொடங்கி விட்டார் சிறுமி பகவதி.

கவனித்துக் கொண்டிருந்த இசை வல்லுனர்கள் பிரமித்துப் போய் விட்டனர். மனதை அள்ளும் வகையில் மிக அழகாகப் பாடினாள் சிறுமி பகவதி. நாலைந்து நாட்கள் பாட்டி கிருஷ்ணம்மாவிடம் பயிற்சி பெற்றுக் கொண்ட பின் வானொலி நிலைய பரீட்சார்த்த ஒலிப்பதிவில் தேறினாள். நிலையக் கலைஞராகத் தொழிலாற்றவும், தாத்தா வழி பெற்றுக் கொண்ட ஹரிகதா காலட்சேப அறிவு சொற்களைத் தெளிவாகவும் அட்சர சுத்தியோடு உச்சரிக்கும் திறனும் உணர்ச்சிக்கேற்றவாறு சொல்லின் ஏற்ற இறக்கமும் இணைந்து பேசும் பாணியும் பகவதியை நாடகக் கலைஞராகவும் பரிணமிக்க வழிவகுத்தது. சாரீர சம்பத்தின் மூலமும் இனிய பாவத்தின் மூலமும் திருச்சி வானொலி நிலையக் கலைஞராக நியமனம் பெற்று வருவாய்க்கும் வழித் தேடிக் கொண்ட பகவதி ஓய்வான வேளைகளிலே அங்கு கூடப் பணி செய்த பாட்டியிடம் கர்நாடக இசையையும் முறையாகக் கற்றுக் கொண்டார்.

மீரா, சிவகாமியின் சபதம் ஆகிய நாடகங்களை வானொலியில் நடித்துப் புகழ்க்கொடி நாட்டிக் கொண்டிருந்த வேளையிலே இம்மதுரச் குரலாளின் மகத்துவமிக்க கலைத் திறமையால் பெரிதும் கவரப்பெற்ற மெய்யப்பச் செட்டியார் தமது ஏ.வி.எம் ஸ்தாபனத்தில் இவரை இணைத்துக் கொள்ள மிகவும் அவாவுற்றார். அவர் 'நாம் இருவர்' படத்தையும் 'ராம ராஜ்யா' என்ற தெலுங்கு படத்தையும் தமிழில் 'டப்' செய்து வெளியிடும் ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தமையால் பெண் குரலொன்று அவருக்கு அவசியம் தேவைப்பட்டது.

வானொலியை விட ஏ.வி.எம் மில் வேலை செய்வதால் அதிக வருவாயை ஈட்டலாம் என்ற எண்ணத்தில் உடனே பகவதி, செட்டியாரிடம் வந்து வேலையை ஏற்றுக் கொண்டார். 'இக வாழ்வினிலே ஆனந்தம்' தொடங்கி நான்கு பாடல்களைப் பாடினார். 'ராமராஜ்யா' படத்தில் ராமர் முடி சூடிய பின் சந்திக்கும் சம்பவங்கள், அவரது ஆட்சியில் நடந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. இப்படத்தை தேசத் தந்தை மகாத்மாகாந்தியே பார்த்து ரசித்து பாராட்டிய பெருமை இதனைத் தயாரித்த மெய்யப்பச் செட்டியாரவர்களுக்கே உரித்தாகும்.

பின்னர் தமிழ் மொழி மூலமாகத் தயாரான இப்படத்தில் சீதையின் பாடல்களைத் தன் இனிய கானத்தில் இசைத்து மெருகூட்டியதுமல்லாமல், திருச்சி வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களில் பங்குபற்றிய அனுபவங்களைக் கொண்டு திரைப்படக் காட்சிகளுக்கும் சீதை பாத்திரத்தின் வசனங்களைத் தன் தெளிவான 'நறுக்' என்ற உச்சரிப்போடு பேசிச் சினிமாவுக்கொரு கனதியை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை டி.எஸ்.பகவதிக்கே உரியது.

'முருகா சரணம்' என்ற படத்தில் ஏ.வி.எம். வெளியிட்ட ஒலிநாடாவில் 'ராமராஜ்யா' படத்தில் ஏ.வி.எம். வெளியான 'வீணையின் இனிமை தரும் இசைபோல்' என்ற பாடலின் மெட்டின் வெளிவந்த பகவதியின் குரல், வீணை இசையோடு இணைந்து ஒலித்த ஓசை வீணையின் நாதமெது இவருடைய குரலொலி எது எனப் பிரித்தறிய முடியாதபடி பிரமிப்பை ஏற்படுத்தியது. இன்னும் டி.ஆர்.மகாலிங்கத்துடன் இணைந்து பாடிய பாடல்கள் குறிப்பாகச் 'சோலை மலரொளியோ' என்ற பாரதியார் பாடல் இனிமை தரும் தேஷ், மாண்டு ஆகிய ராகங்களுடனான ராகமாலியை பகவதியின் பிருகாக்களுடனான பாட்டு மனதைச் சாமரை கொண்டு வருடுவதுபோல இதம் தரும்; இனிமை சொட்டும்.

★ **வீணையின் நாதமெது பகவதியின் குரலொலி எது எனப் பிரித்தறிய முடியாத பிரமிப்பு !**

★ **பாடல்களின் மெட்டமைப்புகளும், சொல் அடுக்குகளும் லாவகமாக பகவதியின் குரலுக் கேற்ற வகையில் வளைந்துக் கொடுக்கும்.**

★ **எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் பகவதியின் மென்மையான சுகம் தரும் குரலின் இனிமையை எளிதில் மறக்க முடியாது.**

புதிய மெட்டமைப்புப் பாணிகளோடு இயைந்த 'நாமிருவர்' படப் பாடல்களுடன் ஏ.வி.எம்மின் 'வாழ்க்கை' படத்திலே பகவதி பாடிய பாடல்கள், எடுத்துக் காட்டாக 'பாடுபட்டாலே - நெசமா, பாடுபட்டாலே பலன் கூடும்கைமேலே, பறந்தோடும் ரேஷன் கார்டு தன்னாலே' என்ற பாடல் ஏழை எளிய மக்கள் யாவர் காதுகளிலும் அம்பாகத் தைத்து, பாடலை முணுமுணுக்க வைத்தது மாத்திரமன்றி ஏதோ வகையில் பாடுபட்டு உழைத்தால் வாழ்வின் பிணியை போக்கலாமே என்ற நம்பிக்கையை, எழுச்சியைப் பாமர மக்கள் மத்தியில் விதைத்தது என்றால் மிகையில்லை. கொஞ்சும் குயிலோசைக் குரலுடன் நீலக் கருவண்டின் ரீங்கார இசையுமியைந்த பகவதியின் தேசிய உணர்வுப் பாடல்கள், படத் தயாரிப்பாளருக்கு வெற்றிகளைக் குவித்தன.

'அன்னையே நீ என்னைக் கைவிடல் அழகோ, ஆதாரமெங்கு நான் தேடுவேன்' என்ற இவரது ஆபேரி ராகப் பாடல் எந்தக் கல் நெஞ்சையும் கசிந்துருகச் செய்யும் தன்மையானது. முற்று முழுதாகக் கர்நாடக இசையையே அடிப்படையாகக் கொண்டு எம்.எஸ், எம்.எல், பட்டம்மாள், எம்.கே.தியாகராஜா பாகவதர், கிட்டப்பா போன்ற இசை மேதைகளெல்லாம் சினிமாவில் பாடிய கட்டுக் கோப்பிலிருந்து ஓரளவு இவருடைய காலத்தில் இசை உள்வாங்கப்பபட்டிருந்தாலும், இந்தி மெட்டுக்கள், மேற்கத்திய இசை வடிவங்கள், நாட்டுப்புற இசை, மெல்லிசை என்பனவெல்லாம் திரையிசையில் ஒலிக்கத் தொடங்கின என்று குறிப்பிடலாம். இத்தகைய இசைகளெல்லாம் கேட்கும்போது இனிமையாகவும், மனதைக் கவருவதாகவும் இருந்தாலும் கூட அவை மனதை பற்றியபடி என்றென்றும் நினைவில் இருக்குமோ எனும் போதுதான் அவற்றின் பலவீனத்தை நாம் உணரமுடியும்.

பராசக்தியில் மிகச் சுகமாக பகவதி இசைந்த சோகப் பாடல்கள் 'பூமாலை நீயே புழுதிமண்மேலே', 'பொருளே இல்லாருக்கு தொல்லையா', 'கொஞ்சும் மொழி சொல்லுங் கிளியே' ஆகிய பாடல்கள் சோகத்தில் உச்சத்தால் நெஞ்சைத் தொட்டுக் கசக்கிப் பிழியும் வேதனையை ஊட்டுவன. இப்பாடல்களில் அர்த்தத்தைக் கேட்போரின் கண்ணீர் மொழியிலே பயிலக் கூடிய வகையில் பாடும் வல்லமை அந்தச் சோகக் குரல் செல்வியின் தனிச் சொத்தேதான். இவரது குரலுக்கேற்ற வகையில் பாடல்களின் மெட்டமைப்புகளும், பாடலில் இடம் பெற்றுள்ள சொல்லடுக்குகளும் லாவகமாக வளைந்துக் கொடுத்துப் பாடல்களின் நோக்கம் நூறுவீதமும் நிறைவேறக்கூடிய வகையில் அமைந்திருப்பதே அத்திரைப் படங்களுக்கான பெரும் வெற்றிகள் எனக் கருதமுடியும்.

மேலும் ஏ.வி.எம் மின் ஓர் இரவு, வேதாள உலகம், ரத்தக் கண்ணீர், தங்கப்பதுமை, கைராசி, ராஜபக்தி என இன்னும் பல படங்களில் பாடிப்பெரும் புகழையும் கீர்த்தியையும் சம்பாதித்துக் கொண்ட பகவதி ஐம்பதாம் ஆண்டு இடைக்காலத்தில் அவர்களிடமிருந்து விலகிக் கொண்டார்.

இவருடைய இனிய சாரீர வளத்தில் மிகுந்த ரசனை கொண்ட கண்ணதாசன் தான் தயார் செய்த மாலையிட்ட மங்கை, சிவகங்கைச் சீமை போன்ற படங்களிலெல்லாம் வெவ்வேறு இசை வடிவங்கொண்ட பாடல்களைப் பாட வைத்தார். கண்ணதாசனின் நாட்டுப்பாடல் இசையிலும் இவர் குரல் கணீரென ஒலித்தது.

என்றாலும் ஏ.வி.எம்மில் இவர் இருந்தபோதிருந்த பாடல் வாய்ப்புகளும், செல்வ வளமும் தற்போதைய நிலையில் பெரும் ஏமாற்றமாகவே இருப்பதை உணர்ந்தார். பெண் தனித்து வாழ்வதென்பது எந்த நாட்டிலும் உள்ள பிரச்சினையேதான். பாடினாலும் பணம் கொடாது ஏமாற்றுவோரும் தவணை சொல்லுவோருமாக இருந்தால் இவரின் வாழ்க்கை வண்டி ஓடுவது எவ்வாறு?

எனவே திரையுலகிற்கு முழுக்குப் போட்டு விட்டு பழையபடி வானொலி நிகழ்ச்சிகளோடு தன்னை இணைத்துக் கொண்டு மிகுதி நாட்களைக் கடத்தினார். பகவதி. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் பகவதியின் பஞ்சு போன்ற மென்மையான இனிய குரல் சோக ஒலியில் கூட ஒரு சுகத்தைத் தரும் சுவையை எளிதில் மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம் சமாது மட பட்டயம்

க. தங்கேஸ்வரி பி.ஏ தொல்பொருளியல் சிறப்பு



(சென்ற இதழ் தொடர்ச்சி)

இதில் குறிப்பிடும் மலையாளப் பெயர்களே நயனாப்பிள்ளை, மூதா பிள்ளை போன்ற பெயர்கள் மலையாளம் குறிப்பவையாகும். மாதுறை குல சேகர முதலியார் என பெயர் குறிப்பிட்டாலும் - மாதுறை என்பது பொலனறுவைக்கு அயலில் மன்னம்படி மகாவலி கங்கையிலுள்ள இடம் என்பதும், இங்கு தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்ததாகவும் குறிப்பிடப்படு கின்றது. அதுபோலவே தோப்புத்துறை சிதம்பரச் செட்டியார் இத்தகைய பெயர்கள் குறிப்பிடும் மாதுறை, தோப்புத்துறை என்பன மகாவலிக் கரையை அண்மித்தவை ஆகும். இரு பக்கங்களுமே குறிப்பிடும் முதலியார், காரியம் போன்ற சிறப்புப் பெயர்கள் அக்காலத்தில் வழங்கிய பட்டங்களாகும். செட்டிகள், முதலிகள், காரியம் என்ற பட்டங்கள் முக்கியமாக கதிர்காமத்துடன் தொர்புடையவர்களாக இருந்துள்ளனர் என்பது இதன் மூலம் புலனாகிறது.

**பட்டயம் மறுபுறம்** : பட்டயத்தின் பின் பக்கம் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. பட்டயத்தில் எழுதப்பட்டுள்ள படி திருத்தமற்ற எழுத்துக்கள் வாசகர்களுக்கு வாசித்து சரியான முறையிலே எழுதப்பட்ட விடயங்களும் பின்வருமாறு இதில் 37 வரிகளில் முக்கியமானவர்களாக பெயர்கள் கூறப்படுகின்றன.

சமாது மடது - சமாது மட
படஅடயம் - பட்டையம்
இயாபபாண கருதபப முதலியா
இயாழ்பாணம் கந்நப்ப முதலியார்.

1. காஞாககாலமுது செயயாகாரடியம்மாபிளள கானார் க்கால
   செட்டியார் காவியம் மாப்பிள்ளை குமாரர்களின் முதலியார்
2. முதுமவலப் பெருமான உசஉசநெயினுபபளளம
   முதுமலைப் பெருமாள் உசநெயினாப்பிள்ளை மரை
3. சுகாயா ஆட்கொணடா பிளள சாலாபபிளள
   (மரை) க்காயர் ஆட்கொண்டா பிள்ளை சாலாப்பிள்ளை
4. செயிதுபபினவள கணனய முதலியள காரியம
   செயிதுப்பிள்ளை கண்ணய முதலியார் காரியம்
5. போபன ரெஙகபபிளள காரியம குமாபன
   பொப்பன ரேங்கப் பிள்ளை காரியம் குமாரப்பன்
6. கனகபப செடடியாா காரியம் முது வேல செடடி சஙகாா
   கனகப்ப செட்டியார் காரியம் முதவெல செட்டிசங்கார்
7. யயன அவாகள காரியம நலலயபன பெரியயம கூடல்
   அயன் அவர்கள் காரியம் நல்லப்பன் பெரியிய கூடல்
8. தஙகன பாம அநதால செடடியாா காரிய நாளயபப
   தாங்கன் பரம அந்தால் செட்டியார் காரியம் நாளையபப
9. செடடியாா திருசாமி செடடியாா காரியம யிரிசபப செடடிய
   செட்டியார் திரசாமி செட்டியார் காரியம் மயிரிசப்ப செட்டியார்
10. சநதிதா அயயன அவரகள் காரியம திருமுடி செடடிய
    சந்திரநாத அய்யன் அவர்கள் காரியம் திருமுடி செட்டியார்
11. (யா) கோமாபப செடடியாா காரியம திருவனஞதபிளள
    கோமாப்ப செட்டியார் காரியம் திருனானதபிள்ளை
12. வயிததிய ஞதபிளள காரியம அசசநதி விழததான
    வயித்தியனாதபிள்ளை காரியம். அச்சந்ததி விழதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பொனனமபல செடடியாா காரியம் முததயயன
பென்னம்பல செட்டியார் காரியம் முத்தயன்
14. சினனாம செடடியாா காரியம் திரு வெங்கிடனதன
சின்னார்மம் செட்டியார் காரியம் திருவெங்கிடனாதன்
15. லாலகிஷண பிளவளயவாகள காரியம் சினன அகமது
பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் காரியம் சின் அகமது
16. (ம) ரைக்காயா - மா பபிளவள முதலியார் காரியம உமறுவெவ
மரைக்காயார் மாப்பிள்ளை முதலியார் காரியம்
17. கறுதா வவூகா பிளறை மாணுகக சதாசிவ
கறுத்தா அவுகாப்பிள்ளை மாணாக்க சதாசிவம்
18. கனனதுறை செடடியாா விசுவனதசுப்பிரமனியேன
கன்னதுறை செட்டியார் விசுவநாதசுப்பிரமனியன்
19. மகமது நெயினு மாரககாய காரியம ஒத நெயினு
மகமது நெயினு மரைக்காயர் காரியம் ஒசு நெயினா
20. இசுாபப முதலியாக காரயம பிசசைபபாவலு
இசுப்ப முதலியார் காரியம் பிச்
21. தோபபாதுறை திவலே ஞயக பணடா மகிழவகரை
தோப்புத்துறை திவலைநாயக்க பண்டா மகிழ
22. வெஙகிட பதியாபிளை காரியம த் சூாபபபண
வெங்கிட பாதியார்பிள்ளை காரியம்
23. கூடலுா அயயம பெருமாள செடடியாா காரியம
கூடலூல் அய்யம் பெருமாள் செட்டியார் காரியம்
24. இராமசஙகா செடடியாா காரியம உசனுயவனவ
இராமசங்கர் செட்டியார் காரியம் உசனாலெவ்வை
25. மாபபிவளள மனராகாயா காரியம செயயது மீரா
மாப்பிள்ளை மானக்காயர் காரியம் செய்து மீரா
26. அலலியா மனு காயா யாரியம் மகமது மீரா
அல்லியார் மரைக்காயர் காரியம் மகமது மீரா
27. அகமது நயினு வனவ காரியம இசனுசாலிபபிளளே
அகமது நயினா லெவ்வை காரியம் இசனாசாலிப்பிள்ளை
28. சினனு செடடியாா காரியம தலுஙபெபிள வள மீ
சின்னா செட்டியார் காரியம் தலுங்கப்பிள்ளை மீ
29. லவனுவ வீரளகுவ முதலியா காரியம ஆறுமுகம
மீராவெவ்வை வீரளகு முதலியார் காரியம் ஆறுமுகம்.
30. உசனுபிளள மரைகாயா காரியம அகமது லேவவை
உசனாபிள்ளை மரைக்காயர் காரியம் அகமதுலெவ்வை
31. மனாகாயா பட்டாணி செங்காவலபப முதியர்
மரைக்காயர் பட்டாணி செங்காவலப்ப முதலியார் காரி
32. ரிஸம சுபபிரமணியன் சூரிய முரதி முதலியார்
ரியம்) சுப்பிரமணியன் சூரிய மூர்தி முதலியார் காரி
33. (யம்) அனதம்பன் பிரு கால வவை மரைக்காயர் முதியார். கா
காரியம் அனற்தபபட பிருசால்வை மரைக்காய கா
34. ரியம் மாமுருயனபபிளள சினனதமபி செட்
காரியம் மாமுநயனாப்பிள்ளை சின்னத்தம்பி
35. டியார் காரியம் சுப்பிரமனியன் இராமநாத முதலியார்
செட்டியார் காரியம் சுப்பிரமணியன் இராமநாத முதலியார்
36. இயாழெபானம அழகக்கோன முதலியார்
இ யாழ்ப்பாணம் அழகக்கோன் முதலியார்
37. காரியம வீணை தீரததான் வயியேநாதன்
காரியம் வீணை தீர்த்ததான் வைத்தியநாதன்

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியலாய்வின் தரநிலை மேம்பாட்டை முன்னெடுத்த பேராசிரியர் செல்வநாயகம்

- பேராசிரியர் சபா ஜெயராசா

இலங்கையின் தமிழ்க் கல்வி மரபின் வளர்ச்சி மூன்று செயல் விசைகளுடன் இணைந்து வந்துள்ளது. நாட்டார் மரபு, பாரம்பரியத் தமிழ்க் கல்வி மரபு, ஐரோப்பிய ஊடாடத்துடன் இணைந்த கல்வி மரபு என்ற நிலைகளில் அந்தச் செயல் விசைகளை இனங்காணலாம். அந்த விசைகளின் இணைப்பினைப் பல்கலைக்கழகத் தமிழ்க் கல்வி மரபிலே தெளிவாகக் காணமுடியும். அவற்றின் வழிமேலெழுந்த பேராசிரியர் வி.செல்வநாயகம் (1907-1973) அவர்கள் தமிழ்க் கல்வியின் தர மேம்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்கும் செயற்பாட்டைத் தமது புலமை பணியாக மேற்கொண்டார்.

கல்வி நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் கொழும்புத்துறை என்ற கிராமம் யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. மரபு வழிக் கல்வியைக் கையளித்த திண்ணைப் பள்ளிக் கூடங்கள் கடந்த நூற்றாண்டின் முதற் கால்பகுதி வரை அங்கே செயல்பட்டு வந்தன. அதேவேளை கிறிஸ்தவ திருச்சபையினரின் ஆங்கிலப் பாடசாலைகளும் இயங்கி வந்தன. அக் கிராமத்தின் இங்கிதமான பண்பாட்டுச் சூழலையும் சமய நல்லிணக்கத்தையும் அறிந்து யோகர் சுவாமிகள் தமது ஆச்சிரமத்தையும் தவச்சாலைகளையும் அங்கே அமைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1907 ஆம் ஆண்டு பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் அந்தக் கிராமத்திலே பிறந்தார். அவர் வாழ்ந்த சூழலிலே பிறிதொரு கல்விச் சிறப்பும் காணப்பட்டது. அதாவது, கத்தோலிக்க திருச்சபையினர் தமது பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கலாசாலை ஒன்றையும் அங்கே நிறுவியிருந்தனர். ஆசிரியர் கல்வியின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும், ஆசிரிய ஒழுக்க நெறி முறைகளையும் அந்தக் கிராமத்து மக்கள் கண்டும் அனுபவித்தும் வந்தனர்.

ஆசிரிய வாண்மையின் சிறப்பையும் பரிமாணங்களையும் பேராசிரியர் சிறு வயதிலிருந்தே தரிசித்து வந்தமை அவரது பிற் காலத்தைய ஆளுமை வளர்ச்சியிலே நீட்சி கொண்டது.

தமது கிராமத்துக்கு மிக அண்மையிலிருந்த யாழ். பரியோவான் கல்லூரியிலே பேராசிரியர் தமது ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் தொடர்ந்தார். யாழ். பரியோவான் கல்லூரி தமிழ் மற்றும் ஆங்கிலக் கல்விக் கையளிப்பில் அதிக முக்கியத்துவம் பெற்றுவரும் ஒரு நிறுவனமாகும். பேராசிரியர் அவர்கள் கல்வித் தர மேம்பாட்டில் அதீத ஈடுபாடு கொள்வதற்கும், இலக்கண வழுக்கள் மற்றும் கருத்து வழுக்கள் இன்றி ஆழ்ந்த பொருட்செறிவை மேற்கொண்டு மேலுயர்வதற்குமுரிய ஒழுங்கமைந்த கல்விப் பயிற்சியை அந்தக் கல்லூரி வழங்கியது.

தமது இடை நிலைக் கல்வியை அங்கே நிறைவேற்றிக் கொண்ட பேராசிரியர் கொழும்பில் இயங்கிய பல்கலைக்கழகக் கல்லூரியிலே கற்று இலண்டன் பல்கலைக்கழகத்துக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அக்காலத்தில் பட்டத்தாரி தேர்வுகளை இலண்டன் பல்கலைக்கழகமே மேற் கொண்டது. ஆனால் அதற்குரிய கல்வியைக் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி வழங்கியது.

தமது முதற் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர் சிறிது காலம் இடைக்காட்டுக் கிராமத்து மத்திய கல்லூரியிலே ஆசிரியராக பணி புரிந்தார். பயிர் வளம் நிரம்பிய கிராமியச் சூழலில் அந்தக் கல்லூரி அமைந்துள்ளது. மரபு வழியாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்ற புலமையாளர்களுடனான தொடர்பு பேராசிரியருக்கு அக்காலத்திலேயே ஏற்பட்டது. அதன் நீட்சியாக வித்துவ சிரோமணி கணேசையர், பண்டிதர் வேதநாயகம் ஆகியோரிடத்து தமிழை மேலும் ஆழக் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். தாம் எழுதிய ஆக்கங்களை கணேசையர் அவர்களிடத்துக் காண்பித்துக் கருத்துக்களைப் பெற்று அவற்றை மேலும் செப்பமும் மெருகும் பெறச்செய்தார்.

தொடர்ந்து கோப்பாயில் உள்ள ஆசிரியர் கலாசாலையிலே விரிவுரையாளராக நியமனம் பெற்றார். ஆசிரிய கலாசாலையின் வாண்மைச் சூழல் அவரது புலமை ஆளுமைக்கு மேலும் பங்களிப்பைச் செய்தது. கல்வி உளவியல், கல்விக் கோட்பாடுகள், கற்றல் கற்பித்தலியல் முதலாம் துறைகளிலே ஊட்டம் பெறுவதற்குரிய வாய்ப்புகள் அங்கே கிடைக்கப்பெற்றன.

பல்கலைக்கழகத்திலே அவர் விரிவுரையாளராகிய பின்னர், கற்பித்தலிலே உளவியல் தழுவிய உபாயங்களை முன்னெடுப்பதற்கு ஆசிரியர் கலாசாலையிலே பெற்ற வாண்மை அனுபவங்கள் தளம் அமைத்தன.

விரிவுரைகளைச் செம்மை பெறச்செய்தல், கலந்துரையாடல்களிலே மாணவரின் பங்குபற்றலை ஊக்கம் பெறச் செய்தல், நகைச்சுவை கலந்த பின்னூட்டல் கலை வழங்கல், மாணவருடன் இணைந்து தாமும் கற்றுக் கொள்ளும் (Co-Learner) என்ற செயற்பாட்டை முன்னெடுத்தல் போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளைப் பேராசிரியர் பல்கலைக்கழகத்திலே மேற்கொண்டார்.

பொறிமுறையாகவன்றி ஈடுபாட்டுடன் உயர் கல்வியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்குரிய தளமாகப் பல்கலைக்கழகத்து தமிழ்த்துறை படிமலர்ச்சி கொள்வதற்கு பேராசிரியரின் பங்களிப்புக் கணிசமானது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து ஊடுருவித் தரிசித்துக் கொள்வதற்குரிய புலமை விசைகளைக் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் பேராசிரியருக்கு உருவாக்கிக் கொடுத்தன. இலத்தீன் மொழியிலும் ஆங்கில மொழியிலும் அவருக்குரிய புலமையின் செல்வாக்கு தமிழ் இலக்கியங்களைத் தரிசிக்கும் முறைமையில் தொல்சீர் பாரம்பரியங்களையும் நவீனத்துவத்தையும் ஒன்றிணைக்கும் புலக் காட்சிக்கு வள மூட்டியது.

பேராசிரியர் தமது பட்டப் படிப்புக்குக் கணித பாடத்தைக் கற்றிருந்தமை பிறிதொரு நிலையிலே தமிழாய்விலே செல்வாக்குகளை ஏற்படுத்தியது. எவற்றையும் கட்டுச் செட்டாகவும் தருக்க முறையிலும் கூறும் அவரது தனித்துவத்தில் கணிதத்தின் செல்வாக்கு ஊடுருவியிருந்தது. மாணவரின் குழப்பமான மற்றும் நொதுமலான எழுத்துக்களை அவர் நோக்கிய விதத்திலும் கணிதத்தின் செம்மைப்பாடு உட்புகுந்திருந்தது.

பட்டப்படிப்புத் தேர்வில் அவர் சேர் பொன் அருணாசலம் அவர்களது நினைவுப் பரிசிலினைப் பெற்றுக் கொள்ளும் உன்னதமான பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டமை அவரது புலமை மேம்பாட்டுக்குரிய பிறிதொரு சான்றாகின்றது.

பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், சுவாமி விபுலானந்தர் ஆகியோரிடத்து உயர் நிலைக் கல்வியைப் பெற்றுக் கொண்டார். அவர்களது புலமை ஊட்டமும் செறிவேற்றமும் இலக்கியங்களை ஆராய்ந்து எழுதும் முறையில் தரச் சிறப்பையும் பராமரித்துக் கொள்வதற்குரிய ஏற்றங்களைப் பேராசிரியரிடத்து ஏற்படுத்தின.

அக்காலத்துப் பல்கலைக்கழக மரபிலே முன் வைக்கப்பட்ட தரம் (Quality) அல்லது பண்பு நிலை ஏற்றம் என்ற எண்ணக் கருவானது இன்று மேலும் நீட்சி கொண்டு வளருதல் குறிப்பிடத்தக்கது. தர நிலையைப் பேணுவதிலே விட்டுக் கொடுப்பு அற்றவராகவும், முகமன் பார்க்காதவராகவும் பேராசிரியர் விளங்கியமை அவரது புலமை ஆளுமைக்குச் சான்றாயிற்று.

பேராசிரியர் எழுதிய நூல்களுள் மிகவும் முக்கியமானது 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகும். தமிழில் அதிகம் விற்பனையாகிய நூல்களுள் அதுவும் ஒன்றாகும். இந்தியாவிலும் இலங்கையிலும் அந்நூலின் இருபதுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுபவர் எவருக்குமுரிய ஒரு காட்டுருவாக (Model) அவரது நூல் அமைந்தது. தமிழகத்து அரசியல் வரலாற்றையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் தொடர்புபடுத்தி ஆராய்ந்தமை அந்நூலின் சிறப்புப் பண்பாகிறது. இலக்கியத்தைத் தனித்த பொருளாக்கி ஏனைய விசைகளிலிருந்து பிரிந்து நிற்கும் விடயமாகக் கருதிய ஒற்றைப்பரிமாண அணுகு முறையை அவர் நிராகரித்தார்.

அது ஒரு வகையிலே அவரிடத்து இடம்பெற்ற மேலைப்புலக் கல்வியின் வழி நிகழ்ந்த துலங்கலாகவும் (Response) கருதத்தக்கது. புதிய ஆய்வு முடிவுகளை அடியொற்றி அந்நூலிலே அவ்வப்போது திருத்தங்களை அவர் அமைத்துச் சென்றமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

'கற்பிக்கும் முறை' பற்றி அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும் அனுபவமும் அந்நூலாக்கத்திலே செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தமிழறிஞர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆராய்ந்து எழுதியுள்ளனர். சி.வை.தாமோதரம்பிள்ளை, அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.வரதராசன், கமில் சிவெலபில், எஸ்.வையாபுரிப் பிள்ளை, ஜேசுதாசன், மு.அருணாசலம், பேராசிரியர் கா.சிவத்தம்பி முதலியோர் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமக்குரிய ஆய்வுத் தளங்களில் நின்று எழுதினர்.

மேலைப்புலப் பல்கலைக்கழகங்களின் இலக்கியக் கல்வியில் இலக்கிய வரலாறு என்பது ஒரு சிறப்பான பாடப் பரப்பாக அமைக்கப்பட்டிருந்தது. மரபு வழியான தமிழ் இலக்கியக் கல்வியில் இலக்கிய வரலாறு என்பது அத்துணை சிறப்பு பெற்றிருக்கவில்லை. மேலைப்புலப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வந்த இலக்கிய வரலாற்றுக் கல்வி தமிழ் இலக்கிய பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வேளை அத்தகைய அறிவுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் எழுதப்பெற்ற தரச் சிறப்பு மிக்க நூலாக்கமாகப் பேராசிரியரது தமிழ் இலக்கிய வரலாறு அமைந்தது.

சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு என்ற நெடுங்கோட்டு வளர்ச்சியில் அவர் தமிழ் இலக்கிய வரலாற்றினை நோக்கினார்.

பேராசிரியரின் ஆய்வுகளை அடியொற்றி எழுந்த பிறிதொரு நூலாக்கமாக "தமிழ் உரைநடை வரலாறு" அமைந்துள்ளது. தமிழில் உரைநடை தோன்றி வளர்ந்த வரலாற்றை சான்றாதாரங்களுடன் எழுதியுள்ளார். தமிழின் உரைநடை வளர்ச்சியை ஒழுங்கமைந்த முறையிலே வரைபு செய்யும் நூலாக அது அமைந்துள்ளது. பின்வந்த ஆய்வாளருக்கு அது ஒரு வழிகாட்டியாகவும் உள்ளது.

திறனாய்வு இலக்கியம், கட்டுரை இலக்கியம் ஆகியவற்றில் பேராசிரியரது பங்களிப்பு முக்கியமானது. மேலைப்புலத்துத் திறனாய்வுக் கல்வியைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர்கள் வரிசையில் பேராசிரியருக்குத் தனியிடம் உண்டு. இலக்கியங்களைப் புரிந்து கொள்ளல் திறனாய்வை அடிப்படையாகக் கொண்ட செயல் முறையாகின்றது. வாழ்க்கையைப் புரிந்து கொள்ளலே இலக்கியக் கோட்பாடாக முகிழ்த்தெழுகின்றது. செயல்முறைத் திறனாய்வை இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்க் கல்வி மரபில் அறிமுகப்படுத்திய முன்னோடியாகவும் பேராசிரியர் விளங்குகின்றார்.

மாணவர்களிடத்துக் கவிதைகளை வழங்கி அவற்றை ஈடுபாட்டுடன் கூடிய தனிநபர் வாசிப்புக்கு உட்படுத்தி அவர்களிடத்து முகிழ்த்தெழும் பலநிலைத் துலங்கலைத் தரிசிக்கும் செயல்நிலை வடிவமாக அமையும் அந்தத் திறனாய்வு முறைமையை அவர் தமிழ் இலக்கியச் சூழலிலே முன்னெடுத்தார். அத்தகைய ஒரு திறனாய்வு முறைமை தமிழ் மரபுக்குப் புதிதாகவும் மாறுபட்ட கற்றல் கற்பித்தல் புலக்காட்சியைத் தருவதாகவும் குதூகலிப்பை உருவாக்குவதாகவும் அமைந்தது. கட்டுரையாக்கங்களிலே புலமைத் தர மேம்பாட்டை வலியுறுத்திய பேராசிரியர், அதற்கு முன்னுதாரணமாக தாமே உயர்நிலை ஆக்கங்களை வெளியிட்டார். 'கடலோசை', 'கண்ணுற்றான்வாலி', 'புறநானூற்றில் ஒரு பாட்டு', 'பாஞ்சாலி சபதத்தில் புதுமையும் பழைமையும்', உவமையும் உருவகமும்', 'பழந்தமிழ் செய்யுள் மரபு', 'வழக்குஞ் செய்யுளும்' முதலான கட்டுரைகள் முக்கியமானவை. தருக்க முறையும் மொழித் தொடர்ச்சியும் ஆழ்ந்த கருத்துப் புலப்பாடும் ஒன்றையொன்று தழுவும் முறையில் அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. தமிழ் மரபின் செழிப்பும் ஆங்கிலத் திறனாய்வுகளின் வீச்சும் பேராசிரியரின் கட்டுரைகளிலே ஒருங்கிணைந்திருந்தன.

செய்யுளுக்கும் உரைநடைக்குமிடையே கறாரான எல்லைகளை வரையறுத்துக் கொள்ளல் முடியாதென்பதை ஆங்கிலத் திறனாய்வாளர் பல சந்தர்ப்பங்களிலே சுட்டிக் காட்டியுள்ளனர். கடலோசை என்ற கட்டுரையின் நிறைவில் அந்த விடயம் தொடர்பாகப் பேராசிரியர் தமது கருத்தைப் பின்வருமாறு முன்வைக்கிறார்.

'உரைக்கும் பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் எப்படிக் காண்பது? இந்த உரைப்பகுதியில் உள்ளவற்றை நோக்கும் பொழுது இது பாட்டு ஆகின்றது. ஆனால், அது யாப்பில் அமையவில்லை. யாப்பில் அமைந்தவை எல்லாம் பாட்டு ஆகா. யாப்பில் அமையாதன எல்லாம் உரையாகா';

பாடலை அனுபவிக்கும் முறைபற்றிய விளக்கத்தை 'கண்ணுற்றான் வாலி' என்ற கட்டுரையிலே பேராசிரியர் தந்துள்ளார். அக்கட்டுரையில் அவர் விதந்து மேற்கொண்ட செயல் முறைத் திறனாய்வு பற்றிய விவரணம் பின் வருமாறு தரப்பட்டுள்ளது. 'பாட்டுக்கு பலரும் பலவாறு நயங் கூறுகின்றனர். அவற்றுள் எதுசரி எது பிழை என்பதைக் கண்டு கொள்ள முடியாது. மாணவர்களுடைய மனதினிலே பாட்டுக்கு நயங்கூறுவது எப்படி என்ற வினா பெரும்பாலும் எழுகின்றது. பாட்டுக்கு நயங்கூறும் வழி இதுதான் என்று யாவரும் கூறு முடியாது. நயங்கூறும் ஆற்றல் பாட்டைப் படித்து அனுபவிப்பதிலே தான் முக்கியமாகத் தங்கியிருக்கிறது.'

பேராசிரியர் தாம் எழுதிய கட்டுரைகளில் திறனாய்வுப் பிரச்சினைகள், கால நிர்ணயம் தொடர்பான பிரச்சினைகள் முதலியவற்றைக் குவியப்படுத்தியுள்ளார். அறிவுக் கையளிப்பில் அவர் பிரச்சினை மையக் கல்வியை (PROLEM CENTRED EDUCATION) முன்னெடுத்தார். தொடர்ச்சியான அறிவுத் தேடலை முன்னெடுப்பதற்கு அது பயன்மிக்க முறையாக இருத்தல் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தமிழ்க் கல்வி வரலாற்றிலும், இலக்கியத் திறனாய்வு என்ற தனிப் புலத்தின் வளர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பேராசிரியர் வழங்கிய புலமைப் பங்களிப்பு உயிர்ப்பும் துடிப்பும் கொண்ட தனித்துவத்துடன் மேலெழுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சனநெருக்கடி மிகுந்த நகரின் மத்தியில் அகழ்வாராய்ச்சி நடைபெறுகின்றது

இத்தாலியிலுள்ள மிகவும் அழகிய பசுமையான துறைமுக நகராகிய நேப்பிள்ஸ் நகரில் நடைபெற்று வரும் உபசுரங்கப் பாதை அமைப்பு பணி அந்த நகரத்தின் வரலாற்றையே தலைகீழாக மாற்றிவிட்டது. 750 ஆண்டுகள் மட்டுமே பழைமை வாய்ந்தது என நம்பப்பட்டுவந்த நேப்பிள்ஸ் நகரத்தின் வரலாறு இப்போது 7200 வருடங்கள் பழைமை மிக்கது என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுவிட்டது. இந்த அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட கப்பலின் மரப்பலகைகள் மிகவும் சிதைவடைந்து விட்டதனால் கப்பலை பாதுகாப்பாக மேலே எடுத்து நேப்பிள்ஸ் நூதனசாலையில் வைக்கும் சவால்மிக்க நுணுக்கமான பணிக்கு பல இலட்சம் யூரோக்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியைச் செய்வதற்கு ஜேர்மனைச் சேர்ந்த நிறுவனம் முன்வந்துள்ளது.



வீதியின் 24 அடி ஆழத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்



துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட சீப்பு.



அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கப்பல்களை பாதுகாப்பாக வெளியே எடுக்கும் பணி.



கடலுக்குள் துருத்திக் கொண்டிருக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த மேடையின் தூண்கள். இந்த மேடையில் தங்கும் விடுதி, உணவுச் சாலைகள் அமைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தில் இலங்கை - 21



# கோணேச்சரமும் இராமாயணமும்

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் சைவ சமய மரபின் ஒரு கேந்திர நிலையமாக கோணேச்சரம் விளங்கியிருந்தமை பற்றி, வட இந்தியாவில் குப்தர் காலத்தில் இயற்றப்பட்ட வாயுபுராணத்தில் இலங்கா(புரி) பற்றிப் கூறப்பட்டுள்ளது. இராமாயண மரபுகளுக்கும் இலங்கையின் சிவத் தலங்களுக்கும் இடையே ஓர் இணைப்பினை ஏற்படுத்தும் வாயுபுராணத்தின் குறிப்பின்படி ''இம்மாநகரத்தில் வலிமை மிக்க அரக்கர்கள் வாழ்கின்றார்கள்; அவர்கள் விரும்பியபடி விரும்பிய உருவங்களை எடுக்க வல்லவர்கள்; அவர்களின் இந்த வித்தைகள், தேவர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தின; மனிதர்களால் அடைய முடியாத இம்மாநகரத்தின் வனப்பினை, மனிதர்கள் தம் வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது; இத்தீவின் கிழக்குக்கரையில் 'கோகர்ணம்' என்னும் திருப் பெயரையுடைய சிவாலயம் ஒன்று உள்ளது'' எனக் கூறப்பட்டுள்ளது.

கோணேச்சர ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. இராவணன், இராமன் ஆகியோர் கோணேச்சர ஆலயத்தின் தோற்றத்துடன் தொடர்புடையவர்களாக புராணங்கள் காட்டுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் சமயக் குரவர் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் கோணேச்சரத்தின் மீது தேவாரப் பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் கோணாமலையில் சிவத்தலம் அமைந்திருப்பதாகவும், அதன் அருகில் சமுத்திர அலைகள் அடித்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்புகள் உள்ளன. இராவணனே கோணேச்சரம் கோயிலைக் கட்டவித்ததாக மரபு வழிச் செய்தி கூறுகின்றது.

தட்சிண கைலாசபுராணம் ஆறாம் அத்தியாயத்தில் இராவணன் கோணேச்சரத்தை நிர்மாணித்த வரலாறு தொடர்பாக விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கந்தமாதனம் என்னுமிடத்தைச் சேர்ந்த வச்சிரவாகுவிற்கும் அரக்கி ராத்திரிஹரிக்கும் பிறந்தவன் இராவணன். இவன் தந்தை வச்சிராகுவைக் கைலாசத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு சிவபிரானை வேண்டி இலங்கை அரசையும் அளவற்ற ஆற்றலையும் இராவணன் பெற்றான். வரங்களைப் பெற்றுக் கொண்ட இராவணன், தன்னுடைய சுற்றத்தாருடனும் ஆட்களுடனும் இலங்கை சென்று தனது ஆதிபத்தியத்தை அங்கு நிறுவினான்.


இராவணனுடைய தாய் சிவனை வழிபடுபவள். அதனால் இராவணன் கைலாசத்திலிருந்து இலிங்கத்தைக் கொண்டு வரத் தீர்மானித்தான். சிவபெருமான் இராவணனிடம் வழங்கிய இலிங்கம் இலங்கையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதனை பிரதிஷ்டை செய்தவர் பிராமண வடிவம் எடுத்து வந்த விஷ்ணு ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை செய்யப்பட்ட இடம் 'கோகர்ணம்' என்னும் பெயரைப் பெற்றது. கைலாசத்திற்கு சமமான புனிதத்தை உடையதாய் 'கோகர்ணம்' விளங்கியமையினால் அது 'தட்சிண கைலாசம்' என அழைக்கப்படலாயிற்று.

ஒரு முறை இராவணன், தட்சிண கைலாசத்தை பூமியிலிருந்து பெயர்த்தெடுக்க முயன்றபோது சிவபெருமானால் அவன் சமுத்திரத்தினுள் வீசப்பட்டான். அது அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை. நீண்ட காலத்தின் பின் இராவணன் மூர்ச்சை தெளிந்த நிலையில் புனித மலைக் குன்றுக்கு மீண்டு சிவபிரானை வணங்கி மன்னிப்புக்கோரி நின்றான். தனது இரு கண்களையும் அகற்றி, அவற்றை இறைவனுக்கு நிவேதனம் செய்தான். தனது தலைகளில் ஒன்றை அரிந்து, அதை யாழாக மாற்றினான். யாழை மீட்டிக் கொண்டு சாமவேதகானம் பாடினான். இராவணனின் பக்தியினாலும், இசையின் இனிமையினாலும் நெகிழ்ந்த சிவபெருமான், அவன் முன் தோன்றி, அவன் இழந்த தலையையும் இரண்டு கண்களையும் மீளளித்து இலிங்கம் ஒன்றையும் வழங்கி அருள் புரிந்தார். அதேவேளை விஷ்ணு பிராமண வடிவில் மீண்டும் இராவணன் முன் தோன்றி இலங்கையில் இராவணனின் தாயார் ராத்திரிஹரி துயர் தாங்க முடியாமல் உயிர் நீத்தார் என்னும் செய்தியை இராவணனுக்கு அறிவித்தார். இராவணன் தாயாரின் அபரக் கிரியைகளை அப்பிராமணனைக் கொண்டு அந்தப் புனிதக் குன்றில் செய்வித்தான்.





கோணேஸ்வர ஆலயத் தலபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கோகர்ண ஆலயங்கள் இராமனால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. கோகர்ணம் புனித இடத்தில் இராமன் ஆற்றிய கருமங்கள், நூலின் சில பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இராவணனின் தம்பியான விபீஷணன் இலங்கை வேந்தனாக இராமனால் முடிசூடப் பெற்றான். இராமனும் விபீஷணனும் கோகர்ணம் சென்று வழிபாடு நிகழ்த்தினர். சிவன், பார்வதி, துர்க்கை ஆகியோருக்கு கோவில்கள் அமைப்பதற்கான பணிகளை இராமபிரான் தொடக்கி வைத்தார். வைகாசி மாத, வளர்பிறைக் காலத்து, முதல் திங்கட்கிழமையன்று கோவில் திருப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கோவில் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கான விக்கிரகங்கள் வசிட்டரால் வடிவமைக்கப்பட்டன. இங்குள்ள கோவில் சுவரில், இராவணனின் முன் சிவபெருமான் தோன்றும் அரிய அருட்காட்சி அற்புதமான ஓவியமாக தீட்டப்பட்டிருந்தது.

(உசாத்துணை : அகில இலங்கை கம்பன் கழக வெளியீடு - 2006, ஈழத்தில் கம்பன் எனும் கட்டுரைத் தொகுப்பில் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய 'இராமாயணமும் இலங்கையின் இந்து மரபுகளும்')

- மிருணாளினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் வரலாற்றுச் சித்த மருத்துவம்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### தமிழ் மருத்துவம் பனை ஓலையில்

'சித்த மருத்துவம்' என்று சொல்லப்படும் 'தமிழ் மருத்துவம்' நோய்களைக் குணமாக்கும் முறைகளைப் பரிபாஷையில் செய்யுள் வடிவத்தில் மனப்பாடம் செய்வதற்காக எழுதப்பட்டுப் பிறகு செவி வழியாகக் கூறப்பட்டு வந்தது. அதன் பிறகு வழக்கில் இருந்த அறிவியல் கருத்துக்களை ஓலைச் சுவடிகளில் தமிழர்கள் பதிவு செய்துள்ளனர். என்றாலும் அவையுள்ள மருத்துவ ஏடுகளை ஒட்டு மொத்தமாகத் தற்பொழுது காண்பது முடியாத செயல்.

உலகில் மற்ற நாடுகளை விடத் தமிழ் நாட்டில் பனைமரம் மிகுதியாகையால் பழங்காலத் தமிழர்கள் பனையோலைகளில் அதிக அளவில் எழுதி அவற்றைப் பதித்து வந்தனர். ஓலைச் சுவடிகளில் எழுதும் மரபு வளர்ந்த பின்னரே கல்வெட்டுகள் அதிக அளவில் வெட்டப்படக் காரணமாயிற்று. ஏனெனில் ஓலையில் எழுதியதைப் பார்த்துத்தான் கல்லில் செதுக்கினர். தமிழகத்தில் கிடைத்த சுவடிகளில் மருத்துவச் செய்திகள் பாடல் வடிவிலேயே இடம் பெற்றுள்ளன. தமிழில் மருத்துவ நூல் எழுதுமுறை வரலாற்றை ஓலைச் சுவடிகளிலிருந்தே தொடங்க வேண்டும்.

ஓலைச் சுவடிகள் அதிக காலம் இருப்பதில்லை. விரைவில் பூச்சி அரித்து விடும். ஆகையால் அக்காலப் புலவர்கள் ஓலைச் சுவடிகளில் எழுதும் முன் அவற்றை மருந்து கலந்து நீரில் கொதிக்கச் செய்த பிறகே ஓலையில் எழுதத் தொடங்கினர். ஆண்டுக்கு ஒரு முறை ஓலைச்சுவடிகளை எடுத்துக் கிருமி நாசினியான மஞ்சள் பூசி பாதுகாத்து வந்தனர். இப்படிப் பாதுகாக்கப்பட்ட ஓலைச் சுவடிகள் சுமார் ஐநூறு ஆண்டுகள் வரை அழியாமல் இருந்தன. ஓலைச் சுவடிகள் அழிந்தும் உள்ளன. இப்படி அழிந்த ஓலைச்சுவடிகளைக் கண்ட தமிழ்ப் பற்றுள்ள அரசர்கள் பலர், புலவர்களைக் குழுக்களாக அமைத்து அவற்றை மீண்டும் புது ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாத்தனர். இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி என்னவெனில், ஓலைச் சுவடிகளை 'ஆடிப்பதினெட்டாம் பெருக்கு' என்ற குறிப்பிட்ட நாளில் ஆற்றில் போடுவதைத் தமிழ் நாட்டில் வழக்கமாக கொண்டிருந்தனர். இதன் காரணமானது பழைய சிதிலமான சுவடிகளைப் புதிதாகப் படியெடுத்துக் கொண்டு பழையனவற்றைக் குப்பையிலே அல்லது அடுப்பிலே போடுவது சுவடிகளை அவமதிப்பதாகும் என்ற எண்ணத்தில் ஆற்றில் வெள்ளம் வரும் நாளான ஆடி 18 ஆம் நாளில் குளிர்ந்த ஆற்று நீரில் சுவடிகளைப் போட்டனர். ஆனால் இதன் காரணமறியாத நம் தமிழ் மக்கள் நல்ல சுவடிகளையும் படியெடுக்காமலேயே ஆற்றில் போட்டுக் காணாமல் செய்தனர்.



### சித்த மருத்துவ ஓலைச் சுவடி

உலகம் முழுவதிலும் உள்ள நூலகங்களில் ஓலைச் சுவடிகளில் எண்ணிக்கை சுமார் 65,000 ஆகும். இவற்றில் மருத்துவ ஓலைச் சுவடிகள் 60% இருக்கும் என்ற கணக்கீடு குறிப்பிடப்படுகின்றது. 1924 ஆம் ஆண்டு அக்கால அரசாங்கத்திற்கு இந்திய முறை மருத்துவங்களின் முன்னேற்றத்திற்காக 'உஸ்மான்' என்ற மருத்துவரின் தலைமையில் கீழ் எழுதப்பட்ட குழு சமர்ப் பித்த அறிக்கையில் கண்டபடி அகத்தியர் முதல் யூகி முனிவர் ஈறாக உள்ள சித்தர்களின் பெயர்களில் வெளிவந்திருந்த நூல்களின் எண்ணிக்கை 168 ஆகும். சித்தர்கள் பெயர்களைத் தாங்கி நூல்களாக வெளிவராமல் ஓலைச் சுவடியாகவே இருந்தவற்றின் எண்ணிக்கை 532 ஆகும்.

### ஆயுர்வேத ஓலைச் சுவடிகள்

இதுபோல் ஆயுர்வேத முறையில் மக்களுக்குரிய மருத்துவச் சுவடிகளில் இரசவாத முறைகளும், தைல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வகைகளும் கிடைக்கின்றன. மிருகத்திற்கான மருத்துவச் சுவடிகளில் மிருகங்களின் நோய்களுக்கான அறிகுறிகள், அவற்றை நீக்குவதற்கான பச்சிலைகள், மருந்துப் பொருட்கள் அவற்றின் அளவு முறைகள் கூறப்பட்டுள்ளன. நோயுள்ள விலங்குகளை அறியும் பொருட்டு வண்ண ஓவியமாகத் தீட்டப்பெற்ற உரிய குறிப்புகளுடன் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன. இவை இன்றைய புத்தகங்களில் உள்ள கட்டுரைக்கேற்ற புகைப்படங்கள் வெளிவருவதை ஒத்த நிலையில் தமிழரின் கை வண்ணம் உரிய மருத்துவத்தை விளக்கப் படத்துடன் அளித்திருப்பது பெரும் வியப்பைத் தருவதாக உள்ளது.

சித்தர்கள் மருத்துவ நூல், புவி நூல், கணித நூல், மந்திர நூல், யோக நூல், சோதிட நூல் எனப் பல தனி நூல்கள் எழுதியுள்ளதைப் போன்று சமுதாய நூல் எனத் தனி நூல் எழுத வில்லை. எனினும் எல்லா சித்தர் நூல்களிலும் சமுதாயம் செம்மைப்பட வேண்டும் என்ற நோக்கம் பிரதிபலிப்பதை காணலாம்.



திருமூலர்
திருவாடுதுறை

சமுதாயத்தில் காணப்படும் பயனற்ற சாதி, சாத்திரம், சடங்கு, சமயம் போன்ற பாகுபாடுகளை அஞ்சாமல் வெறுத்தவர்கள் சித்தர்கள். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரது அரிய கொள்கையின் உண்மையை அறிந்தவர்கள். சாதி - சாதிக்குள் சாதி எனத் தம்மைத் தாமே பகுத்து வகைமையையும் பிரிவினையையும் வளர்த்துக் கொண்ட காலத்தில் துணிந்து அவைகளைச் சாடிய துணிவு குறிப்பிடத்தக்கது. சித்தர்கள் ஞானக் கோவை என்னும் நூலில் ஆசிரியர்

*''சாதி வேதந்தனைக்குறித்துத் தயங்கி மயங்கித் தளராதே*
*சாதியாவ தெவரறிவார் கருவவுடலு மென்றாச்சே''*


*''சாதிகுலமில்லை*
*சற்குருவ றிந்தால்''* எனச் சாடுகிறார்.

*''சாதி பேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம்*
*தானென்றோருவுடன் பேதமுண்டோ''*
எனக் கொங்கணர் கூறுகிறார்.

*''சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்''*
எனப் பாம்பாட்டிச் சித்தர் உரைக்கிறார்.

*'சாதி பேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே'*
என சிவவாக்கியர் சொல்கிறார்.

*''ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே*
*சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்ப தெக்காலம்''*



வான்மீகர்
எட்டிக்குடி

சாதிப் பிரிவினையை மிகுதிப்படுத்துவது சாத்திரமும் சடங்கும் ஆகும். சாதியினால் தீமையேயன்றி அணுவளவும் நன்மை இல்லை என்பது போலச் சாத்திரத்தாலும் சடங்காலும் நன்மை இல்லை என்பது சித்தர்களின் கருத்து. 'கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்கிறார் இராமலிங்க சுவாமிகள். சித்தர்கள் தங்களது மருத்துவ நூல்களிலேயே சமுதாயத்திற்கும் மக்களுக்கும் ஏற்ற கருத்துக்களைக் கூறியதைக் கவனித்தோம். அவர்கள் செய்த மற்றுமொரு தொண்டு கடவுள் பற்றிய கொள்கையை விளக்கியது. ஆலயங்களில் மட்டும் இறைவன் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் கடவுள் பற்றிய அரிய கொள்கையை உலகுக்கு உணர்த்தினார்கள்.

''உங்கள் தெய்வம் எங்கள் தெய்வம் என்று கருதிக் கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளவர்களே! தெய்வம் எங்கும் உண்டு'' எனத் திருவள்ளுவர் ஞான வெட்டியான் 1500 நூல் விளங்குகிறது. இதனையே,

*''உங்கள் தெய்வ முண்டெனவும் வேறு செய்து*
*அங்கங்கள் வேறுளதா யாகமங்களுற் பவித்தார்*
*பங்கமதாய் வேறு செய்யும் பாதகரே யங்குமிங்கும்*
*எங்கெங்குமாய் நிறைந்த ஈசனென்றறிகிலீரே''*
என்று கூறுகிறது.



சட்டைநாதர்
திருவரங்கம்

ஆலயம் பற்றிக் கூறுகையில் சிவவாக்கியார் தனது சித்தர் ஞானக் கோவை என்னும் நூலில் ''கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே'' எனவும், திருமூலர் ''உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்புஆலயம்'' எனவும் கூறியுள்ளனர். அன்றி ''மனமது செம்மையானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் செபிக்க வேண்டாம்'' எனவும் கூறி நல்லொழுக்கத்தை நிலை நிறுத்த வேண்டுகிறார். இவ்வாறு சித்தர்கள் தங்களது மருத்துவ நூல்களில் மருத்துவத்தை மட்டுமின்றி சமுதாய சீர்த்திருத்தக் கருத்துக்களையும் கூறி மனம், மொழி, மெய் இவற்றின் ஒழுக்கத்தையும் இதனால் நோயின்றி வாழவும், நோய் தோன்றும் காலத்தில் அதனை பகுக்கும் வகைகளையும் அதற்கான மருத்துவத்தில் மருந்து பொருட்களின் தன்மை, இயல்புகளையும் விவரித்து பரிகார முறைகளைக் கூறி உள்ளனர்.

சமூக புரிந்துணர்வும் தனி மனித நலனுக்கு மிகவும் இன்றியமையாத ஓர் அம்சம் என்பதை உணர்ந்த வள்ளுவர் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' பற்றிக் குறிப்பிடுகிறார். பிறருக்கு இன்னா செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறு ஒழுகுவதன் மூலமே மற்றவரும் சுகமாக வாழலாம் என்பதை பின்வரும் குரல்கள் விளங்குகின்றன.


சுந்தரானந்தர்
மதுரை

*''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழன்*
*அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு''(201)*
*''பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு*
*உறைபதி என்னும் உலகு'' (1015)*

சமூகத்தின் பல்வேறு வகைப்பட்டோர் காணப்படுகின்றனர். இவர்களில் வலது குறைந்தோர், அவலட்சணமானோர், திருமணமாகாது தவிப்போர் சமூகத்தில் நடமாடும்போது இவர்களையும் மனித நேயத்தோடு நேசித்து உறவாட வேண்டியது மிக இன்றியமையாததாகும். 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என வரும் குறளில் (667) இக்கருத்தினை வள்ளுவர் வற்புறுத்துதல் சமூக நலன் கருதிய சிந்தனையாகும். மருத்துவத் துறையில் மட்டுமின்றிப் பொதுக் கல்விப் பாட நெறியிலும் பாலியற் கல்வியின் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. மக்கள் நலமாக வாழ்வதற்குரிய போதனைகளைக் கூறும் வள்ளுவர், முதலில் அறிநெறி பொருள் நெறி புகட்டி ஈற்றில் இன்பநெறி போதிக்கிறார். காமத்துப் பாலில் காதலன், காதலி, கணவன், மனைவி ஆகியோர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை மிக விரிவாக விளக்கியுள்ளார். மேலும் பொருட்பாலில் வரும் ''புணர்ச்சிபழகுதல் வேண்டாம்..'' (785) என்று கூறும் விடயங்களும் ஈண்டும் பொருந்துவனவாகும்.


இராமதேவர்
அழகர்மலை

வள்ளுவர் தம் நூலிலே இனியவை கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, தீவினை, அச்சம், வாய்மை, வெகுளாமை, உட்பகை, வரைவின் மகளிர் முதலிய அதிகாரங்களிலே கூறுகின்ற விடயங்களை உற்று அவதானிக்கும் போது அங்கு உடற்பிணி, உளப்பிணி சார்ந்த விடயங்களையே கூறியிருத்தலைக் கண்டு கொள்ளலாம்.

எனவே 'மருந்து' என்ற தனி அதிகாரத்தில் மட்டுமின்றி, ஏனைய அதிகாரங்களிலும் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்கள் பலவற்றிற்கும் தமிழ் மருத்துவ நூல்களிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களிற்கும் பெருமளவு ஒற்றுமை இருப்பது புலப்படுகின்றது. சித்த மருத்துவமானது தமிழ் மக்களின் அற வாழ்க்கையை எடுத்துக் கூற முற்பட்ட வள்ளுவரின் குரல்களிலும் மருத்துவக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமை இயல்பானதே. சங்கமருவிய காலத்தெழுந்த அறநூல்கள் பொதுவான அற ஒழுக்க நெறிகளைப் போதிப்பவனாக அமைய ஆசாரக்கோவை எனும் நூறு பாடல்களைக் கொண்ட பழந்தமிழ் நூல் நாளாந்த நடைமுறை ஒழுக்கத்தை ஓரளவு நிறைவு செய்கிறது. இந்நூல் கூறும் ஆசாரங்கள் மக்களை ஆரோக்கிய வழ்வுக்கு இட்டுச் செல்வதாகும்.


ஸ்ரீ கோரக்கர்

மக்கள் மத்தியில் இப்படிதான் வாழ் வேண்டும் என்று விதிமுறைகளை வகுத்துக் கூறும் போது அவை யதார்த்தமாக இருத்தல் வேண்டும். முக்கியமாக ஒழுக்கம் குன்றிய ஒரு சமூகத்தில் இவ்விதம் விதிமுறைகளை வகுத்துக் கூறும் போது அவை யதார்த்தமாக இருந்தால் தான் மக்கள் அவற்றை ஏற்று பின்பற்றி நடக்க முற்படுவர். அந்த வகையில் ஆசாரக்கோவையில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை நோக்குமிடத்து அவை யதார்த்தப் போக்கியைத் தழுவி எழுந்துள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. றுபாதுவாக ஒழுக்க நெறிகள் மட்டுமன்றி, மக்கள் தம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளும் இதில் கூறப்பட்டுள்ளது. எனவே இந்நூலில் அகத் தூய்மைக்கு மட்டுமன்றி புறத்தூய்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை சிறப்பாகக் காணப்படும். தனிமனித ஒழுக்கமும் , சமுதாய ஒழுக்கமும் ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் அத்திவாரமாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1,000,000/- ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு எவ்வளவு செலுத்த நீங்கள் விரும்புகிறீர்கள்?

- ☑ ஆண்டிற்கு ரூ.2000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.6/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.3000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.9/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.6000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.17/- ஐ விட குறைவு)

எமது **Pure Life Policy** மூலம்
**உங்களால் முடியும்**




நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய தருணம் இதுவே

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.

Call/Text: 0773 675 482
உடனடி அழைப்பு: 0112 552 277
தொலைபேசி: 0112 553 596 – 8
தொலைநகல்: 0112 590 495
இணையத்தளம்: www.liclanka.com

உங்களுக்கு மிகவும் வசதியான விலையில் உங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நைன் வெல்ஸ் கருக்கட்டல் வளநிலையம்



கர்ப்பகாலத்திலும் பிரசவத்திற்கு பின்னரும் தாயின் ஆரோக்கியத்தை பேணுவதிலும் கருக்கட்டலுக்கான சாத்தியக் கூறுகளையும் (Sub Fertility) அக்கருக்கட்டலுக்கான(IVF) சாத்தியக் கூறுகளையும் வழங்குவதன் மூலமும் தொடர்ச்சியாக இனப்பெருக்க காலத்தின் பின்னரும் எமது தொழில்நுட்பத்திறன்களி-னூடாக எல்லா வயதுடைய பெண்மணி-களையும் பராமரிக்க நைன் வெல்ஸ் ஆகிய நாங்கள் பொறுப்பாகவுள்ளோம்.



**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**4 520 999**

**நைன் வெல்ஸ் கெயார் தாய் சேய் வைத்தியசாலை**

55/1, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிடிய, கொழும்பு 05.

WWW.NineWellsCare.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.